Vol. III.] April, 1911 [No. 10

பொருளடக்கம்

இஹபரம்	... 345
முக்ய உபநிஷத்துக்கள்.–IX. சாந்தோக்ய உபநிஷத்து (3)	346
பாட்டினியல்பு	... 351
ஆரியர்களின் ஸங்கீதமுறை	... 354
மலைகளும் அவைகளின் வகுப்புகளும்	... 358
தேகதத்வ சாஸ்த்ரம்	... 360
கடவுளின் கருணையைக் கனவிலும் மறவாதே	... 362
பொன்	... 363
சூரியன் : அதன் தூரமும், பருமனும்	... 365
ராஜம் அய்யர் அபிப்பிராயங்களும் குறிப்புகளும் VIII. ஆத்ம ஆராய்ச்சி	... 368
ஷேக்ஸ்பியரது பிறப்பு, வளர்ப்பு, கவிமாண்பு	... 372
மாணவர் பக்கம்	... 379
சிறுவர்களுக்கான பக்கங்கள்	... 382
ஸ்திரீகளுக்கான பக்கங்கள்	... 383
விசேஷ வர்த்தமானங்கள்	... 384

[காபிரைட்]

... அனுமதியின்றி ஒருவரும் பிரசுரிக்கக்கூடாது.

ஆர்யமத உபாக்யானம்

நான்காம் பதிப்பு

12 அழகிய சித்திரப்படங்களுள்ளது

ஓர் சிறந்த நீதிநூல்—**54**-இனிய கதைகள் கொண்டது. எளிய நடையில் எழுதப்பட்டது. இருபாலார்க்கும் மிகவும் பயன்படக்கூடியது. இப்பதிப்பில் அநேக சீர்திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளது.

இஃது ரிடையர்டு வக்கீல் ம-ா-ா-ஸ்ரீ திருநெல்வேலி ஏ. கிருஷ்ணஸ்வாமி அய்யரவர்கள் செய்தது. சென்னை அட்வோகேட் ஜனரல் ம-ா-ா-ஸ்ரீ கனம் பி. எஸ். சிவஸ்வாமி அய்யர் பீ.ஏ., பி.எல்., ஸி. ஐ. இ., அவர்கள் எழுதிய சிறந்த முகவுரையுடன் கூடியது. பள்ளிக்கூடச் சிறுவர்களுக்கு மிகவும் பயன் தரத்தக்கது. அநேகம் பாடசாலைகளில் ஏற்கெனவே பாடப்புத்தகமாக வைத்து நடத்தப்பட்டு வருவது.

விலை அணா 4

இயற்கை அற்புதங்கள்

WONDERS IN NATURE

மயிலாப்பூர், பி. எஸ். ஹைஸ்கூல் முதல் உதவி போதகரான
ஆ. ஸீ. கஸ்தூரிரங்கய்யர், பி.ஏ., எல்.டி., அவர்கள் செய்தது.

ரிடையர்டு ஸ்கூல் இன்ஸ்பெக்டர் ம-ா-ா-ஸ்ரீ, ராவ் பஹதூர் L. C. வில்லியம்ஸ் பிள்ளை, B. A., அவர்கள் எழுதிய முகவுரையுடன் கூடியது.

இதிலடங்கிய விஷயங்கள்

1. மழைக்கால்கள்
2. எரிமலைகள்
3. பூகம்பம்
4. வெந்நீர் ஊற்றுகள்
5. கானல் நீரும் அதன் ரூபாந்தரங்களும்
6. வால் நக்ஷத்ரங்கள்
7. எரி நக்ஷத்ரங்களும், பொறி நக்ஷத்ரங்களும்
8. வானவில்
9. நிழலும் கிரகணங்களும்
10. ஹாலி வால்நக்ஷத்ரம்
11. மொழிபெயர்ப்பு விளக்கம்

இப்புத்தகத்தில் அநேக சித்ரப்படங்கள் ஆங்காங்கு அழகாய் அச்சிட்டுச்சேர்க்கப்பட்டிருக்கின்றன. நேர்த்தியாக பைண்டு செய்யப்பட்டிருக்கிறது.

விலை அணா 8

திருமயிலைச் சிறப்பு

இதிலடங்கிய விஷயங்கள்

1. அறுபத்துமூவர் உத்ஸவம்
2. பார்வதீதேவி மயிலுருவம் நீங்கியது
3. வாயிலாநாயனார் சரித்ரம்
4. திருவள்ளுவர் சரித்ரம்
5. பேயாழ்வார் சரித்ரம்

ஸ்ரீ கபாலீசுவரர் கோவில் கோபுரப்படமும் அறுபத்து மூவர்படமும் ஆர்ட்பேபரில் அச்சிட்டுச் சேர்க்கப்பட்டுள்ளது.

விலை அணா 2.

ஜனரல் ஸப்ளைஸ் கம்பெனி, மயிலாப்பூர், மதராஸ்

417

THE "VIVEKA BODHINI"

An Illustrated Popular Tamil Monthly : Has a large list of able contributors

MAINLY DEVOTED TO

Science, Philosophy, Morality, Literature and Art,

History, Biography and Fiction, Agriculture, Industry, Commerce and Economics.

THE ONLY JOURNAL OF ITS KIND IN INDIA,

Accuracy and originality form its speciality : Articles penned by the best of intellects

Vol. III **APRIL 1911** **No. 10**

PRINCIPAL CONTENTS

PAGES

Here and Here after 345

The Principal Upanishads : IX. The Chandogya Upanishad 346

The Nature of Poetry : by M. R. Ry. Pandit R. S. Vedachelam Pillai Avl., Tamil Pandit, Christian College, Madras. 351

Science of Aryan Music : by M. R. Ry. P. S. Sundram Aiyar Avl., B.A. L.T., ... 354

Rocks and their classification : by M. R. Ry. M. R. Subramania Aiyer Avl. B. A. ... 358

Physiology: by M. R. Ry. K. Narayana Aiyar Avl., M.B. and C.M. Assistant Surgeon, ... 360

Never forget God's grace : by M. R. Ry. S. Ramaswamy Aiyer Avl., B.A. L.T. ... 362

Gold : by Pandit S. Velayutha Mudaliar Avl., ... 363

Sun : its size and Distance : by M. R. Ry. S. Balakrishna Aiyer Avl., B.A. L.T., of the Teachers College Saidapet 365

Rajam Iyer's opinions and Reviews : by M. R. Ry. A. S. Kasturiranga Aiyer Avl., B.A., L.T., 368

Shakespeare a life sketch an appreciation : by T. B. Krishnaswami Aiyer, M.A. ... 372

Student's Pages * 379

Children's Pages 382

Ladies' Pages 383

General News 384

* *Special pages are set apart* for the benefit of the students preparing for the Examinations with a view to help them in their Vernacular Translation and Composition.

All literary contributions, books for review, &c., should be addressed to the Editor, and all communications and remittances to the Manager, the "Viveka Bodhini," Mylapore, Madras.

The Hindu :—During the three years of its existence this Tamil Magazine *has grown very much popular* among the Tamil public. It has *a large number of well-known contributors and its articles are always interesting. There are a number of articles dealing with a variety of subjects and there* are also a few illustrations. *Both on account of its chaste and simple Tamil and the choice of subjects, the Magazine may be advantageously introduced into all Lower Secondary and High Schools.*

Among Contributors to the 'Viveka Bodhini'

Hon'ble Dewan Bahadur R. Raghunadha Rao Avergal, C.S.I.;
M R. Ry. Mahamahopadhyaya Pundit, Sri V. Swaminatha Aiyar Avergal ;
M. R. Ry. Mahamahopadhyaya Pundit, Sri Chandra Sekhara Sastrigal Avergal ;
Hon'ble Dewan Bahadur L. A. Govindaraghava Aiyar Avergal, B.A., B.L. ;

Messrs. T. Kanakasundaram Pillai Avl, B.A. ; Mahesa Kumara Sarma Avergal. ; Anbil S. Venkatachariar Avergal. ; T. Chelvakesavaroya Mudaliyar Avergal, M.A. ; N. Balarama Aiyar Avergal. ; S. Radhakrishna Aiyar Avergal, B.A. ; A. Madhaviah Avergal, B.A. ; T. A. Gopinatha Rao Avergal, M.A. ; V. S. Chengalvaroya Pillai Avergal, M.A. ; P. V. Shama Rao Avergal, M.A. ; S. Kuppuswami Sastrigal Avergal, M.A. ; C. P. Venkatarama Aiyar Avergal, M.A. ; T. B. Krishnaswami, M. A. ; Hon'ble Mr. S. R.M. M. Ramasami Chettiar Avergal ; T. S. Subramania Aiyar Avergal, M.A., L.T. ; V. R. Duraisawmi Sastriar Avergal, M.A., L.T. ; A. Panchapagesa AiyarAvergal, M.A., L.T. ; T. S. B. Aiyar, Avl. B.A., L.T. ; S. Appasami Aiyar Avergal, M.A., L.T. ; A. S. Kasturiranga Aiyar Avergal, B.A., L.T. ; S. V. Rangaswami Aiyangar, Avl. B. A. ; S. Krishnamachari, B. A. ;K. S. Venkatrama Sastri, B. A. ; C. S. Sundaram Aiyar Avergal, B.A., L.T. ; V. Seshagiri Sastriar Avergal. ; Rao Bahadur J. Dharma Ranga Raju Garu. ; P. Sambanda Mudaliyar Avergal, B.A.,B.L. ; R. Narasimha Aiyengar Avergal, M.A. B.L. P. Krishnaswami Sastri Avergal, B.A., B.L. ; T. S. Narayana Sastriar Avergal, B.A., B.L. ; S. E. Sankara Aiyar Avergal, B.A., B.L. ; R. S. Narayanasami Aiyar Avergal, B.A., B. L. A. Sankaralingam Pillai, Avl. B.A. ; N.R.K. Tatachariar Avergal, B.A., B.L. ; A. K. Sundaram Aiyar Avergal, B.A., B.L. ; J.R. Ranga Raju Avergal. ; S. V. Kallapiran Pillai Avergal, B. A. ; K. Venkatrama Aiyar Avergal, B. A. ; V. Subramania Aiyar Avergal, B.A. ; R. P. Kulandaiswami Pillai Avergal, B.A., L.T. ; T. R. Ramanatha Aiyar Avergal, B.A., L.T. ; G. S. Krishnaswami Aiyar Avergal, B. A. ; R. Satyamurti, B. A. ; S. R. Ramasami Pillai Avergal, B. A. ; P. Venktrama Sastriar Avergal, Tamil Pundit. ; V. Subramania Aiyar Avergal, Tamil Pundit; S. Chidambaram Aiyar Avergal,B.A. ; P. N. Srinivasachariar Avergal, B.A. ; K. Narayana Aiyar Avergal, M.B. & C.M. ; Pundit Sri Gopalakrishna Aiyar Avergal. : J. V. Subramania Aiyar Avergal, B.A. ; V. K. Veeraraghavachariar Avergal, B.A. : C. Ramaswami Aiyengar Avergal, B.A. ; V. G. Subbier Avergal, B.A., L.T. ; G. Sundaresa Aiyar Avergal, B.A., L.T. ; S. Krishnaswami Aiyar Avergal. B.A., L. T. ; C. Sivagnanam Pillai Avergal. ; Nagai C. Gopalakrishnan ; G. Tatacharyar Avergal, B.A. ; C. Sundaram Aiyar Avergal, B.A. ; M. R. Subramania Aiyar, Avl, B.A. ; T. Balasubramania Mudaliyar Avergal, B.A. ; N. Vanamamalai Pillai Avergal. ; T. S. Venkataramana Aiyar Avergal. ; M. V. Minakshisundara Mudaliyar Avergal, B.A. ; S. T. S. Moorthi Mudaliyar Avergal. ; V. S. Regunatha Row Avergal, B.A., L.T., S. Balakrishna Aiyar, B.A., L.T.

Note.—There are several other gentlemen and *a number of ladies* who contribute articles to the Journal, whose names we withhold publishing at their request.

PRESS OPINIONS.

The "Madras Mail":—
This interesting Tamil Monthly contains as usual a number of useful and well-written articles on Nature Education, Literature, Agriculture and Hygiene and judging from the standard which the publishers have set before themselves, this little monthly is likely to prove more and more popular and useful. The special pages for children and for the enlightenment of Indian women continue to be interesting. The Journal deserves more encouragement and will be found useful for boys' and girls' schools.

The "Hindu."—The current number of this very useful and interesting Magazine is now before us and it gives us great pleasure to congratulate the publishers, the General Supplies Co., Mylapore, Madras, on the uniform standard of excellence they have been able to maintain and the wide variety and range of useful subjects dealt with in the several articles published. * *

The "South Indian Mail"—It is an excellent Tamil monthly Journal. It is for the interest of the vast bulk of our people only conversant with Tamil. Its object is to educate our people along all lines, which aim it will eminently accomplish. Every article is written in easy, elegant style. The special attraction of the Journal is, its ladies' and children's pages replete with didactics and short stories.—

The United India and Native States.—We feel it a pleasure to recommend it to our Tamil readers. The Editor has managed to get a number of able contributors, who, learned though they are, do not despise to write in a style easily understood. The articles will satisfy men and women of various tastes.

"African Chronicle"— * * * * Pages are set apart for stimulating knowledge among women and children. We note with pleasure that the contents are full of interesting and absorbing topics, and the style, like English Journals, is simple and majestic. Unlike some of the Vernacular Journals that are disfigured by sheer verbiage of Pundit's ebullition, it is refreshing to observe that the Viveka Bodhini, as its name indicates, instructs the Tamil-speaking people in a manner befitting a simple people. On the whole we congratulate the publishers for the up-to-date Tamil Journal they have given to their readers and we wish them every success.

மிகவும் சிறந்த தமிழ்ப் புத்தகங்கள்

THE
STORY OF KARMATURA
OR
The Struggle for Duty
AND
The Evolution of Knowledge.
A PHILOSOPHICAL NOVEL.
A mark of Reverence for Perfection
BY
V. VEMBU SASTRY.
Price: Annas 6.

AN
ELEMENTARY MANUAL
OF
MIDWIFERY
FOR THE USE OF
Indian Midwives in receipt of Scholarships from the Victoria Memorial Scholarship Fund
BY
C. P. LUKIS, M.B., F.R.C.S.,
Lieut.-Colonel, Indian Medical Service, Principal, Agra Medical School,
TRANSLATED INTO TAMIL
BY
R. MAHADEVA IYER, M.B. & C.M.,
Assistant Surgeon
AND
SUBRAMANIA AIYER,
Munshi.
SECOND EDITION
Price: One Rupee.

JEWEL MANIA
PARTS I and II
நகைப் பைத்தியம் (இரண்டுபாகமும்)
BY
S. RAMASWAMI AIYAR, B.A., B.L.,
District Munsiff of Parur, Travancore Territory
Price one Rupee.

மானவஸ் மர்ம சாஸ்திரம்
முதல் பாகம்
மனோவசிய சாஸ்திரம்
THE MYSTERIES OF MIND
Book I
MENTAL FASCINATION
BY
S. Samuel B. A.
விலை ரூபாய் 2.

திருமந்திரம்

மூவாயிர வருடஞ் சிவயோகமிருந்து ஒவ்வோராண்டிற்கு ஒவ்வோ ரருட்பாவாகத் திருமூலநாயனாரவர்களால் அருளிச்செய்யப்பட்டது. தனிபிரித்திருக்கிறது. அரும்பாக்கட்கு நக்ஷத்திரப்புள்ளி யிட்டிருக்கிறது. திருமூலநாயனார் கலர்படம் ஒன்று சேர்க்கப்பட்டிருக்கிறது. உயர்ந்த காகிதத்தில் (24 lbs Double Foolscap) அச்சிடப்பட்டிருக்கிறது. (F. Cap.) 59½-பாரம் அல்லது 476-பக்கங்கள் உடையது. கலிகோ பயிண்டு செய்யப்பட்டது.

விலை ரூபாய் **1 8 0**

அறுபத்துமூவர் சரிதங்களடங்கிய

பெரிய புராணம்

மூலமும், அரும்பதவுரையும், வசனமும்

இந்நிலவுலகத்தில் ஆன்ம நாயகனை யடையப் பலவிதநெறிகளிருப்பினும் அவைகளுள் சிறந்தது பத்திநெறியேயாகும். இதனைப்பற்றி விரிவாகக் கூறும் பதிநூல் பெரியபுராணம் ஒன்றே.

இப்பெரியபுராணத்தை உரையோடு 19 ரூபாய்க்கும், மூலமாத்திரம் 3-ரூபாய்க்கும் விற்கின்றமையால் எளியவர் எளிதில் பெற முடியவில்லை. ஆனது பற்றி இந்நூல், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரவர்கள் அச்சிட்ட பிரதிக்கிணங்கப் பரிசோதித்த மூலத்தோடு அரும்பதவுரையும், வசனமும் சேர்த்து உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் டிம்மி 109-பாரம் அல்லது 872-பக்கங்கள் கொண்ட புத்தகமாக அச்சிடப்பட்டிருக்கிறது. இடையிடையே தேவாரங்களுஞ் சேர்க்கப்பட்டுள்ளன. இளங்கல்வியுடைய சிறுமியர்களும் வாசித்து எளிதில் பத்திச் சுவையையுணர்ந்து களிப்பார்கள். இதுபோன்ற பிரதி இதுகாறும் வெளிவந்ததில்லை யென்பதை இதனை வாங்கி வாசிப்போர் உணர்வர். உயர்ந்த கலிகோ பயிண்டு செய்து தயாராயிருக்கிறது. சொற்ப காபிகள் விற்பனைக்கு இருக்கின்றமையால் வேண்டியவர்கள் ஆர்டர் சீக்கிரம் அனுப்பவேண்டியது.

விலை ரூ. **3 0 0**

ஜனரல் ஸப்ளைஸ் கம்பெனி, மயிலாப்பூர், மதராஸ்

A STOREHOUSE OF KNOWLEDGE

Up-to-date and Reliable

THE 1911 NELSON ENCYCLOPÆDIA

in 25 Handy Volumes at 12 annas each.

This 1911 NELSON ENCYCLOPÆDIA is based on the Harmsworth Encyclopædia and the Nelson "Loose-Leaf" Encyclopædia, but the amount of reading matter has been slightly increased. The best has been retained from both the older works, hundreds of new articles have been written, and everything has been revised and brought up-to-date within the last few months. Every group of articles has been carefully re-adjusted to bring them as a group more exactly into line with modern thought and practice.

While retaining all the popular features of the older books—the large number of entries, the concise explanations, the arrangement for easy reference—the 1911 NELSON ENCYCLOPÆDIA will represent in many ways a distinct advance in utility and convenience. It will be issued in *twenty-five fortnightly volumes*, handy in size and attractive in appearance.

The type is clear and legible and is arranged in two columns, and the binding neat and strong. Ilustrations and Diagrams elucidate the text where necessary, and numerous, full-page pictures add to the interest and value of the work.

The ENCYCLOPÆDIA itself will occupy twenty-three volumes, and an English DICTIONARY and an ATLAS have been added as Volumes 24 and 25, making the whole set a complete Reference Library for the Home.

While other Encyclopædias are only for *the rich few*, the Nelson's is *the Encyclopaedia for all.*

Price each Volume, annas 12 only.

(The whole set will cost only Rs. 18—12.)

The First Volume is expected about the end of April. The subsequent Volumes will be supplied separately at regular intervals as they are received.

Please Register your order immediately

V. KALYANARAM IYER & CO.,

BOOKSELLESRS & PUBLISHERS,

ESPLANADE, MADRAS

காதம்பரீ

வெகு பிரசித்தமான ஸம்ஸ்கிருத காதம்பரியின் தமிழ் மொழிபெயர்ப்பு

பண்டித எம். துரைசாமி ஐயங்கார் இயற்றியது.

பிரஸித்திபெற்ற ஸ்ரீ பட்டபாணன் என்னும் மகா கவி 1400 வருஷங்களுக்கு முன் ஸம்ஸ்கிருதத்தில் இயற்றிய இக்காவியத்தின் அருமை பெருமைகள் சிறிதும் குறைபடாவண்ணம் இனிய, எளிய தமிழ்நடையில் மொழி பெயர்க்கப்பட் டிருக்கின்றது.

அபிப்பிராயங்கள்

சுதேசமித்திரன்.—"இம்மொழி பெயர்ப்பு சுயமாயெழுதிய நூலைப்போலவே அழகாய் அமைந்திருக்கின்றது. வாக்கியங்களின் நடை இனிதாகவும் எளியதாகவும் ஏற்பட்டு, ஸம்ஸ்கிருத "காதம்பரீ" யின் சுவையை ஒத்திருக்கின்றது. இக்காலத்தில் நாவல்கள் அநேகம் வெளிவருகின்றன. ஆகிலும், நமது தேசத்தில் பல்லாயிரம் வருஷங்களுக்கு முன்னிருந்த கவிச்ரேஷ்டர்கள் வடமொழியில் இயற்றியிருக்கும் இத்தகைய நாவல்கள் வெகு அபூர்வமானவையானதால், இவை நமது தேசபாஷையில் வெளிவருவது அவசியம். பண்டைக் காலத்திலிருந்த பண்டிதர்கள் ஸம்ஸ்கிருதத்தில் எழுதிய வசனகாவியங்கள் வெகு குறைவு. அவைகளுள் 'காதம்பரீ' வெகு சிறந்ததென்று எவர் தான் அறியார்? ஸம்ஸ்கிருதத்திலிருந்து 'காதம்பரீ' யைத் தமிழில் மொழிபெயர்த்தது இதுவே முதல் தடவை.',

இந்து நேசன்.—இப்பொழுது எமதிடம் கிடைத்திருக்கும் தமிழ்மொழிபெயர்ப்பான இக்காதம்பரியானது சகலவிதத்திலும் ஸம்ஸ்கிருத காதம்பரிக்கு மிகவும் பொருந்தியதென்பதில் ஐயமில்லை. ஸம்ஸ்கிருத "காதம்பரீ"யைப் படிப்பவர் தமது மனதில் எவ்வித ரஸத்தை அனுபவிப்பாரோ அதே ரஸத்தை இத்தமிழ் மொழிபெயர்ப்பான "காதம்பரீ"யைப் படிப்பவரும் அநுபவிப்பரென்று நிச்சயமாய்க்கூறுவோம்......ஸம்ஸ்கிருத காதம்பரீயின் விஷயங்களையும், சுவையையும், அழகிய கதையின் வரலாற்றையும் அறிய விரும்பும் தமிழருக்கும், ஸம்ஸ்கிருதம் கற்கும்மாணுக்கருக்கும் இப்புத்தகம் மிக உபயோகமுள்ளது.

I-ம் பாகம் சுமார் 200 பக்கம்; விலை ரூபா 1.

(2-ம் பாகம் சீக்கிரம் வெளிவரும்)

வீ. கல்யாணராம ஐயர் அண்ட் கோ.

புக்ஸெல்லெர்ஸ், எஸ்ப்ளனேட், மெட்ராஸ்.

421

விவேகபோதினி

" எப்பொருள் எத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு "—— திருவள்ளுவர்

தொகுதி III } ஸாதாரணஸு பங்குனிமீ 1911-ஸு ஏப்பிரல்மீ { பகுதி 10

இஹபரம்

HERE AND HERE-AFTER

பாபம், புண்யம், மிச்ரகர்மங்களுக்கு ஏற்ப, ஜீவாத்மா, இஹத்தில் முறையே கீழான ஜன்மம் மேலான ஜன்மம் மனித ஜன்மம் ஆகிய இவைகளை அடைகின்றது என்பது சாஸ்திரங்கள் துணிபு.ஜீவாத்மா பரத்தில் (மரணத்திற்குப்பின்) அடையும் நிலைகளைக் கூறும் விதங்களுள் பின் வருவன முக்யமானவை.

(1). 'ஜீவாத்மா இஹத்தில் செய்யும் பாபங்களால் நரகில் மூழ்கி அங்கிருந்து பாபக்ஷயமாக வாகக்ரமமாக வெகு காலத்தில் மனித ஜன்மத்தை அடையும். அம்மாதிரியே புண்ய கர்மாக்களால் ஜீவாத்மா ஸ்வர்க்கம் அடைந்து புண்யபலன் தீர்ந்ததும் மனித ஜன்மத்தை அடையும்.' (சாந்திபர்வம்—அத். 104–சுலோ. 41–43 அனு.-அத்.–111-&-112-அசுவ.-அத்.-17-&-18-ஆகவே மரணத்திற்குப்பின்னர் ஜீவாத்மா தனது பாப புண்யத்திற்கேற்ப நரகஸ்வர்க்க வாஸங்கள் கொஞ்சகாலம் செய்து பின்னர் மனித ஜன்மத்தை அடையும் என்பதாயிற்று.

(2). 'கிராமத்திலிருப்பவர்கள், யஞ்ஞம், தர்மம் இவைகளைச் செய்து பொதுநன்மைக்கு உழைத்து இஹத்தில் ஸன்மார்க்க நெறியில் நடந்து பரத்தில் புகை, இரவு, கிருஷ்ணபக்ஷம், தக்ஷிணாயனம், பிதிர்லோகம், ஆகாசம், சந்திரன் என்ற பிதிர்யானமார்க்கமாகப்போய் கர்மபலன் தீர்ந்ததும் அங்கிருந்து நழுவி, வாயு, புகைப்பனி, மேகம், மழை, செடி கொடிகள், ஆகிய இவைகள் மூலமாகக் கர்மானுஸாரம் புருஷர்கள் தேஹத்துள் ஆகாரமாகப் புகுந்து பின்னர் தகுந்த ஜன்மம் பெறுவர்' (சாந்தோக்யம்-அத். 5–கண். 10-சுலோ-3-7.) இங்குப் புண்யகர்மாக்கள் செய்யும் புண்யாத்மாக்கள் ஸ்வர்க்கம் அடைந்து மனித ஜன்மத்திற்குத் திரும்பும் விதம் கூறப்பட்டது.

(3) 'ஸாதாரண பாமரர்கள் இவ்வாறு செல்லாது அடிக்கடி இறந்து பிறந்து, பிறந்திறந்து சுழன்று வருந்துவர்' (சாந்தோக்யம்—அத். 5—கண். 10—சுலோ. 8). ஆகவே ஓர் விதஜீவர்கள் இறந்தபின் லோகாந்தரவக்ஸம் இன்றி உடனே பிறக்கும் தன்ன்மையை உடையவர்கள் என்பதாயிற்று. இத்தகைய ஜீவர்களைப்பற்றியே, 'புல் தரையில் ஊர்ந்து செல்லும் ஓர் புழுமுன் உள்ள புல்லைப் பிடித்துக்கொண்டபின் தான் பின்னுள்ள புல்லை விடும்; அதுபோல மரணமடையும் ஜீவன் புதிய தேஹம் ஒன்றைப்பற்றிக் கொண்டு தான் பழைய தேஹத்தை விடும்'என்று கூறப்பட்டிருக்கிறது (பிரஹ உப:—அத்-4. பிரஹ்ம-4. பாகம்-4)

(4) உண்மையை உள்ளபடி உணர்ந்த ஞானி,' ஒளி, பகல், சுக்லபக்ஷம், உத்தராயணம், ஸூர்யன், சந்திரன், மின்னல், இவைகளின் வழியே போய் முடிவில் அமானுஷமான ஒருவனை ஸந்தித்து அவன் மூலமாக மோக்ஷத்தை அடைவதாகிய தேய்வயான மார்க்கத்தின் வழியே சென்று மறுபடி திரும்புவதே இல்லை.' (சாந்தோக்யம்—அத். 4—கண். 15—சுலோ. 5 ; அத். 5, கண். 10 சுலோ. 1, 2.) இவ்வாறு எவ்விதப் பந்தங்களிலிருந்தும் விடுபடுபவர்களே ஜீவன் முக்தர்கள். இந்நிலையை அடைய பரிபாகமாகி வருங்கால் ஜடபாதருக்கு ஏற்பட்டதுபோல ஜீவர்களுக்குத் தடைகள் ஏற்பட அவர்கள் தாழ்ந்த ஜன்மங்களை அடையலாம். ஆனால் இவர்களுக்கு அந்த ஜன்மத்தில்விட்ட குறை வந்து தொட்டுக்கொள்ள கூடியசீக்கிரத்தில் மனிதராகி எளிதில் மீளா நெறி சேர்வார்.

இவ்வாறு ஜீவாத்மாவினது பாகதி நான்குவிதமாகச் சாஸ்திரங்களில் கூறப்படுகின்றன. இவைகளிலிருந்து (1) பகுத்தறிவே இல்லாத பாமரர்கள் லோகந்தரங்கள் செல்லாது இப்பிரபஞ்சத்தில் மாறிமாறி பிறந்திறந்து உலகில் மொத்துண்டு பகுத்தறிவை அடைவர் (2) பகுத்தறிவு அடைந்தும் நன்னெறி நடக்கமாட்டாதவர் நரகம் சென்று கர்மபலனை அனுபவித்துத் தீர்த்துக் கிரமமாக மனித ஜன்மத்தை அடைவர். (3) பகுத்தறிவோடு அனுஷ்டானமும் ஏற்பட்டுக் காம்ய கர்மங்கள் செய்வோர் ஸ்வர்க்கம் பெற்றுக் கர்மபலனை அனுபவித்துத் தீர்த்து உடனே மனிதராவார். (4) இந்த ரஹஸ்யம் உணர்ந்து நிஷ்காமிகளாகக் கடமைகளைச் செய்யும் உண்மை ஞானிகள் முற்கூறிய பிறப்பிறப்பென்னும் சுழலிலிருந்து விடுபட்டு மீளாநெறி எய்துவர். இவர்கள் தான் 'இஹபரம் இரண்டினிலும் உயிரினுக்கு உயிராகி எங்கு நிறைகின்ற பொருளே;' ஆகின்றனர்,

விவேக போதினி

தொகுதி 3] ஸாதாரணஹூ பங்குனிமீ [பகுதி 10

முக்கிய உபநிஷத்துக்கள்

THE PRINCIPAL UPANISHADS

IX. சாங்தோக்ய உபநிஷத்து (3)

THE CHANDOGYA UPANISHAD.

அத்யாயம் 6.—அருணர் என்ற ரிஷிக்குச் **சுவேதகேது** என்ற ஒரு பேரப்பிள்ளை இருந்தான். அவனை நோக்கி அவன் தகப்பனார் பிரஹ்மசாரியாக இருந்து வேதம் கற்றுவரும்படி உத்தரவு செய்தார். அதன்படியே அவன் 12-வருஷம் குருகுலவாஸம் செய்துவிட்டு 24-வது வயதில் தன் வீடுவந்து சேர்ந்தான். வரும்பொழுது அவனிடம் இருந்த கர்வம் வித்யாமதம் முதலியவைகளை முகத்தின் குறிகளால் உணர்ந்து தகப்பனார் 'கேட்க முடியாததும், உணர முடியாததும், அறிய முடியாததுமான வஸ்துவை விளக்கும் ஞானமாகிய விஷயத்தைக் கற்றுணர்ந்தாயா ?' என்று கேட்டார்.

சுவேதகேது.—இந்த விஷயம் யாது ?

தகப்பனார்.—ஒரு உருண்டை களிமண்ணை அறிந்து விட்டால் அதனாலாகிய பாண்டம் முதலிய வஸ்துக்கள் எல்லாம் உணர்ந்ததாகும், தங்கக்கட்டி ஒன்றை உணர்ந்தக்கால் அதனாலாகிய ஆபரணங்களை எல்லாவற்றையும் உணர்ந்ததாகும், ஓர் கத்தரிக்கோலை உணர்ந்தால் இரும்பாலாகிய வஸ்துக்களை உணர்ந்ததாகும் ; அதுபோல அந்த வஸ்துவை உணர்ந்தால் அதன் ஸம்பந்தமாகக் கேவலம் நாம ரூபமாத்திரமாகவே இருக்கும் இப்பிரபஞ்சம் முழுவதையுமே உணர்ந்ததாகும். இத்தன்மையது நான் கூறிய விஷயம்.

சு.—ஒருவேளை என்குருவுக்கு இவ்விஷயம் தெரிந்திருக்காது. இல்லாவிடில் அவர் எனக்கு இதை உபதேசித்திருக்கமாட்டாரா? தாங்கள் தயவுசெய்து எனக்குச் சொல்லவேண்டும்.

த.—(1) ஆதியில் எல்லாம் இரண்டற்ற ஒன்றாகிய ஸத்தாகவே இருந்தது. சிலர் சூன்யமே ஆதியிலிருந்து; அதிலிருந்து ஸத்தும் அஸத்தும் வெளிவந்தன என்பர். ஸத் சூன்யத்திலிருந்து வந்ததென்பது யுக்திக்குப் பொருந்தாது. இந்த ஸத்தில்தான் பலவாகி வளரவேண்டும் என்ற இச்சையால் தேஜஸும்; அதில் உண்டான இச்சையால் அப்பும்; அதில் உண்டான இச்சையால் அன்னமும் முறையே உண்டாயின. இதற்கேற்பவே ஜீவஜந்துக்களும் அண்டஜம் (முட்டையிலிருந்து உண்டாவது) ஜீவஜம் (கர்ப்பப்பையில் உண்டாவது) உத்பிஜம் (பூமியைப் பிளந்துகொண்டு வேர்களிலிருந்து உண்டாவது) ஆகிய மூவகைப்படும். ஆதி ஸத் வஸ்துவானது தேஜஸ், அப்பு, அன்னம் இவைகளுள் பிரவேசித்துவிசித்ரநாம ரூபங்களோடு வெளியாகவேண்டும் என்றுஇச்சிக்க அவ்வாறே ஆயிற்று. இவைகள் ஒவ்வொன்றையும் மும்மூன்று அம்சங்களையும் உடையதாக மாற்றிற்று. தேஜஸ், சந்திரன், மின்னல் முதலிய ஸகல தேஜஸ்களிலும் சிவந்த பாகம் தேஜஸ் அம்சம் என்றும், வெளுத்த பாகம் அப்பின் அம்சம் என்றும், கருத்த பாகம் அன்னத்தின் அம்சம் என்றும் கண்டு பழமையான கிருஹஸ்தர்கள் நாமரூபமாக இருக்கும் எல்லாவற்றையும் முற்கூறிய மூன்று தேவதைகளின் ரூபபேதமே ஒழிய வேறில்லை என்று கண்டு எல்லாவற்றையும் உணர்ந்து திருப்தி, அடைந்தார்கள்.

அண்டத்திலுள்ளது போலப் பிண்டத்திலும். உண்ணும் ஆஹாரம் மூன்று கூறாகப் பிரிய ஸ்தூலமான பாகம் மலமாயும், மத்யபாகம் மாம்ஸமாயும், ஸூக்ஷ்ம பாகம் மனமாயும் மாறுகிறது. குடிக்கும் தண்ணீரும் இவ்வாறே பிரிய ஸ்தூல பாகம் மூத்ரமாயும், மத்ய பாகம் ரக்தமாயும், ஸூக்ஷ்ம பாகம் பிராணனாயும் மாறுகிறது தேஜஸ் (உஷ்ணம் உண்டாக்கும் வஸ்துக்கள்)

423

உட்கொள்ளப் படுங்கால் முற்கூறியது போலப் பிரிய அதன் ஸ்தூலபாகம் எலும்பாயும், மத்யம பாகம் அதனுள்ளிருக்கும் மூளையாயும், ஸூக்ஷ்ம பாகம் வாக்காயும் மாறுகின்றது. தயிர் கடையுங்கால் அதன் ஸூக்ஷ்ம பாகம் எவ்வாறு மேலே மிதந்து வெண்ணெயாகிறதோ அதுபோல உண்ணும் ஆகாரம் குடிக்கும் தண்ணீர் உட்கொள்ளும் உஷ்ணம் உண்டாக்கும் வஸ்துக்கள் ஆகிய இவைகளின் ஸூக்ஷ்ம பாகங்கள் சேர்ந்து முறையே மனம், பிராணன், வாக்கு ஆகத் தோன்றுகின்றன.

[இதன் பின்னர் சுவேத கேதுவை 15 நாள் தீர்த்தபானமாத்திரம் செய்துகொண்டிருக்கும்படி செய்து ஞாபக சக்தி முதலியன ஒடுங்கி நிற்பதை அனுபவித்தறியும்படி செய்து முற்கூறிய உண்மையை நன்கு விளங்கிப் பின்னர் ஆஹாரம் உட்கொள்ளும்படி செய்து ஞாபகசக்தி விருத்தியானதையும் காட்டினார்.]

தூங்குங்கால் ஒவ்வொருவனும் தன்னுள்ளிருக்கும் ஸத்தை நெருங்கி அதனோடு லயித்து நிற்கிறான். ஓரிடத்தில் கட்டப்பட்டிருக்கும்கயிற்றின் மறுநுனியில் கட்டப்பட்ட பறவை எங்கு ஓடிப் பறந்தபோதிலும் நிலை பெறாது முடிவில் கயிறுகட்டியிருக்கும்இடத்தில்வந்து தங்குங்கால் எவ்வாறு நிலைபெறுமோ, அதுபோல எங்கும் ஓடி ஆடித்திரிந்து மொத்துண்ட மனம் அதன் மூலமாகிய பிராணனில் (பரம்பொருளில்) அடங்கி நிலைபெறும். மரணகாலத்தில் வாக்குமனத்திலும்; மனம், பிராணனிலும்; பிராணன் தேஜஸிலும் முறையே அடங்க இதுவும் முடிவில் பரம்பொருளில் அடங்கும். ஆகவே அண்ட பிண்ட சராசரங்கள் எல்லாம் ஸத் வஸ்துவிலிருந்து பிறந்து அதில் நிலைத்து அதிலேயேஅடங்குகின்றன.இவ்வாறு ஸகலத்திற்கும் ஸூக்ஷ்மஸாரமாக விளங்கும்வஸ்து எதுவோ அதுவேஆத்மா, அது ஸ்தயம், அது நீ ஆனாய் (தத்வமஸி).

[இவ்வாறு உபதேசித்ததும் தத்வமஸி மஹாவாக்யத்தின் உண்மைப்பொருள் விளங்காததால் சுவேத கேதுவுக்கு அவன் தகப்பனார் இதை இன்னும் எட்டுவித திருஷ்டாந்த பூர்வகமாகப் பின்வருமாறு உபதேசிக்கிறார்.]

(2) தேனீக்கள் அநேக மரங்களிலிருந்து ரஸங்களை எடுத்துச் சேர்த்துத் தேன் உண்டாக்குகின்றன. இதில் பின்னர் ரஸங்கள் வேறுபட்டுத்தாம் உண்டான விதத்தையும் வஸ்துவையும் விளக்கா. இதுபோலத் தூங்குங்கால் ஸூக்ஷ்மமாயும், ஸாரமாயும் உள்ள வஸ்துவோடு தமது பேதங்கள் உணராது கலந்து நிற்பதாலும், பின்னர் விழிக்குங்கால் தம்தம் மாறுபாடுகளோடு வெளிவருவதாலும், தூக்கரஹஸ்யம் பிராணிகளுக்கு விளங்குவதில்லை.

(3) அநேகம் ஆறுகள் ஸமுத்ரத்திலிருந்து மேக முதலிய ரூபமாக மாறிப் பிரிந்து முடிவில் ஸமுத்திரத்திலேயே விழுகின்றன. அங்கு அவைகள் மாறுபாடு விளங்காது. இம்மாதிரியே தூக்கத்தில் ஸத்வஸ்துவோடு கலந்திருப்பது விழிக்குங்கால் விளங்காது நிற்கின்றது.

(4) ஒரு மரத்தின் பாகங்களைத் தனித் தனியாக வெட்டிப் பார்த்தால் அது பால் சொரிந்து நின்று மேலும் வளரும். அதனுள்ளிருக்கும் ஆதாரவஸ்து பிரிந்துவிட்டால் அது வெட்டாமலே பட்டுக்கொண்டுவரும். ஆகவே ஓர் வஸ்துவின் சேர்க்கையால் மரம் வளருவதும், அதன் பிரிவால் அது அழிவதுமாக இருக்க, அந்த வஸ்துவுக்கு இவ்வித மாறுதலே இல்லை. இது போன்றதுதான் ஸூக்ஷ்மமாயும் ஸாரமாயும் உள்ளவஸ்து.

(5) ஆலின் பழம் சிறியதாக இருக்கிறது. அதனுள் அநேக சிறுவிதைகள் இருக்கின்றன. அவைகளுள் ஒன்றை உடைத்துப் பாத்தால் உள்ளே ஒன்றும் காணப்படவில்லை. அதனுள் ஓர்வித ஸூக்ஷ்ம ஸத் இருந்துகொண்டே இப்பெரிய மரத்தை அதிலிருந்து ஒழுங்காக வளர்ந்து ஓங்கும்படி செய்கின்றது. இதுபோன்றதே ஸூக்ஷ்மமாயும் ஸாரமாயும் உள்ள வஸ்து.

(6) உப்பைதண்ணீரில் போட்டுவிட்டு வெகு

நாழிகை கழித்துப்பார்த்தால் அதை வேறாகப் பிரிக்க முடியாது. மறைந்து விடும். ஆனால் தண்ணீரை எந்தவிடத்தில் ருசிபார்த்தாலும் ஸரி உப்பிருக்கிறது விளங்கும். இதுபோல நமக்கு வெளிப்படையாக விளங்காத போதிலும் ஸூக்ஷ்மமாயும் ஸாரமாயும் உள்ள ஸத்வஸ்து இருக்கவே இருக்கின்றது. (அதை உணரும் மார்க்கம் வேறு.)

7. காந்தார தேசத்தான் ஒருவன், கண்ணைக் கட்டிஓர்நிர்ஜனமானகாட்டில்திருடர்களால்விடப் பட்டால், அவன் நாற்புறமும் திரும்பித் திரும்பி தன்கஷ்டத்தைச் சொல்லிக் கதறுவான். இதைக் கேட்டுக் காலக்கிரமத்தில் அங்கு வருபவன் ஒருவன் அவன் கண்ணைத்திறந்து காந்தார தேசத்தின், வழியைக்காட்ட அவன் கிராமம் கிராமமாக விசாரித்துக்கொண்டு காந்தாரதேசம் போய்ச் சேருவான். அதுபோல ஆசார்யனைத்தேடி அடைபவன் இந்த ஸூக்ஷ்மமாயும் ஸாரமாயும் உள்ள வஸ்துவை உணருவான். அவனுக்கு கிரமமாக மோக்ஷம் ஸித்திக்கும்.

(8). மாணகாலம் ஸமீபித்திருப்பவனைச் சுற்றி அவன் உறவினர்கள் கூடிக்கொண்டு 'நான் யார் தெரிகிறதா?' என்று அடிக்கடி கேட்பார்கள். முன்னர் கூறியபடி வாக்கு, மனம், பிராணன் பரம்பொருள் ஆகிய இவைகளில் முறையே லயம் உண்டாவதற்கு முன் அவனுக்கு வெளி விஷயங்கள் விளங்கும். பின்னர் விளங்கா. இந்த முடிவான வஸ்துவாகிய பரம்பொருளே ஸூக்ஷ்ம ஸாரமான வஸ்து.

(9) திருடிவிட்டதாகஒருவன்மேல்பழிசுமத்திக் கொண்டுவந்து காய்ச்சின இரும்பைக் கையிலெடுக்கும்படி அவனைத் தூண்டுவார்கள். உண்மையில் திருடாதவனாகிய அவன் கையில் சூடு உறைக்காதது கண்டு அவனை விட்டுவிடுவார்கள். அவனுக்குச் சுடவொட்டாது தடுத்த ஸத்யமே அந்த ஸூக்ஷ்ம ஸாரமான ஸத்வஸ்து.

'இவ்வாறு ஒன்பது விதமாக விளக்கப்பட்ட ஸத்வஸ்துவே ஸகலத்திற்கும் ஆதாரம். அதுவே ஸத்யம், அதுவே ஆத்மா. அது நீ யானாய் (தத்வமஸி) என்று தகப்பனார் உபதேசிக்கத் தேரித் தெளிந்தான் சுவேதகேது.'

அத்யாயம் 7.—முன்னொரு காலத்தில் நாரதர் ஸனத்குமாரரை அடுத்துத் தமக்கு உபதேசம் செய்யவேண்டுமென்று மஹா வினயத்துடன் கேட்டார். அதற்கு அவர் 'உனக்குத் தெரிந்ததைக் கூறு. மேல் விஷயங்களை நான் உபதேசிக்கிறேன்' என்றார். அதற்கு நாரதர் 'நான்கு வேதம் இதிஹாஸ புராணங்கள், வ்யாகரணம், சிராத்தகாண்டம்,கணிதம்,சகுனசாஸ்த்ரம், கால சாஸ்த்ரம், தர்க்கம், தர்மசாஸ்த்ரம், ராஜ்யதந்த்ரம், நிருக்தம், சிக்ஷை, பூதசாஸ்திரம், தனுர் வித்தை, வானசாஸ்திரம், ஜ்யோதிஷம், பாம்பாட்டி வித்தை, கானம் முதலிய ரஸிக சாஸ்திரம், ஆகிய அநேக சாஸ்திரங்களை நான் பயின்றிருக்கிறேன். இப்படி இருந்தும் எனக்கு அநேகவித வாக்குஞானமும்பேசும் திறமும் ஏற்பட்டிருக்கிறதே ஒழிய ஆத்மஞானம்வந்ததாகத் தோற்றவில்லை. இது வந்தால் துக்க நிவிர்த்தி என்று கூறப்பட்டிருக்கிறது. எனக்கு இன்னம் துக்கம் தீரவில்லை. என்னைக் கிருபை கூர்ந்து காக்கவேண்டும்' என்று வேண்டினர்.

ஸனத்குமாரர் 'உனக்கு **நாம** ஞானம் ஏற்பட்டிருக்கிறது. நீ பயின்றிருப்பதெல்லாம் வெறும் நாமத்துள் அடங்கும். ஆதலால் இவைகளின் ஸாரமாகிய நாமத்தைப் பிரஹ்மமாக த்யானித்து அதன் ஸ்வரூபத்தைமுதலில்உணர வேண்டும். அவ்வாறு செய்தால் நாமம் ஸம்பந்தப் பட்டவரையில் உனக்குப் பந்தநிவிர்த்தி ஏற்படும்'என்று கூறினர்.

இதைக்கேட்டதும் கேவலம் நாமம் எப்படி பிரஹ்மமாகும்? அதைவிட மேலானது ஒன்றும் இல்லையா? என்றசங்கை பிறக்க அடுத்த படியை ஸநத்குமாரர் எடுத்து விஸ்தரித்தார். அங்கும் சங்கை நாரதர் மனதில் உண்டானதைக் கண்டு

அவர் நாரதருக்குக் கிரமமாக மேலான விஷயங்களைப் புகட்டத் தொடங்கினர்.

அப்பொழுது, நாமம், வாக்கு, மனம், ஸங்கல்பம், சித்தம், த்யானம், விக்ஞானம், பலம், அன்னம், அப்பு, தேஜஸ், ஆகாசம், ஸ்மரணம், ஆசை, பிராணன், முதலியவைகளின் ஸ்வரூபத்தை எடுத்துக்கூறி முறையே முன்னதை விடப் பின்னது சிறந்தது என்றும், பிராணனே மிகச் சிறந்தது என்றும் கூறினர். 'இவைகளை முறையே பிரஹ்மமாக த்யானித்து வருபவர் கிரமமாக அவ்வவ்வைகள் ஸம்பந்தப்பட்டவரையில் விடுபட்டு ஆனந்தம் அடைவார்கள் என்பதை குறிப்பித்தார். இந்த ப்ராணன் தேஹத்தோடு ஸம்பந்தப்பட்டிருந்தால்தான் அதற்கு மரியாதை முதலியன உண்டு. பிரிந்ததும் அவைகள் ஒன்றிற்கும் யோக்யதையில்லாக் கட்டையின் நிலையைத் தேஹம் அடையும். இந்த ப்ராணன் மிக ஸாரமான வஸ்து. இதுதான் எல்லாமாகி நிற்பதும். இவ்வாறு உணருபவன் அதிவாதியாவான். என்றூர்

இதன் பின்னர் 'ப்ராணரஹஸ்யத்தை உணர்ந்தவன் ஆதியில் கூறிய நாமவிஷயத்தைப் பார்க்குங்கால் அதிவாதியே ஒழிய உண்மையான அதிவாதியல்ல' என்று உண்மையான அதிவாதி லக்ஷணத்தைக் கூறத் தொடங்கி 'ஸத்யத்தை உள்ளபடி உணர்ந்தவனே உண்மையான அதிவாதி' என்றூர். அந்த உண்மையை உணரத் தமக்கு மிகுந்த ஆவலிருக்கிறதென்று நாரதர் கூற அதற்கு அவர் 'இதை உணர இதை முதலில் அறிதல்வேண்டும். இந்த விக்ஞானத்தின் (அறிவின்) ஸ்வரூபம் முதலில் விளங்க வேண்டும், என்று கூறி, ஸத்யம், விக்ஞானம், (அறிவு) மதி (எண்ணம்), சிரத்தை, நிஷ்டை, கிருதி (கடமை), ஸுகம், பூமா (அகண்டம்) ஆகிய இவைகளில் பின்னதை உணர்ந்தால் தான் முன்னது நன்ருக விளங்கும் என்று கிரமமாக நாரதரை அழைத்துச் சென்று அகண்ட வஸ்துவரையில் கொண்டுவந்து விட்டு 'எந்நிலையில் ஒருவன் பார்ப்பதற்கும் கேட்பதற்கும் உணருவதற்கும் வேருன ஓர் வஸ்து எதிர்ப்படாதோ அதுவே அகண்டநிலை, அழிவற்றது. எங்கு இவைகள் காணப்படுமோ அது கண்டம், அழியக் கூடியது. அகண்டவஸ்து தானகவே தனித்து தன் சிறப்பாலேயே நிராதாரமாய் நிற்கும்.' என்று அத்யத்புதமாக அதை விளக்கி 'விஷயச் சிறப்புக்கும் இதற்கும் இந்த நிராதாரமாகத் தானே தனித்து நிற்பதே முக்யபேதம். இந்த அகண்டமே எங்கும் இருப்பது, இதுவே நான் என்பதும், ஆத்மா என்பதும். இவ்வாறு உணருபவருக்கு முற்கூறிய பிராணன் முதலியனவும், விக்ஞானம் முதலியனவும் இந்த ஆத்மாவிலிருந்தே உண்டாவதாக வெளியாகும். இவனுக்குத் துக்கம் வ்யாதி மரணம் முதலியவைகள் தோற்றவேமாட்டா. இவன் எல்லாம் உணர்ந்தவனுவான். தானே எல்லாமாயிருப்பதையும், எல்லாம் தன்னுள் அடக்கி நிற்பதையும் இவன் காண்பான்.' என்று விஸ்தரித்தார்.

இதன் பின்பு, 'ஆஹாரம் (இந்திரியங்களால் உட்கொள்ளுவது) சுத்தமானதும் (ராகம் துவேஷம் மோஹம் முதலியன அற்றதாக ஆனதும்) மனம் சுத்தமாகும், பின்னர் ஞாபகம்திடப்படும், இதனல் பந்தம் நீங்கும்' என்ற அகண்டத்வம் அடையும் வழியையும் காட்டினர். அப்பொழுது நாரதர் தோஷம் நீங்க ஸநத்குமாரர் அவருக்கு அஞ்ஞானத்திற்கு அப்பாற்பட்ட வஸ்துவைத் தர்சனம் செய்துவைத்தார்.

அத்யாயம், 8.—இதில் முதலில் பரம்பொருள் ஹிருத ஆகாசத்தில் இருப்பதையும், அவ்வரை உணருவதற்கு ஏற்பட்டுள்ள யோகமார்க்க வழிகளையும், அவைகளின்விஸ்தாரங்களையும்கர்மத்தால் விளையும் பலன் நீடித்து நிற்காமலிருக்க, யோகத்தின் பலன் நீடித்து நிற்பதையும், பரம்பொருளோடு ஸம்பந்தப்பட்டதால் யோகிக்கு அவன் எண்ணங்கள் நிறைவேறுவதையும், ஆயினும் அவன் ஆசா பூர்த்தி அக்ஞான ஸம்பந்தமுடையதாலும், மரணத்தைத் தாண்டும் திறனைக்கொடுக்காததாலும், தாழ்ந்த தென்பதையும்' எடுத்து

விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. 'இவைகளைத் தவிர்த்து ஹிருதயத்திலுள்ள ஆத்மாவை உணருபவன் தேஹபாவம் நீங்கித் தன் உண்மை ஸ்வரூபத்தை உணர்ந்து ஆனந்த ரூபனுவான். இது தான் ஆத்மா, அழிவற்றது. பயமற்றது, பிரஹ்மம், ஸத்யவஸ்து. இதுதான் அஞ்ஞானந்தகாரத்திற்கு அப்பாற்பட்டது. தோஷரஹிதமானது. எல்லாவற்றிற்கும் ஆதாரமானது. இதை அடைந்தவர்களுக்குத் துக்கமே இல்லாமல்போய் விடும். **பிரஹ்மசரியமே** இதை அடைவதற்கு வழி, யஞ்ஞம், இஷ்டம், ஸத்ராயணம், மௌனம் முதலிய ஸகல ஸத்கர்மங்கள் குணவிசேஷங்கள் எல்லாம் பிரஹ்மசரியமே.' என்று கூறி இதன் பின்னர் பின்வரும் கதாரூபமாக ரஹஸ்ய விஷயங்களை இவ்வுபநிஷத்து உபதேசிக்கின்றது.

'தேஹரஹிதம்,அழிவற்றது, மாருதது, துக்கம் மற்றது, பசிதாகமற்றது, ஆசை அற்றது, ஆகிய **ஆத்மா** எல்லோராலும் தேடி உணரத்தக்கது. அவ்வாறு செய்பவர் ஸகல லோகங்களிலும் அசை நீங்கப் பெற்றவராவார்' என்று பிரஹ்மா முன்னொருகால் கூறியதைத் தேவாஸுரர்கள் கேட்டுக்கொண்டிருந்தார்கள். உடனே அவர்களுக்கு ஆத்மாவைத் தேடி அடைய வேண்டும் என்ற ஆவலுண்டாயிற்று. அப்பொழுது தேவர்கள் **இந்திரனையும்,** அஸுரர்கள் **விரோசனனையும்** அனுப்பி இந்த விஷயத்தை பிரஹ்மாவிடம் இருந்து கற்று வந்து தமக்கு உபதேசிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டனர். இவர்கள் பிரஹ்மசாரிகளாக 32 வருஷம் பிரஜாபதியிடம்இருக்க அதன் முடிவில் இவர்கள் நோக்கத்தை விசாரித்து'கண்ணுள் இருப்பவனே நான் முற்கூறிய ஆத்மா' என்றார். 'கண்ணுடி தண்ணீர் இவைகளுள் முகத்தைப் பார்க்குங்கால் காணப்படுவதா ஆத்மா?' என்று அவர்கள் வினவினர். அதற்கு அவர், 'தண்ணீர் நிறைந்த பாத்திரத்துள் பாருங்கள். பின்னர் அலங்காரம்(ஸாதஸம்பாத்யம்)செய்து கொண்டுபாருங்கள்' என்ன. அவர்கள் அவ்வாறே செய்து 'எப்பொழுதும் நாம் இருப்பது போலவே அதனுள்ளும் காணப் படுகிறது' என்றனர். 'அதுதான் ஆத்மா, பிரஹ்மம்' என்ருர் பிரஜாபதி. இருவரும் திருப்தி அடைந்துபோவதைக்கண்டு 'உண்மையை முற்றிலும் உணராது போய்விடுகிறார்களே' என்று பிரஜாபதி வருந்தினர். விரோசனன் ஒரே போக்காகப் போய் அஸுரர்களுக்கு.' நாமே ஆத்மா, நம்மை நன்ருகக் கவனித்து வாழ்ந்தால் மேலான நிலை நமக்கு வரும்' என்று உபதேசிக்க அவர்களுக்கு தேஹாத்மஞானம் நன்ருக நிலைபெற்றது.

இந்திரனுலோ அவ்வாறு செய்யமுடியாமல் போய்விட்டது. வழியிலேயே 'நமது தேஹத்தை போல் அல்லவா அந்தநிழல் இருந்தது. தேதம்தின் மாறுபாடுகள் எல்லாம் அங்கும் காணப்படுமே. அப்படி இருக்க அதை அழிவற்ற ஆத்மா என்று எப்படி மதிப்பது' என்ற சங்கை பிறந்துவிட, மறுபடியும் பிரஜாபதியிடம் வந்து தன் சஞ்சலத்தை வெளியிட்டான். அப்பொழுது அவனை 32 வருஷம் பிரஹ்மசாரியத்திலிருத்தி முடிவில் ஸ்வப்நத்திலும் இருப்பவன் எவனோ அவனே ஆத்மா பிரஹ்மம்' என்றுர். 'இது தேஹதர்மத்தோடு ஸம்பந்தப்படாவிடினும் ஸ்வப்நத்தில் ஸுக துக்கங்களுக்கு ஆளாகிறது. ஆதலால் இதை மாறுபடாப் பிரஹ்மம் என்று கூறுவது எப்படித்தகும்' என்று மறுபடி இந்திரன்சங்கித்து திரும்பினன். அவனை மேலும் 32-வருஷம் பிரஹ்மசரியத்திலிருத்தி முடிவில், 'நல்ல காடநித்ரையிலும் (ஸ்வப்நமற்ற தூக்கத்திலும்) இருப்பவனே ஆத்மா, பிரஹ்மம்' என்றுர். இதிலும் அவனுக்குத் திருப்திவரவில்லை. 'இந்தநிலையிலும் தான் இன்னுர் என்று விளங்காமையால் அஞ்ஞான ஸம்பந்தமிருக்கிறது. இதை அஞ்ஞானத்திற்கு அப்பாற்பட்ட ஆத்மாஎன்று எப்படி மதிப்பது' என்றசங்கை வந்துவிட்டது. மறுபடியும் 5-வருஷம் பிரஹ்மசரியம் அனுஷ்டிக்க ப்ரஜாபதி, 'தேஹஸம்பந்தமே ஸகல துவந்துவத்திற்கும், துக்கத்திற்கும், காரணம் தேஹ

4.27

ஸம்பந்தம் (பாவனை) விடுபட்டால்தான் துக்க நிவிருத்தி. ஆகாயத்தில் மழை, மின்னல், இடி முதலியன மறைந்திருந்து ஸூர்ய வெப்பத்தால் எவ்வாறு ஸ்வந்த ரூபத்தோடு வெளியாகின்றனவோ அப்படியே பரஞ்ஜோதியோடு ஸம்பந்தப்பட்டதும் ஆத்மா தேஹபந்தத்திலிருந்து விடுபட்டு ஸ்வந்தரூபத்துடன் விளங்கும். இதுதான் உத்தம புருஷன். வண்டியில் பூட்டப்பட்ட குதிரை வண்டியைவிட்டு, வேறாக இருப்பதுபோல இதை உணர்ந்தவன் தேஹத்தோடிருக்குங்கால் எங்கிலேயி விருந்தபோதிலும் (மனம் எப்படி இருந்தபோதிலும்) பற்றற்றே நிற்பான். இந்த ஆத்மாதான் ஸகல தொழில்களுக்கும் ஆதாரமாக இருப்பது. இதன் ஸந்நிதான மன்றியில் ஒன்றும் நடவாது, மனமே விஷயங்களை நோக்கி உணரும் தன்மையான ஓர் கண்போன்றது. இதன் மூலமாகவே எல்லாவற்றோடும் ஆத்மாவுக்கு ஸம்பந்தம் ஏற்படுகிறது' என்று பிராஜாபதி இந்திரனுக்கு உபதேசித்தார்.

இவ்வாறு 101 வருஷம் இந்திரன் பிரஜாபதியிடம் குருகுலவாஸம் செய்து அறிந்துகொண்ட ஆத்ம ரஹஸ்யத்தைத் தேவதைகளுக்கு உபதேசிக்க அவர்கள் இதை நன்கு உணர்ந்துமேன்மையை அடைந்தனர்.

இதன் பின்னர் இவ்வுபநிஷத்தில் இரண்டு மந்திரங்கள் காணப்படுகின்றன. இவைகள் ஜபிக்கவும், த்யானம்செய்யவும் யோக்கியமானவை. இவ்வுபநிஷத்தின் சுருக்கமாக இருப்பவை இந்த ஞானம் வந்த குருபரம்பரையையும், ஆசார்யனிடம் இதை உணர்ந்து க்ருஹஸ்தனுகி ஆத்மத்யானம் செய்து, கூடியவரையில் அஹிம்ஸையில் பழகி நாட்கழிப்பவன் மீளாநெறியாகிய பிரஹ்மத்தை எய்துவன் என்பதையுங்கூறி இவ்வுபநிஷத் முடிவு பெறுகிறது.

ஓம் தத் ஸத்.

பாட்டினியல்பு

THE NATURE OF POETRY

பிற்காலத்துத் தமிழ்ப்புலவர் பாட்டென்பது இன்னதென்றே அறியாமல் விநோத விநோதமாகச் சொற்களைக் கோத்துப் பொருள் ஆழமின்றிச் செய்யுள் இயற்றுகின்றார். முற்காலத்துத் தமிழ்ப்புலவரோ பாட்டு என்பதன் இயல்பை இனிதறிந்து நலமுடைய செய்யுட்கள் பலப்பல இயற்றினர். இங்ஙனம் முற்காலத்தாராற் செய்யப்பட்ட பாட்டின் இயல்போடு மாறுபட்டுப் பிற்காலத்தார் பிறழப் பாடிய செய்யுட்களைக் கண்டு மாணக்கர் பாட்டினியல்பு அறியாது மயங்குவாராகலின் பாட்டு என்பது இன்னதென்று ஒரு சிறிது விளக்குவாம்.

உலக இயற்கையிற் கண் முதலான புலன்களுக்கு விளங்கத்தோன்றும் அழகினை யெல்லாம் தன்னுள்ளே நெருங்கப்பொதிந்து வைத்துப் பின் அவற்றை நம் அறிவினிடத்தே புலப்படும் வண்ணம் தோற்றுவித்து, மாறுதல் இல்லா இனிய ஓசையுடன் ஒற்றுமைப்பட்டு நடைபெறும் இயல்பினையுடையதுதான் பாட்டு என்று அறிதல் வேண்டும். இன்னும் எங்கெங்கு நம் அறிவைத் தம் வயப்படுத்துகின்ற பேரழகும் பேரொளியும் பெருங்குணமும் விளங்கித்தோன்றுகின்றனவோ அங்கெல்லாம் பாட்டு உண்டென்றே அறிதல் வேண்டும். இதனை விரித்துக் காட்டுமிடத்து பேர் அழகாற் சிறந்த ஓர் அரசி தான் மேற்போர்த்திருந்த நீலப்பட்டு ஆடையினைச் சிறிது சிறிதாக நீக்கிப், பின்பு அதனைக் கீழே சுருட்டி எறிந்து விட்டுத்துயில் ஒழிந்து ஒளி விளங்கு நளிமுகங் காட்டி எழுந்ததுபோல, இருட்கூட்டம் குவிந்து மழுங்கி அலைகடலிற் சென்று அடங்கும்படி இளஞாயிறு உருக்கித் திரட்டிய பசும் பொற்கோளம் போலத் தளதளவெனக் கீழ்த் திசையில் தோன்றவும், அத்திசையின் பரப்பெல்லாம் பொன் உரைத்த கற்போற்ப் பொலிந்து பிரகாசிப்பவும், பசுமை

பொன்மை நீலம் சிவப்பு வெண்மை முத
லான நிறவேறுபாடு உள்ள உலோகங்கள் உருகி
ஓடுகின்ற நிலம்போல வான் இடமெல்லாம் பல
வண்ணமாய் விரிந்து விளங்கவும், கரிய மேகங்க
ளெல்லாம் செவ்வரக்கு வழித்த அகன்ற திரைச்
சீலைகள் எனவும், வெளிய மேகங்களெல்லாம்
பொற்பட்டுப்படாம் போலவும் ஆங்காங்குச்
சொல்லுதற்கு அரிய பெரும் பிரகாசத்துடன்
திகழவும் உலகமங்கை நகைத்தாற்போலப்
புதுமையுற்றுத் தோன்றும் விடியற்கால அழ
கெல்லாம் பாட்டென்றே அறிதல் வேண்டும்.
ஆ! இங்ஙனந்தோன்றும் அவ்விடியற்கால அழ
கினைக்கண்டு வியந்த வண்ணமாய் மீன்வலையோடு
கடற்கரையில் நிற்குஞ் செம்படவனைக்காட்
டினுஞ் சிறந்த புலவன் யார்?

அவ்விடியற் காலையிலே முல்லைநிலத்துக்
கோவலர் ஆன் கன்றுகளைக் கொட்டிலிலே தாம்
பினாற் கட்டிவைத்து, ஆன் நிரைகளை அடுத்
துள்ள மலைச்சாரலிற் கொண்டுபோய்ப் பசிய
புல் மேயவிட்டுத் தாம் மரநிழலிற் சாய்ந்திருந்து
கொண்டு, தமக்கெதிரே பச்சிலைப்போர்வை மேற்
கொண்டு கரியமேகங்கள் நெற்றி தழுவிக்கிடப்
பப் பெருந்தன்மையோடு வான் அளாவித் தோன்
றும் மலையினை அண்ணாந்து பார்த்து அவர்கள்
அச்சமும் மகிழ்ச்சியும் அடையும்போது அங்
கும் பாட்டு உண்டென்றே அறிதல்வேண்டும்.
காதலினாற் கட்டுண்ட இளைஞரும் மகளிரும்நெகி
ழாத அன்பின் மிகுதியால் தோளோடு தோள்
பிணையத் தழுவிக்கொண்டு மலையடி வாரத்தில்
உள்ள பூஞ்சோலைகளிற் களிப்பாய் உலவுந்தோ
றும், தூங்கணங்குருவிகள் மரங்களில் விசித்
திரமான கூடு கட்டுதலையும், மரப்பொந்துகளில்
மணிப்புறாக்கள் கூவுதலையும், ஆண்மயில்கள் தம்
அரிய கலாபத்தினை விரித்துப் பெடைமயில் கண்
களிப்ப ஒருபுறம் ஆடுதலையும், மலையருவி நீர்
கூழாங்கற் படையின்மேற் சிலுசிலுவென்று
ஓடிவந்து அச்சோலையின் ஒரு பக்கத்துள்ள
ஆழ்ந்த குட்டையில் நிரம்பித் ததும்ப அதி
லுள்ள செந்தாமரை முகிழ்கள் அகன்ற இலை
களின்மேல் மிகச் சிவப்பாய் அலர்தலையும் விரும்
பிக்கண்டு, நறுமணங்கமழும் பூக்களை மரங்களி
னின்றுந் தாவிப் பறித்துக் கரியகூந்தலில் மாறி
மாறி அணிந்தும், சிவக்கப்பழுத்த கொவ்வைக்
கனிபோன்ற தம் இதழ்கள் அழுந்த முத்தம்
வைத்துக்கொண்டும், தேன் ஒழுகினாற்போல
மதுரமான நேசமொழிகள் பேசிக்கொண்டும்
அவர்கள் செல்லுமிடத்து அங்கும் பாட்டு உண்
டென்றே அறிதல் வெண்டும்.

சுருங்கச் சொல்லுங்கால் எங்கெல்லாம் நம
துணர்வை வசீகரிக்கின்ற பேரழகு உலக இயற்
கையில் காணப்படுமோ அங்கெல்லாம் பாட்டு
உண்டென்பது தெளியப்படும். ஆயினும், ஒரு
நல்லிசைப்புலவனால் இயற்றப்படுகின்ற பாட்டுப்
போல அது நூலினிடத்தே காணபபடுவதில்லை
யேயெனின்; ஒரு நூலின்கண் எழுதப்பட்டு
உலக இயற்கையின் அழகை நமதுள்ளத்திற்
பொருத்திக் காட்டி நமக்கு உணர்வு பெருக்குஞ்
சொல்லின் தொகுதியான பாட்டு நூலின்கண்
எழுதப்படுகின்ற வடிவுடைய பருப்பொருளா
கும்; உலக இயற்கையின் அழகோடு ஒற்றுமைப்
பட்டுக் கண்முதலான புலன்வழிப் புகுந்து நம
க்கு உணர்வு மிகுதியினை வருவிக்கும் பாட்டு
வடிவு இல்லாத நுண்பொருளாகும். இங்ஙன
மாகலின் உலக இயற்கையிலெல்லாம் பாட்டு
உண்டென்பது துணிபெயா மென்க.

அல்லாமலும், உயிர் வாழ்நாளில் ஒவ்வொரு
நாளும் நம்முடைய நினைவுகளெல்லாம் உணவு
தேடுதலினும், பொருள் தொகுப்பதினும், மனைவி
மக்கட்கு வேண்டுவன திரட்டிக்கொடுத்தலினும்,
பிறர் இட்ட ஊழியஞ் செய்தலினுமாகப் பல
வாறு சிதறி அருமை பெருமையின்றி அவல
மாய்க்கழிந்து போகின்றன. இவ்வாறு கழிந்து
போகும் மக்களுடைய நினைவுகளுஞ் சொற்களுஞ்
செயல்களும் நமக்கு இன்பந்தாராவாகலின் அவ
ற்றை அறிய வேண்டுமென விரும்புவார் உலகில்
யாருமிலர். இனி, இவ்வாறு கழியும் நாட்களில்

ஒரோவொருகால் அவர் அறிவு அவல நினைவுகளின் வேறாகப்பிரிந்து, உலக இயற்கை யழகிற் படிந்து அதன் வண்ணமாய்த்திரிந்து தெளிவுற்று விளங்கும்போது, அவ்வறிவிற் சுரந்து பெருகும் அரிய பெரிய கருத்துக்களையே நாம் அறிவதற்கு மிக விரும்புகின்றோம். இங்ஙனந் தோன்றும் அரிய பெரிய கருத்துக்களின் கோவை ஒழுங்கினையே பாட்டென்றும் அறிதல் வேண்டும். இன்னும் மக்கள் வாழ்நாள் என்கின்ற நீரோடையிலே அவல நினைவுகளான கலங்கல் நீர் பெருகிச் செல்லும்போது, உலக இயற்கையென்னும் மலைக்குகைகளிலே அரித்து எடுத்து வந்த அருங்கருத்துக்களான பொற்றுகள் இடையிடையே ஆழ்ந்து அவ்வோடையின் அடிநிலத்திற் சிதர்ந்து மின்னிக்கிடப்ப, நல்லிசைப் புலவன் என்கின்ற அரிப்புக்காரன் மிக வருந்தி முயன்று அப்பொற் சிதர்களையெல்லாம் ஒன்றாகப்பொறுக்கி எடுத்துத் தன் மதிநுட்ப நெருப்பிலிட்டு உருக்கிப் பசும் பொற்பிண்டமாகத் திரட்டித் தருவதே பாட்டென்றும் அறிதல் வேண்டும். இன்னும் மக்கள் அறிவு என்கின்ற தித்திப்பான அரிய அமிழ்தம் பலவகையான குற்றங்களானுங் கலப்புற்று அசுத்தமாய்ப் போக, நல்லிசைப் புலவன் தன் பேரறிவினால் அதனைத் தெள்ளி வடித்து அதன் இன்சுவையினை மிகுதிப்படுத்தி நாமெல்லாம் பருகிப் பெரியதோர் ஆறுதல் அடையக் கொடுப்பன்; அங்ஙனங் கொடுக்கப்படுஞ் சுத்த அறிவின் விளக்கமும் பாட்டு என்றே அறிதல்வேண்டும். இக்கருத்துப்பற்றியே மில்டன் என்னும் ஆங்கில மொழிவல்ல நல்லிசைப்புலவரும், "பாட்டென்பது மக்கள் மன அறிவின் சாரமாய் இறக்கப்பட்ட பரிசுத்தமான அமிழ்தம்"* என்று உரை கூறினார். இது நிற்க.

இனி இங்ஙனம் இயற்றப்படுகின்ற பாட்டு உலக இயற்கை யழகுடன் பெரிதும் பொருந்தி நடத்தல் வேண்டும். இன்னும் இதனை நுணுகி நோக்குமிடத்துப் பாட்டுப் பாடுதலில் வல்லவனான நல்லிசைப் புலவனுக்கும், உலக இயற்கையினைப் பலவகை வண்ணங்களாற் சித்திரித்துக் காட்டுகின்ற ஓவியக்காரனுக்கும் ஒற்றுமை மிக உண்டென்பது தெளிதிற் புலப்படும். ஆயினும், ஓவியக்காரன் சித்திரிக்கின்ற படம் கட்புலனுக்கு மாத்திரம் தோன்றும்; நல்லிசைப் புலவன் சித்திரிக்கின்ற பாட்டோ கண்முதலான புலன்களின் சாரமாய் விளங்கும் உள்ளத்திலே தோன்றும். ஓவியக்காரன் தான் எழுத எடுத்துக்கொண்ட பொருளைப் பன்முறையும் நுண்ணிதாக அளந்தளந்து பார்த்துப் பின் அதனைத் திறம்படச் சித்திரித்தால் மாத்திரம் அப்படத்தைக் கண்டு வியக்கின்றோம்; தான் விரித்து விளக்கமாய் எழுதவேண்டும் பகுதிகளில் அவன் ஒரு சிறிது வழுவி விட்டானாயினும் அப்படத்தின்கண் நமக்கு வியப்புத் தோன்றாது ஒழிகின்றது. நல்லிசைப் புலவனோ அங்ஙனம் அவனைப்போல் ஒவ்வொன்றனையும் விரிவாக விளக்கிச் சொல்ல வேண்டும் பிரயாசை உடையான் அல்லன். ஓவியக்காரன் புலன் அறிவைப் பற்றி நிற்பவன்; புலவனோ மன அறிவைப் பற்றி நிற்பவன். புலனறிவோ பருப்பொருள்களை விரித்தறியும் இயல்பினுள்ளது; மனவறிவோ அப்புலனறிவின் சாரமாய் நின்று நுண்ணிதாம் பொருளையும் தானே ஒரு நொடியில் விரித்தறியும் ஆற்றல் வாய்ந்தது. அம்மம்ம! மனோபாவகத்தின் ஆற்றலை யாம் என்னென்றுசொல்லுவோம்! அணுவை ஒரு நொடியில் மலைபோற் பருக்கச் செய்யும், மலையை மறுநொடியில் ஓர் அணுவினுங் குறுகச்செய்யும். இங்ஙனம் விசித்திர இயல்புடைய மனோபாவகத்தினை நல்லிசைப் புலவன் என்னும் மந்திரகாரன் தன் மதி நுட்பமாகிய மாத்திரைக்கோலால் தொடுதல் மாத்திரையானே அது திடுக்கென்றெழுந்து அவன் விரும்பிய வண்ணமெல்லாஞ் சுழன்று சுழன்றாடும். இன்னும் இதனைச் சிறிது விளக்குவாம். ஓவியக்

*Areopagitica

காரன் பயங்கரமாக அகன்றதோர் கரிய பெரிய காட்டினை எழுதல் வேண்டுமாயின் பலநாளும் பல காலும் அதன் இயற்கையினை அறிந்தறிந்து பார்த்துப் பரியமரங்கள் அடர்ந்து ஓங்கி ஒன்றோடொன்று பிணைந்து வெளிச்சம் புகுதாமல் தடை செய்து நிற்றலையும், அக்காட்டின் வெளித்தோற்ற அமைப்பினையும், மரங்களின் இடையிலுள்ள சந்து வெளிகளில் நமது பார்வை நுழையுங்கால் அவை தோன்றுந் தன்மையினையும், உள்ளே இருள் தடிப்பாய்ப் பரவியிருத்தலையும் அங்குள்ளவாறே சிறந்த பல வண்ணங்களைக் குழைத்து இரட்டுத் துணியின்மேல் மிகவருந்தி எழுதிக் காட்டல் வேண்டும்; இஃது அவனுக்குப் பலநாள் வேலையாக முடியும். நல்லிசைப் புலவனோ, 'பரிய மரங்கள் அடர்ந்தோங்கிப் பிணைந்து நிற்குங் கரிய காடு' என்று சில சொற்களைத் திறம்படச் சேர்த்துக் கூறுதல் ஒன்றானே ஒருநொடிப் பொழுதில் அவ்வோவியக்காரனாலுங் காட்டமுடியாத ஒரு பேரற்புத வுணர்வினை நம்மனத்தகத்தே விளைவிக்கும் ஆற்றலுடையனாவான். இஃது அவனுக்கு மிக இலேசிலே முடிவதொன்றாம். இங்ஙனம் மனோபாவகத்தை எழுப்புதல் மிக எளிதிலே செய்யக்கூடியதொன்றாயினும், அம்மனவியல்பின் நுட்பம் உணர்ந்து அவ்வாறு செய்ய வல்லரான நற்பெரும் புலவர் உலகிற் சிலரேயாவர். புலவனுடைய திறமையெல்லாம் "சில்வகை எழுத்திற் பல்வகைப் பொருளைக்" காட்டுகின்ற அரும்பெருஞ்செய்கையினாலேதான் அறியப்படும். இங்ஙனம் பாட்டு வழக்கின் நுட்பம் உணர்ந்து பிறமொழிகளிற் புகழ்பெற்று விளங்கிய நல்லிசைப் புலவர்கள் ஓமர், தாந்தே, செகப்பிரியர், மில்டனார், கீதே, காளிதாசர் முதலியோரும், நஞ்செந்தமிழில் திருவள்ளுவர், நக்கீரனார், இளங்கோவடிகள், கூலவாணிகன் சாத்தனார், மாங்குடி மருதனார், கபிலர், சேக்கிழார் முதலானோரும் பண்டைக் காலத்துப் பழந்தமிழ்ப் புலவருமேயாம். இன்னும் இதனை விரிப்பிற் பெருமாதலின், யாம் எழுதிய திருக்குறளாராய்ச்சி, பட்டினப்பாலை ஆராய்ச்சி, முல்லைப்பாட்டு ஆராய்ச்சி முதலியவற்றினும், எமது ஞானசாகரப்பத்திரிகையினும் மிக விரிந்த பகுதிகளிற் கண்டுகொள்க.

பண்டிதர். நாகை வேதாசலம் பிள்ளை.

ஆரியர்களின் ஸங்கீதமுறை

SCIENCE OF ARYAN MUSIC

முகவுரை

ஆதிகாலம் தொட்டு மனிதர்கள் ஸங்கீத விஷயத்தை ஏதோ ஒரு மாதிரியாக வைத்திருந்தார்கள் என்பது யாவர்க்கும் தெரிந்ததுதான். **தேம்மாங்கு** என்று வழங்கும் வண்டிக்காரர்களின் கானம் ராமேச்வரம் பயணம் போனவர்களும் வேறு இரவில் பயணம் அல்லது ரோட்டு மார்க்கமாய்ப் போகிறவர்களும் கேட்டிருக்கலாம். பெரிய கட்டிடங்கள் கட்டும்போது சுண்ணாம்பு இடிக்கிற கீழ்ஜாதிப் பெண்களின் கானத்தையும் நாம் கேட்டிருக்கிறோம் அல்லவா? இம்மாதிரிப்பாட்டு முதல் ஸங்கீத வித்வான்கள் பாடும் **ராகம், பல்லவி** வரையில் இந்தத் தேசத்தில் வழங்குங் கானத்தின் எல்லையென்று சொல்லலாம்.

ஆனால், இந்த வித்தை யாவரும் எளிதில் தெரிந்துகொள்ளக் கூடியதாக விருந்தாலும், இந்தக் காலத்தில் வேறு வித்தைகள் எப்படிச் சரியாய் ஆராய்ந்து அறியப்படுகிறதில்லையோ, அதே மாதிரி இதுவும் அறிந்துகொள்ள சிரமம் எடுப்பாரில்லாமல் இருக்கிறது. திருஷ்டாந்தமாக, வாரத்தில் உள்ள ஏழு கிழமைகளின் பெயர்களை யறிந்தவன் ஜோதிஷ சாஸ்திரம் முழுதும் அறிந்ததாக வெண்ணுகிறான். அதுபோலவே, காம்போதி, சங்கராபரணம் என்ற இரண்டு ராகங்களின் பெயர்களை யறிந்தவன் ஸங்கீத சாஸ்திரத்தின் கரைகண்டதாக நினைத்துக்கொண்டு "நஹிவந்த்யா விஜாநாதி குர்வீம் ப்ரஸவவேதநாம்" "பிள்ளை பெறும் சிரமத்தை மலடியா அறிவாள்?" என்னும் பழமொழிக்கிணங்க, வெகு சிரமப்பட்டு ஊழியம் செய்து இந்த அருமையான வித்தையை அப்பியஸித்தவர்களைப்பற்றி குணதோஷம் கூறுவது வழக்கமாக இருக்கிறது. இந்தவித்தையோ, மனிதனுக்கு ஈசன் தந்தருளியிருக்கும் அதி நுட்பமான ஞானேந்திரியமாகிய காதின் மூலமாய் அடையும் சுகத்துக்குக் காரணமானது. வைராக்கிய ஸம்பத்தோடு கூடிய க்ஷேத்

431

திரஞ்ஞருடைய தெவிட்டா ஆநந்தத்தைத் தரும் பதங்களைக் கேட்டு ஸந்தோஷப் படாதவரில்லை. ஸ்ரீமான் ராமபக்த சிரோமணியாகிய திருவையாறு தியாகராஜய்யர் அவர்கள் கீர்த்தனங்களைக் கேட்டு ஆநந்திக்காதவர் யார்?

மேலே சொல்லியவாறு, கானாமிருதத்தை அனுபவிப்போர் இருந்தும், நாம் பேசிவழங்கும் பாஷையில் கானவித்தையின் ஸ்வரூபத்தை யாவருக்கும் நன்றாய் விளக்கும்படியான நூல்களே இல்லை. புஸ்தகம் இல்லாதபோது வித்தையை அறிந்துகொள்ள இடமில்லாமல் போகிறது. என்றாலும், யாராவது கொஞ்சம் சிரமம் எடுத்துக் கொண்டு இந்தவித்தையின் சிலபாகங்களையாவது எடுத்தெழுதி யிருந்தால், அதை வாசிக்கநேரிடும். தெரிந்தவித்துவான்கள் அதிலுள்ள குறைகளை எடுத்துரைத்து அதுமூலமாய் இந்தசாஸ்திரம் ஒன்று ஏற்படுத்த இடமுண்டாகும் என்ற எண்ணத்தை மேற்கொண்டு, நான் என் சிற்றறிவிற் கெட்டியவரையில் ஸங்கீத விஷயங்களை எழுத ஆரம்பிக்கிறேன்.

ஸ்வரங்கள்

மனிதராகிய நாம் வார்த்தை சொல்வதாகிய ஒருவித சப்தத்தைச் செய்கிறோம். அதேமாதிரியாகப் பிராணிகளும் அவை அவை வெவ்வேறு விதமான சப்தத்தைச் செய்கின்றன. இன்னமும், ஒரு மெல்லிய மூங்கில்கழியால் ஒருபலகையில் தட்டினால் ஒருவித சத்தம் நம் காதில் விழுகிறது. பறையர்கள் தம் தமுக்கில் உண்டாக்கும் சத்தத்தையும் நாம் கேட்கிறோம்.

இவ்விதமாய் உண்டாகும் சத்தத்தின் விஷயங்களை நாம் அறியவேண்டுமானால் ஐரோப்பிய சாஸ்திரிகள் அநுபோகஸித்தமாய் எழுதியிருக்கும் சுருதிசாஸ்திர (Acoustics) த்தைப் பார்த்துத் தெரிந்துகொள்ளவேண்டும்.

நாம் கவனிக்குமளவில் மேலே கண்டெழுதிய சத்தமெல்லாம் சப்திக்கும் வஸ்து எதுவோ அதன் **வேபநம்** (Vibration), அதாவது நடுக்கத்தால் உண்டாகிறது என்று காணலாம். உதாரணமாக, ஒருபிட்டில் வாத்தியத்தின் ஒருதந்தியை நமது ஒருவிரலால் பிடித்து இழுத்துத்தள்ளி விட்டால் அந்தத்தந்தி கொஞ்சநேரம் சத்தித்துக்கொண்டு அப்படியும் இப்படியும் அசைகிறதைக் கண்ணால் பார்க்கிறோம்.

இப்படி உண்டாகும் சத்தங்களில் **உச்சமானவை** சில, **நீசமானவை** சில. சாதாரணமாய், வளர்ந்த மனிதர்களின் பேச்சைக் கவனித்தால் அந்தச்சப்தம், அதேவயதுள்ள ஒரு ஸ்திரீ பேசும் பேச்சினால் ஏற்படும் சத்தத்தைவிட நீசமாயிருக்கிறது என்பதை நம்காதால் கேட்டு உணரக் கூடியது தான்.

இந்த **உச்சம், நீசம்** என்னும் வித்தியாஸம் என்ன? எவ்விதம் உண்டாகிறது? என்று கவனித்தால், உச்சமான சப்தம் அந்தச்சப்தத்துக்கு ஆதாரமான வஸ்து எதுவோ அது எவ்விதமாக வேபநம்செய்கிறதோ அதினாலே தான் உண்டாகிறது. **ஒரு குறிப்பிட்ட அவகாசத்தில் கோஞ்சம் தடவை வேபநம் செய்தால் நீசமான சப்தத்தை உண்டாக்கும். அதே அவகாசத்தில் அநேகம் தடவை வேபநம் செய்தால் உச்சமான சப்தத்தை உண்டாக்கும்.** ஒரு ஸெகண்டு நேரத்தில் ஒரு பிட்டில் தந்தி 120 தடவை வேபநம் செய்தால் அப்போது உண்டாகும் சப்தம் அதேதந்தி அதே அவகாசத்தில் 240 தடவை வேபநம் செய்வதால் உண்டாகும் சப்தத்தைவிட நீசமானதா யிருக்கும் (**உச்சநீசம் என்னும் வித்தியாஸம் காதே அறியக் கூடியது. அந்த வித்தியாஸத்திற்குக் காரணம் மேலே சொன்னதாம்.**

மேலே சொன்னமாதிரி காதால் கேட்டறியும் சப்தங்களை ஊஹத்தோடு அறியவல்லவர்கள் ஸங்கீதத்தில் வழங்கிவரும் சப்த ரூபங்களின் நிலையைப் பின்வருமாறு இருப்பதாகச் சொல்லுகிறார்கள். என்னவென்றால், ஸ்வரம் என்னும் ஸங்கீத சாஸ்திரத்தின் லிபியானது உச்சம் நீசம் என வித்தியாஸத்தோடு அமைந்திருக்கிறதாகச் சொல்லுகிறார்கள். **ஸ ரி க ம ப த நி**

என்று ஏழுவிதப் பெயர்களைச் சொல்லும்போது, நாம் பேசும் குரலை ஸ வென்னும் அளவுள்ளதாக வைத்துக்கொண்டால், அதாவது பேசும் காலத்தில் உண்டாகும் சத்தம் எவ்வளவுதரம் வேபநம் செய்வதால் உண்டாகுமோ அந்த அளவுள்ள படிக்கே ஸ என்று வாயால் சொன்னால், ரி என்பது அதைவிட உச்சமாகச் சொல்லப்படும். எனவே ரி என்பது ஸ வைவிட அதிகமான வேபநத்தினால் உண்டாக்கப்பட்டது. அதேமாதிரி க, ம, ப, த, நி, என்னும் ஸ்வரங்களும் முன்னே சொல்லப்பட்ட ஸ்வரத்தைவிட முறையே உச்சமானதாகும்.

இந்த ஏழு பெயர்களையும் கவனித்த பிறகு எட்டாவது ஒரு உச்சமான சத்தம் சொல்லும்போது ஸ' (மேல் குறிப்பிட்ட ஸ) என்னும் பெயரைத் திரும்பவும் சொல்லுகிறார்கள். அதற்குக் காரணம் என்னவென்றால் ஸ என்று முதலில் சொன்ன மாதிரியும், இரண்டாவது தரம் சொன்னமாதிரியும் வேறாக இருந்தாலும், இரண்டு மனிதர்களை விட்டு ஒருவரை முதல் ஸ வைச் சொல்லச் செய்து, மற்றொருவரை இரண்டாவது ஸ வை அவருடன் சேர்ந்து சொல்லும்படி செய்தால், காதில் விழும் காலத்தில் இரண்டு ஸ்வரங்களும் ஒத்திருப்பதாகத் தெரிகிறது. அது மாத்திரமல்ல; வேறுதான் என்று சொல்லமுடியாத ஸ்திதியில் இருப்பதாகச் சொல்லலாம்.

மேலும், முதல் ஸ 120 வேபநங்களால் உண்டாக்கப்பட்டால் இரண்டாவது ஸ அதற்குச் சரியாய் இரண்டுமடங்கு, அதாவது 240 வேபநங்களால் உண்டாகிறது.

இந்த யுக்தியை உபயோகித்தே, நாம் பேசும் பேச்சு என்ன அளவுள்ளதோ அதற்குச் சரிபாதி அளவுள்ளதாக, அதாவது, 60 வேபநங்களால் உண்டாகும் ஒரு ஸ வும் இருக்கலாமல்லவா? அந்தமாதிரி உண்டாகும் ஸ்வரத்துக்கு ஸ, (கீழ்க் குறிப்பிட்ட ஸ,) என்றுஸௌகரியார்த்தமாகஸங்கேதம் வைத்துக்கொள்வோம்.

ஆகவே, மூன்று வரிசை ஸ்வரங்கள் உண்டாகின்றன:—

(1) ஸ, ரி, க, ம, ப, த, நி,

(2) ஸ ரி க ம ப த நி

(3) ஸ' ரி' க' ம' ப' த' நி'

என்று மூன்றுவிதமான ஸ்வரங்கள் உண்டாகும். இரண்டாவது வரிசை ஸ்வரங்கள் **ஒருமடங்கு** வேபநத்தால் உண்டானால், முதல் வரிசை ஸ்வரங்கள் அதற்குச் **சரிபாதிமடங்கு** வேபநத்தாலும், மூன்றாவது வரிசை ஸ்வரங்கள் அதற்கு **இரண்டு மடங்கு** வேபநத்தாலும் உண்டாகின்றன.

இதையே மூன்று **ஸ்தாயி** என்று வழங்குகிறார்கள். முதல் வரிசை ஸ்வரங்களுக்கு **மந்த்ர ஸ்தாயி** ஸ்வரங்களென்றும், நடுவரிசை ஸ்வரங்களுக்கு **மத்தியஸ்தாயி** ஸ்வரங்களென்றும், மூன்றாவது வரிசை ஸ்வரங்களுக்குத் **தாரஸ்தாயி** ஸ்வரங்களென்றும் பெயரிட்டு வழங்குகிறார்கள். (**குறிப்பு**.—ஒரு மனிதன் சாதாரணமாய்ப்பேசும் போது அவனது முகம் ஒரு பலானநிலையில் நிற்கிறதல்லவா? அப்போது உச்சரிப்பதை * ஷட்ஜம் என்று நாம் நினைத்துக்கொண்டால், அந்த மனிதனை **தாரஸ்தாயி**ஷட்ஜம் உச்சரிக்கும்படி செய்தால், அவன் முகம் கொஞ்சம் **மேல் நோக்குவதை** நாம் பார்க்கலாம். அதேமாதிரியாய், அம்மனிதனை **மந்த்ரஸ்தாயி**ஷட்ஜம் உச்சரிக்கும்படி செய்தால் அவன் முகம் கொஞ்சம் **கீழ் நோக்குவதைக்** கண்டுகொள்ளலாம்.)

ஸ்வரங்களில் வேபநங்கள் ஜாஸ்தியாவதினால் உச்சமாகவிருக்கும் தன்மை ஏற்படுகிறது என்று சொன்னோமல்லவா? அதுமாத்திரமல்ல. வேறு இரண்டு காரணங்களாலும் முன் சொன்னமாதிரி ஸ்வரம் உச்சமாகும்.

ஒரு வீணை வாத்தியத்தை வாசிக்கும்போது கவனித்தால், ஸாரிணீ(ஸாரணை என்னும் வலது கைவிரல் மட்டும் மீட்டுவதால் ஷட்ஜத்தைத்

* ஷட்ஜம்=ஸ.

தரும் தந்தியை வலதுகைவிரலால்மீட்ட ஸ என்னும் ஸ்வரத்தைத்தருகிறது. ரி என்னும்அதற்கு அடுத்த உச்சமான ஸ்வரத்தை வாசிக்கவேணுமானால் அந்த வாத்தியத்தில் ஏற்பட்டிருக்கும் கிருஹம் (Fret) என்றும் வீடு என்றும் சொல்லப்பட்ட அடுத்த இடத்தில் இடதுகை விரலை வைத்துத் தந்தியை அமர்த்திக்கொண்டு வலதுகைவிரலால் மீட்ட அந்த ஸ்வரத்தை நாம் கேட்கிறோம். இதிலிருந்து நாம் அறியவேண்டியது யாதெனில்—ஒரு **தந்தியின் நீளம்குறையக் குறைய அது தரும் ஸ்வரம் வரவர உச்சமாகும்.**

மேலும், ஒரு தம்புரா வாத்தியத்தின் தந்தி சப்திக்கும் சப்தத்தை உச்சமாகச் செய்ய விரும்பினால், அதாவது, **சுருதியை ஜாஸ்தி செய்ய வேணுமானால்,** அதன் பிரிடையை முடுக்குகிறார்களல்லவா? அதாவது, அதன் தந்தியை இழுக்கிறார்கள். அப்படி இழுப்பதினால் ஸ்வரம் உச்சமாய் விடுகிறது. ஒரு தந்தியை இழுத்தால்—நீளத்தைக் கொஞ்சம் குறைத்து இழுத்துக்கட்டினால் அதுதரும் ஸ்வரம் உச்சமாகிறது. முன் சொன்னபோது தந்தி இழுக்கப்படவில்லை. இப்பொழுது இழுக்கப்படுவதனால் ஸ்வரம் உச்சமாய் மாறுகிறது. அதாவது **தந்தியை இழுத்தல்** (Tension) ஸ்வரத்தை உச்சமாக மாற்றிவிடும்.

மேலே சொல்லிய ஸ்வரங்களுக்கு ஸங்கீத சாஸ்திரங்களில் இட்டிருக்கும்பெயர்களாவன:—

ஷட்ஜம்—ஸ என்று ஸங்கேதமுள்ளது
ரிஷபம்—ரி ஷை
காந்தாரம்—க ஷை
மத்தியமம்—ம ஷை
பஞ்சமம்—ப ஷை
தைவதம்—த ஷை
நிஷாதம்—நி ஷை

ஆகேவே, **ஸ** என்பது முதல் **ஸ'** வரைக்கும் பன்னிரண்டு ஸ்வரஸ்தானங்கள் இருக்கின்றன வென்று வீணைமுதலிய வாத்தியங்களைக் கொண்டும் காதினாலும் அறிந்துகொள்ளலாம். அந்தப்பன்னிரண்டு ஸ்தானங்களிலும் உள்ள ஸ்வரங்கள் பின்வருமாறு:—



[சித்திரம் 1.]

(1) ஸ—ஷட்ஜம்
(2) ரி'—சுத்தரிஷபம்—
(3) ரி—சதுச்சுருதிரிஷபம்
(4) க'—ஸாதாரண காந்தாரம்
(5) க—அந்தரகாந்தாரம்
(6) ம—சுத்தமத்தியமம்
(7) $ம_2$—பிரதிமத்தியமம்
(8) ப—பஞ்சமம்
(9) த'—சுத்த தைவதம்
(10) $த_2$—சதுச்சுருதிதைவதம்.
(11) நி'—கைசிகநிஷாதம்.
(12) நி—காகலிநிஷாதம்.

3-வது, 4-வது, 10-வது, 11-வது வீடுகளில் உண்டாகும் ஸ்வரங்களுக்கு இரண்டு பெயர்கள் வழக்கத்திலிருக்கின்றன. (சித்திரம் பார்க்க) அவை முறையே:—

$க_0$—சுத்தகாந்தாரம்
$ரி_2$—ஷட்சுருதிதைவதம்
$நி_0$—சுத்தநிஷாதம்
$த_2$—ஷட்சுருதிதைவதம்

என்ற இரண்டாம் பெயர்களைப் பெறுகின்றன.

இந்தப்பன்னிரண்டு ஸ்வரங்களுக்கும் சாஸ்திரீயமாக ஏற்படும் வேபநங்கள் பின்வருமாறு யிருக்கின்றன.

* ஸ—வுக்கு 120 வேபநமிருந்தால்
ரி'— க்கு 128 வேபநமாகிறது.
ரி — க்கு 135 ஷை
க'— க்கு 144 ஷை
க —வுக்கு 150 ஷை
ம —வுக்கு 160 ஷை
$ம_2$—வுக்கு 169 ஷை
ப.—வுக்கு 180 ஷை
த'— க்கு 192 ஷை
த —வுக்கு 202 ஷை
நி'— க்கு 216 ஷை
நி — க்கு 225 ஷை

பி. எஸ். சுந்தரமய்யர் பி.ஏ., எல்.டி.

* இந்த ஸங்கேதங்களை நான் மகா-ள-ள-ஸ்ரீ ராவ்பகதூர் நாகோஜிராயர் அவர்களது புஸ்தகத்திலிருந்து இரவல் வாங்கியிருக்கிறேன்.

மலைகளும் அவைகளின் வகுப்புகளும்

ROCKS AND THEIR CLASSIFICATION

மேற்கூறிய பூமியின் மேற்பரப்பின் நில பாகம் என்ன வஸ்துக்களால் ஆனவை? அப்பாகத்திற்தான் மலைகளும், குன்றுகளும், பாறைகளும், கற்களும், மணலும், அதில் அதிகப்படும் நிலக்கரி, இரும்பு, செம்பு, பொன், வெள்ளியாகிய உலோகங்களும், அதில் வசிக்கும் பிராணிகளும், செடிமரங்களு மிருக்கின்றன. இவ்வஸ்துக்களெல்லாம் இப்பொழுதிருக்கிறபடியே ஆதி முதல் இருந்து வருகின்றன வென்றும், இப்படியே கடவுள் உலகத்தை சிருஷ்டித்தாரென்றும் சிலர் எண்ணக்கூடும். நமது வாழ்நாட்களில் நடக்கின்ற காரியங்களையும், அவைகளின் காரணங்களையும், ஊக்கத்துடன் கவனித்து ஆராய்ந்தால் உண்மை விளங்கும். இவ்வஸ்துக்கள் பல காரணங்களால் அடிக்கடி மாறுபாடடைந்து வேறு புதிய உருவங்கள் தரித்துக் கொள்கின்றன. இன்று நாம் பார்க்கும் பெரும்பாறைகள் கொஞ்ச காலத்திற்கெல்லாம் சிறு கற்களாக உடைந்து போகின்றன முன் பாறையிலிருந்து வந்த கற்கள் அநேக காரணங்களால் சிறிது காலத்திற்கெல்லாம் சிறு மணலாகின்றன. இவ்விஷயம் நமக்கு நன்றாய்த் தெரியும். இம்மாறுபாடுகளை உண்டாக்கும் காரணங்களைப் பற்றி பிறகு கவனிப்போம்.

இவ்விடத்தில் 'மலைகள்' என்னும் பதத்தை, சாதாரணமாய் உலகவழக்கத்திலிருப்பதுபோல் உபயோகிக்காமல், பூமியின் நிலப்பரப்பிலுள்ள பல உலோகங்கள் சேர்ந்த ஒரு திடமானதொகுதிக்கே உபயோகிப்போம். அதாவது, களிமண்ணாகிய ஒரு இறுகிய சேர்க்கையும்,மணல்மேடுகளும், நிலக்கரித் தொகுதியும், சீமைச்சுண்ணம்புக் குன்றுகளும் மலைகளே. ஆகையால், சில மலைகள் திடமாயும் கடினமாயுமிருக்கின்றன. சில தளர்ச்சியாயும் உதிராயுமிருக்கின்றன. சில மலைகள் மிகவும் உயரமாயிருக்கின்றன. நமது தேசத்தின் வட எல்லையாய் இருக்கின்ற இமாலய மலையிலுள்ள 'எவரெஸ்த்து சிகரம்' 29,000 அடி உயரமுள்ளது.

இப்படிப் பூமியிலுள்ள மலைகளைச் சில வகுப்புகளாகப் பிரிக்கலாம்.இவைகளில் அடங்கியிருக்கும் உலோகங்களிலிருந்தும், அல்லது, இவைகளின் உற்பத்தியைக் கொண்டும், இவைகளை வகுப்புகளாகப் பிரிக்கக்கூடும்.

இம்மலைகளின் உற்பத்தி ஸ்தானத்தை நோக்குங்கால், இவைகளை இரண்டு வகுப்புகளாகப் பிரிக்கலாம். அவையாவன.

(1) பூமியின் மேற்புறத்தில் உண்டாகிற மலைகள்

(2) பூமியின் கீழ்ப்புறத்தில் உண்டாகிறமலைகள்

இவைகளுள் முதலாவது, சமுத்திரம், ஏரிகள், ஆறுகள் முதலியவைகளிலுள்ள நீரின் செயல்களாலும், எப்பொழுதும் இடைவிடாது அடித்துக்கொண்டிருக்கும் காற்றின் செயல்களாலும் உண்டாகிற மலைகளையும், பூமியின்மேலுண்டாகிற எரிமலைகளையும், இவைகளின் செயல்களாலுண்டாகிற மலைகளையும் குறிக்கும். பூமியின்கீழ்ப்புறத்தில் உண்டாகிற மலைகள் இன்னவென்று பார்க்கச் சிறிது ஆச்சரியமாயிருக்கக்கூடும். நாம் பார்க்கும் மலைகளெல்லாம் பூமியின் மேற்புறத்திலேயே பார்க்கிறோமே? அம்மலைகளின் அடிபாகங்கள் பூமியின் கீழ்ப்புறத்திலிருக்கின்றன. ஆனால் இப்பொழுது மலைகள் எங்கு இருக்கின்றனவோ, அதிலிருந்து அவைகள் அங்கு உண்டானவையென்று நாம் சொல்லுதல் கூடாது. பூமியின் கீழ்ப்புறத்தில் அநேக விடங்களிலிருக்கும் நிலக்கரிக் குவியல்களெல்லாம் ஒரு காலத்தில் பூமியின் மேற்புறத்திலிருந்தவையே. மேற்புறத்திலிருக்கும் பலவிதமானகருங்கல்மலைகளும் முதலில் கீழ்ப்புறத்திலுண்டானவை.

இப்பூமியினுட்பக்கத்திலுண்டாகிறமலைகளுள். கருங்கல் மலைகளைத்தவிர, வேற்றுருவம் தரித்த மலைகளும் அநேக மிருக்கின்றன. இம்மலைகள்

பல காரணங்களால் தங்கள் உருவம் மாறி வேற்றுருவம் தரிக்கின்றன. இவ்வுருவம் மாறினமலைகளிற்றான் சாதாரணமாய், அநேகவித உலோகங்கள் அகப்படுகின்றன. இப்படி மலைகளைச் சாதாரணமாய் பின்வருமாறு பிரிப்பது இயல்பு.

(1) நீர் சம்பந்தத்தாலுண்டாகிய மலைகள்

(2) அக்கினிப் பர்வதங்களும், அவை சம்பந்தமான மலைகளும்.

(3) கருங்கல் மலைகள்.

(4) வேற்றுருவம் தரித்த மலைகள்.

இம்மலைகளையும், அவைகளிலுள்ள கற்களையும் நாம் கவனிப்பதினால், அவைகளின் சரித்திரங்களைத் தெரிந்துகொள்வதுமல்லாமல், அவைகளிருக்கும் பூமியின் சரித்திரத்தையும் அறிவோம். இம்மலைகளும், கற்களும் பூமியின் சரித்திரம் எழுதப்பட்டுள்ள புத்தகங்களாகின்றன. ஆனால் இச்சரித்திரம் எழுதப்பட்டுள்ள பாஷையைத் தெரிந்துகொண்டாலல்லவோ, மலைகளாகிய புத்தகங்களை நாம் படிக்கக்கூடும்? அப்பாஷையை இங்குக் கற்றுக்கொள்வதே நம்முடைய கருத்தாகும். உதாரணமாக, நீர் சம்பந்தத்தாலாகிய மலைகளை யெடுத்துக்கொண்டு, இம்மலைகள் பூமியின் சரித்திரத்தை எவ்வாறு தெரிவிக்கின்றனவென்று பார்ப்போம். இம்மலைகள் சமுத்திரம், ஆறுகள், ஏரிகள் முதலியவையின் வண்டல்களாகிய பளிங்குக் கற்கள், பருக்கைக் கற்கள், மணல், களிமண், ஆகிய இவைகள் திரட்டப்பட்ட சேர்க்கையாலாகிய மலைகளென்று இவைகளின் பெயராலே விளங்கும்.

இப்பொழுது ஒரு ஆற்றிலுள்ள மணலையும், கற்களையும், அவ்வாற்றின் உற்பத்தியிலிருந்து முடிவுவரையில் கவனித்துப் பார்ப்போம். ஆற்றின் தலைப்பக்கங்களிலெல்லாம், மிகப் பெரியவும், உருண்டையான மழமழப்புள்ள கற்கள் மிகுந்திருக்கக் காண்கிறோம். மறுபடி ஆற்றின் கீழ்ப் போகப்போக, கற்கள் சிறியதாகின்றன. பிறகு நுட்பமான மணலைப் பார்க்கிறோம். இம்மணல் சற்றேறக் குறைய உருண்டைவடிவமாயிருப்பதை, ஒரு பூதக்கண்ணாடியைக் கொண்டு நன்றாய்ப் பார்க்கலாம். நமது காவிரி நதியைப் பார்த்தால், மைசூர் இராஜ்ஜியப் பக்கத்திலெல்லாம் நதி நிறைய பெரும்பாறைத்துண்டுகளாயிருக்கின்றது.

இன்னும் சிற்சில விடங்களில் நதி பாறைகளின்மீதே விழுந்து ஓடுகின்றது. அக்காவிரி நதியை கோயம்பத்தூர் ஜில்லாவில் பார்த்தால், பெரிய பளிங்குக்கற்களும், கற்கள் என்றே சொல்லக்கூடிய பெரும்மணல்களும் நிறைந்திருக்கக் காணலாம். பிறகு திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் ஜில்லாக்களில் பார்த்தால் கற்கள் குறைந்து மணல் வரவர அதிகரிப்பதுமல்லாமல், பொடியாகவும் காணப்படுகின்றது. இம்மாறுபாடுகளைப்பற்றிச் சற்று யோசிக்கும்போது, இவைகள் நதியின் நீரால் உண்டானவையென்று தெரிகிறது. முதலில் பாறைகளுடைவதற்கும்,பெருங்கற்கள் சிறியவையாவதற்கும், மறுபடி இவைகள் மணலாவதற்கும் இந்நதியின் நீரோட்டமே காரணம். அல்லாமலும், நீரோடும்போது, கற்களையும் பெரும்மணலையும் உருட்டி, ஒன்றோடொன்று தேய்த்துக்கொண்டே போவதால், இவைகளுக்கு ஒருருண்டை வடிவமும், மழமழப்பும் உண்டாகிறது. ஆகையால் ஒரு மலையில் உருண்டையான பளிங்குக்கற்களும், கூழாங்கற்களும் அதிகமாயிருந்தால், இவை ஓட்டமுள்ள நீரின் செயல்களால் இம்மாதிரி செய்யப்பட்டு, இங்குச் சேர்ந்து இருத்தல் வேண்டுமல்லவா?

இப்பொழுது அம்மலைக்குச் சமீபத்தில் பெரும் ஆறுகள் ஒன்றுமில்லாவிட்டாலும், இது அங்குண்டாவதற்கு முன்னாவது அப்பக்கம் நதிகள் ஓடியிருக்க வேண்டும். அல்லது, ஒரு ஆறு வண்டல்களை அடித்துக்கொண்டு ஒரு ஏரியில் தள்ளியிருக்கக்கூடும். அப்படி ஏராளமான வண்டல்களும், கற்களும் தள்ளப்பட்ட பிறகு, ஏரி வற்றிப்போய், பூமி உயர்ந்து இம்மலை உண்டாயிருத்தல் கூடும். அப்பொழுது

இம்மலையில் அநேகப்படைகள் அல்லது வரிசைகள் காணப்படும். மலையின் கீழ்ப்படை அநேகமாய்ப் பெருங்கற்களாலாகியதா யிருக்கும். அதற்குமேல் மணலாலாகிய படையைக் காணலாம். மேற்படை மிக ஸன்னமான களிமண்ணு யிருக்கும். இது எப்படி? ஒருபெரிய ஆழமான பாத்திரத்தில் கொஞ்சம் கற்களையும், மணலையும், களிமண்ணையும் போட்டு, பாத்திரம் நிறைய ஜலம் விட்டு அவைகளை நன்றாய்க் கலக்கவும். பிறகு சற்று நேரத்திற்கெல்லாம் அப்பாத்திரத்தைப் பார்த்தால், கற்களெல்லாம் கீழே போய் படிந்திருக்கும். மணல் கீழே படிவதற்கு மெல்ல போய்க்கொண்டிருக்கும். மண் ஜலத்தில் இன்னம் மிதந்துகொண்டிருக்கும். மறுபடி கால் மணி நேரத்திற்கெல்லாம் திரும்பப் பார்க்கவும். இப்பொழுது மணலும் மண்ணும்கூட நீரில் படிந்திருக்கும். இப்படிக் கீழே படிந்திருக்கும் வண்டலை கவனித்தால் ஒன்றின்மேல் ஒன்றாகப் படைப்படையாக அடுக்கப்பட்டிருப்பதைப் பார்க்கலாம். நாம் முதலில் எடுத்துக்கொண்ட பாத்திரம் கண்ணாடி பாத்திரமாயிருக்கக் கூடுமாயின் இது மிக நன்றாய் விளங்கும். கனமான கற்கள் சீக்கிரம் போய்ப் படிகின்றன. இலேசாயும், பொடியாயுமுள்ள மணலும், மண்ணும் மெதுவாய் ஒன்றின்பின் ஒன்றாய்ப் படிகின்றது. இதே காரணத்தால் சில நீராலாகிய மலைகளும் படைகளாகக் காணப்படுகின்றன. ஆகையால், இப்படையுள்ள மலைகள் இருக்குமிடத்தில் ஏராளமான நீர் இருந்திருக்கவேண்டுமென்னும் சரித்திரத்தை இவைகள் விளக்குகின்றன. இப்படைகளாக அடுக்கப்படுவது வேறு காரணங்களாலும் உண்டாவதுண்டு. ஒருதரம் முதல்படை உண்டாக, பிறகு அது காய்ந்து இறுக, மறுபடி அதன்மேல் மற்றொருபடை புதிதாகச் சேர்க்கப்படலாம். இப்படைகள் ஒரே வஸ்துக்களாலான போதிலும், அவைகள் உண்டாகிய காலவித்தியாசத்தால் இவ்விரண்டும் ஒரே படையாகக் காணப்படாமல், வெவ்வேறாகக் காணப்படுகின்றன. இப்படிப் பூமி சரித்திரத்தைத் தெரிவிப்பதில் முக்கியமானவை சில ரூபங்களையுடையமலைகளே.

எம். ஆர். சுப்பிரமண்ய அய்யர் பீ. ஏ.

தேகதத்வ சாஸ்த்ரம்

PHYSIOLOGY

(தொடர்ச்சி)

ஹிருதயமாத்திரம் இவ்விரண்டு வகுப்பிலும் சேராமலிருக்கிறது. இச்சைக்குக் கட்டுப்படாமலிருந்தபோதிலும் வரித்தசை நாரினாற் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் ஹிருதயத்தின் தசைநார்கள், சரீரத்தில் மற்ற இச்சைக்குட்பட்ட தசை நார்களைப் போல் ஒரே குழலாக இராமல் கிளைகளை யுடையனவாய் இருக்கின்றன.

இவ்விதத் தசை நார்க் கூட்டங்கள் சேர்ந்து பின்னி யுண்டாயிருக்கும் ஹிருதயத்தின் சுவர்கள், அந்நார்கள் சுருங்கும்பொழுது, கனம் அதிகப்பட்டு விஸ்தீரணம் குறையவும், ஒன்றோடொன்று சேரவே அவைகளுக்கு நடுவிலிருக்கும் இரக்தம் வெளியே தள்ளப்படுகிறது. இப்படித் தள்ளப்படுகிற ரக்தம் ஒரே வழியாகச் செல்ல சில உபாயங்கள் ஏற்பட்டிருக்கின்றன. முதலில் ஆரிகிள் (மேலறை) களை யெடுத்துக் கொள்வோம். வலது பக்கத்தில் இவ்வறையில், **மேல்வீனகாவா, கீழ்வீனகாவா** என்ற இரண்டு பெரிய கறுப்பு ரக்தக் குழாய்களும், **கரோனரிவேயின்** என்ற ஹிருதயத்தின் சுவர்களிலிருந்து வரும் ஒரு சிறு கறுப்பு ரக்தக்குழாயும் வந்து சேருகின்றன. இவைகளில் கரோனரிவெயின் துவாரத்தில் மாத்திரம் ஒரு அடைப்பு இருக்கிறது. மற்றப் பெரிய குழாய்களில் ரக்தம் ஆரிகிள் சுருங்கும்போது திரும்பாமலிருக்க அவைகளில் மேலும் மேலும் வந்துகொண்டிருக்கும் ரக்தத்தின் எதிர்ச்சியும், கீழே தளர்ச்சியாயும் காலியாயும் இருக்கும் கீழறைக்குள் செல்ல ஒரு தடையும் இல்லாமலிருப்பதுமே. மேலும் ஆரிகிளின் சுருக்கம் இக்குழாய்களின் துவாரத்தில் முதல் முதல் ஆரம்பித்துக் கீழ் நோக்கிச் செல்வதினால் ரக்தத்துக்குக் கீழறை நோக்கிய ஓட்டமே உண்டாகிறது. இப்படியே தான் இடது பக்கத்திலும்.

கீழறை சுருங்கும்பொழுது அதின் ரக்தம் மேலறைக்குள் திரும்பாமலிருக்க மூன்றிலைகள் சேர்ந்த ஒருமூடி வலதுபக்கத்தின் இரண்டறைக்கும் நடுவில் உள்ள துவாரத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது. இதைப் போலவே இடது பக்கத்தில் இரண்டிலைகளுள்ள மூடியிருக்கிறது. இவைகள் முக்கோண ரூபமாய், அடியில் மேலறைக்கும் கீழறைக்கும் உள்ள துவாரத்தின் பக்கங்களில் ஒட்டியும், நுனியில் மெலிதாயும் பலமாயுமுள்ள சவைக்கயிறுகளால் கீழறையின் உட்புறத்தில் நுழைத்துக்கொண்டிருக்கும் தசைநார்க்கூட்டங்களின் நுனிகளில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. ரக்தம் மேலறையிலிருந்து கீழறைக்கு வந்ததும், இம்மூடிகளுக்கும் கீழறையின் சுவர்களுக்கும் நடுவில் சென்று அவற்றை மேலே தள்ளுகின்றன. இப்படி மேல் தள்ளப்பட்ட மூடிகள் துவாரத்து மட்டத்தில் வரும்போது ஒன்றோடொன்று சேர்ந்து துவாரத்தை யடைக்கின்றன. துவார மட்டத்திற்குமேல் செல்லாமல், அவற்றின் நுனிகளைச் சுவரில் சேர்த்திருக்கும் சவைக்கயிறுகள் தடுக்கின்றன. அறை சுருங்கும்பொழுது இக்கயிறுகள் தளர்ந்துபோவதைத் தடுக்கவே, இவைகள் நேரே சுவரில் சேர்க்கப்படாமல், நீட்டிக்கொண்டிருக்கும் தசைநார்க் கூட்டங்களின் நுனியில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. அறையானது சுருங்கும்பொழுது, இத்தசை யெழுச்சிகளும் சுருங்கி மட்டமாவதால், சவைக்கயிறுகள் தளராமல், மூடிகளைப் பலமாக இழுத்துப் பிடிக்கின்றன.

இப்படி மேலறைக்குத் திரும்பமுடியாமல் தடுக்கப்பட்ட ரக்தமானது, வலது பக்கத்தில் பல்மொனரி ஆர்டெரியிலும், இடது பக்கத்தில் அயோர்டிவிலும் தள்ளப்படுகிறது. இப்படித் தள்ளப்பட்ட ரக்தத்தை யேற்றுக்கொள்ள, அந்தக் குழாய்கள் விரியக்கூடிய பதார்த்தத்தினால் செய்யப்பட்டிருப்பதினால், முன்னமேயே ரக்தம் நிரம்பியிருந்த போதிலும், விரிந்துகொண்டிருக்கின்றன. மறுபடியும் வென்றிகிள் தளரும்பொழுது இக்குழாய்களிலிருக்கும் ரக்தம்திரும்பி அதற்குள் வராதபடி சில ஏற்பாடுகள் அமைந்திருக்கின்றன. பிறைவடிவான மூன்று ஜேப்புகள் ஒவ்வொரு குழாயின் வாயிலும் அமைந்திருக்கின்றன. ரக்தம் திரும்புவதற்காகப் பார்க்கும்பொழுது, அந்த ஜேப்புகளுக்குள் சென்று அவற்றின் உள் மடிப்புகளை விரிக்கவும், அம்மடிப்புகள் ஒன்றோடொன்று சேர குழாயின் வாய் கெட்டியாக மூடப்படுகிறது.

ஹிருதயத்தின் அறைகள் தாங்கள் செய்ய வேண்டிய வேலைக்குத் தகுந்தபடி பலமுள்ளனவாக அமையப்பட்டிருக்கின்றன. இடது பக்கத்துக்கீழறை சரீரம்முழுவதிற்கும் ரக்தத்தைச் செலுத்தவேண்டியிருப்பதினால்எல்லாவற்றிலும் கனமுள்ளதாயிருக்கிறது. மேலறைகளிரண்டும் கீழறைக்கு ரக்தத்தைச் செலுத்த வேண்டிய வேலைமாத்திரம் உள்ளனவாதலால் ஒன்றுபோல் சமமாக மெல்லியதாயிருக்கின்றன. வலது கீழறை சுவாசாசயம் முழுவதுக்கும் இரக்தத்தசை செலுத்தவேண்டியதானதால் மேல்றைகளை விட அதிக கனமாயிருக்கிறது; ஆனால் சரீரம் முழுவதும் செலுத்தவேண்டிய இடது கீழறைக்கு மூன்றில் ஒருபங்குதான் இருக்கிறது. எல்லா அறைகளும் சமமாக மூன்று அவுன்ஸ் பிடிக்கத் தக்கவை.

ஹிருதயத்தின் வேலை ஒருவரிசைக் கிரமமாய் நடந்துகொண்டு வருகிறது. முதலில் இரண்டு ஆரிகிள்களும் சுருங்குகின்றன. பிறகு இரண்டு வென்றிகிள்களும் சுருங்குகின்றன. பிறகு கொஞ்சம் அமைதியுண்டாகிறது. அதில் இரண்டு ஆரிகிள்களும் ரக்தத்தால் நிறைகின்றன. வென்றிகிள்களும் தளர்ச்சி யடைய, அவைகளுக்குள் ஆரிகிளிலிருந்துரக்தம்தடையில்லாததினால் மெதுவாக இறங்குகிறது. உடனே ஆரிகிள்கள் மறுபடியும் சுருங்கி பாக்கியிரக்தத்தையும் வென்றிகிள்களுக்குள் செலுத்துகின்றன. இவ்விதமாக ஹிருதயம் ஒரு நிமிஷத்து (மினிட்டு) க்கு

75 தரம் சுருங்குகிறது. இப்படி இடது வென்றிகிள் சுருங்கும்பொழுது முன்னமேயே நிறைந்திருக்கிற அயோர்டிவில் அதின் ரக்தம் தள்ளப்படுகிறது.அதினல் அயோர்டா விரிந்து கொடுக்க அதின் வளைவு கொஞ்சம் நிமிர்கிறது ; அப்பொழுது ஹிருதயம் கொஞ்சம் முன்னல் கொண்டு போகப்பட்டு மார்பின் முன்சுவரில் தாக்குகிறது; இப்படித் தாக்குவதின் அதிர்ச்சியை, இடது பக்கத்து மார்பில், முலைக்காம்புக்கு ஒன்றரை அங்குலத்திற்குக் கீழாகவும் அரை அங்குலத்திற்கு உட்புறமாகவும் கைவைத்துப் பார்த்தால் உணரலாம்.

அதே இடத்தில் காது கொடுத்துக் கேட்போமானல், இரண்டு சப்தங்கள் கேட்கும். அவைகளில் முதல் சப்தம் நெடியதாயும் மிருதுவாயும் இருக்கும். இரண்டாவது, குறியதாயும் கடினமாயும் இருக்கும் அவைகளை "லூம்ப்," "டப்" என்ற சப்தங்களுக்கு ஒப்பிடுவது வழக்கம்.

இவைகளில் முதல் சப்தம் ஆரிகிளுக்கும் வென்றிகிள்களுக்கும் நடுவில் உள்ள மூடிகள், வென்றிகிள் சுருங்கும் பொழுது, இழுத்துச் சேர்க்கப்படுவதால் பெரும்பான்மையும் உண்டாகின்றது. இரண்டாவது சப்தம் பல்மோனரி ஆர்டெரி அயோர்டா இவைகளின் துவாரங்களில் இருக்கும் பிறைவடிவ மூடிகள், வென்றிகிள்கள் சுருங்கிய பிறகு, திடீரென்று மூடுவதால் உண்டாகின்றது. ஆகையால் இந்தச் சப்தங்களில் உண்டாகும் வித்தியாசங்களிலிருந்து எந்த மூடிகளில் வியாதியிருக்கிற தென்பதை நிர்ணயிக்கக்கூடும்.

கே. நாராயண அய்யர், M. B. & C. M.

குளிர்ந்த தண்ணீர் குடித்தல்.— உடம்பு சத கத வென்று இருக்கும்பொழுதாவது, வீட்டுக்காரியங்கள் அதிகமாகச்செய்து உடம்புக்கு ஆயாஸம் அல்லது களைப்பு ஏற்பட்டிருக்கும்பொழுதாவது குளிர்ந்த ஜலத்தைக் குடிக்கக்கூடாது. தேகத்தில் உஷ்ணதிகங் கொண்டிருக்கும் போது குளிர்ந்த தண்ணீரை ஏராளமாக உட்கொண்டால் திடீரென்று சோர்பு, சோகம் ஏற்பட்டு மாணம் ஸம்பவிக்கும்.

கடவுளின் கருணையைக் கனவிலும் மறவாதே

NEVER FORGET GODS, GRACE

ஓ! மனமே! உனக்கேன் இச்சோர்வு! இவ்வச் சமும்கவலையும் உனக்கேன்! முன்பு நீஇன்புற்று மகிழ்ந்து வந்தனையே! காரணம் என்ன வென்று எண்ணிப் பார்த்தனையோ? ஈசனது அனுக்ரகம் அல்லவா? அதுஅவ்வாருக: நீதுன்புற்றுஅல்லற் படுங்கால், "கருப்பைக்குள் முட்டைக்குங்கல்லினுள்தேரைக்கும்விருப்புற்று அமுது அளிக்கும் மெய்யனு"ம் வாரானே? "அத்தி முதல் எறும்பு ஈருன உயிர் அத்தனைக்கும் சித்தம் மகிழ்ந்து அளிக்கும் தேசிகனு"க்கு நின்னைக் காத்தலும் கடன் இலையோ? உன்னிப்பார்த்துச் சஞ்சலத்தை விடுத்து,ஓ நெஞ்சமே! நாதனிடத்து நின் சலியா நன்னம்பிக்கையைச் செலுத்து!

"பட்டகாலிலே படும் கெட்டகுடியே கெடும்" என்னுமாறு, இடுக்கண் உற்றுழி அல்லல் பல அடுக்கி வந்துநின்னைச் சூழ்ந்து எழுந்து நெறுக்கிய காலத்து, தளர்ந்து நீ வீழாது நின்னை ஏந்தித்தாங்கி கைகொடுத்து நின்றது கடவுளின் கருணை அல்லவா? சிக்குச்சுழல்கள் உள்ள இம் மண்ணுலகில் திக்குத் திசை தெரியாது தவித்த காலத்து நின்னைச் செந்நெறிசெலுத்தி நடாத்தியது ஆதிபகவன் அருள் அல்லவா? இன்னணம் மூல முதல்வனது முன்ற அறிந்தும் ஓ! மனமே! வர்ட்டம் உனக்கேன்?

சம்ஸாரம் என்பது துக்க ஸாகரம் அன்ருே? மலைபோல் அலைகள் அடுத்து அடுத்துப் புரண்டு எழுந்து கோஷித்துவரும் புயல் மோதப்பட்ட ஆழ்கடல் அதுவென நீ அறியாயோ? துயராழியின் ஒப்பிலா உயரலைகள் பொங்கி எழுந்து கரை புரண்டு நின்மீது உருண்டு ஓடிவந்தாலுமென்? ஊக்கமொடு காக்க ஒருநாதன் நின்னுள் நிற்பதை நினக்கு நினைப்பூட்டவும் வேண்டுமோ?

அண்டம் புரளும்படி சண்ட மாருதத்தை வீசி மோதி அடிக்கச் செய்த எல்லாம் வல்ல ஈசனுக்கு அதை அடக்கி அமைதியாக்குவதும் அரிதாமோ? சர்வ சக்தனும் இமைப்பொழுதில் நின் இடும்பைக்கு இடும்பை புரிந்து உனக்கு அமைதி எய்துவிக்கத் திருவுளம் பற்றினும் பற்றலாமன்றோ ?

ஆனதுபற்றி, ஓமனமே! அந்தகாரம் நிறைந்த நள்ளிரவிலும் அப்பனது அநுக்ரகங்களை எண்ணி எண்ணி, நினைந்து நினைந்து, நெக்கு விட்டு நெகிழ்ந்து உருகி, நின்னிடத்தே அன்பு வெள்ளம் தேக்குவாயாக! கடவுளின் திருவடிகளைக் கடைப்பிடியாய்ப் பற்றிப் பிடித்து நின்னிடத்தே நாட்டிக்கொள்வாயாக! அவ்வாறு செய்யின், அல்லல் அற்று, அருள்பெற்று, பொய்யாப் புலமைத் திருவள்ளுவர்

"மலர்மிசை ஏகினன் மாணடிசேர்ந்தார்
நிலமிசை நீடு வாழ்வார்"

என அருளிய வண்ணம், நீ உலப்பிலா ஆனந்தம் பெறுவாய்! ஐயம் சற்றுமின்று! சத்தியம் என்று எண்ணித், திண்ணமாய்க் கொள்.

எஸ். ராமஸாமி அய்யர், பி.ஏ., எல்.டி.

125 வயதுக்கிழவர்.—இந்தக் கலியுகத்தில் ஸாதாரணமாக ஒருவன் நூறுவருஷம் பிழைத்திருப்பது அபூர்வம். ஆனால் ஒருவித எல்லையை அனுசரித்து 'சதமானம் பவதி' என்று பெரியோர்கள் சொல்லுவார்கள். அதாவது ஒருவனை வாழ்த்தவேண்டுமானால் நூறுவருஷம் நீ தீர்க்காயுஸாய் இருக்கக்கடவாய் என்று சொல்வது ஸகஜம். இப்படியிருந்தும் ஹஜாரா ஜில்லாவில் பைராம்கான் என்னும் பெயர் கொண்ட மகமதிய ஜாகீர்தார் ஒருவர் ஸமீபத்தில் இறந்துபோனதாகவும், அப்பொழுது அவருக்கு 125-வயதென்றும் தெரியவருகிறது. 1831-ம் வருஷத்தில் மகாராஜா ரஞ்சித் சிங் ஆப்கானியரோடு சண்டைபோட்டபோது ஆப்கானியர் பக்கத்தில் இந்த பைராம்கான் சண்டைபோட்டுக் குண்டுக்காயம் பட்டவரென்று தெரியவருகிறது.

பொன்

GOLD

பொன்னென்பது பூமியினின்று வெட்டியெடுக்கப்படும் ஒருவகை உயர்ந்த உலோகம். அது உலகிலுள்ள பொருள்கள் எல்லாவற்றிலும் மிக்க விலையுள்ளது. மஞ்சளும், பசுமையுமான நிறம் வாய்ந்து, பார்ப்பவர் கண்ணையுங் கருத்தையுங் களிக்கச்செய்து, ஒளி குன்றாது பிரகாசிக்கும் குணமுடையது.

பொன்னின் மேன்மைக் குணத்தை விரும்பியன்றோ, செந்தாமரையில் உற்பவித்த திருமகளும் "பொன்னி" யென்னும் திருநாமம் தரித்திருக்கின்றனள். கல்வி, கேள்விகள் நிறைந்த புமான்களை "பொன்" போன்றவர்களென்றும், அன்னவர் மொழிகளைப் பொன்னே போற் போற்றுவம் என்றும் நன்குணர்ந்த புலவர் திலகர் பலர் வர்ணித்துக் கூறியிருப்பதை அறியாதார் எவர்?

இப்பொன்னே எப்பொருட்குந்தாய். பொன், பெண், மண், என்னும் முப்பொருள்களில் முதன்மையானது இதுவென்றும், இதனை அடைந்தவர்கள் மற்றைய இரண்டையும் எளிதில் பெறலாகும் என்றும் வழங்கிவருவது உலகப் பிரசித்தம். இது, எக்காலும் எங்கும் பெருமையை விளைவித்து, ஊக்கம், மனவலி, கடவுள் வழிபாடு, அறிவு, கோபமின்மை, பொறுமை, ஆகிய இத்தியாதி நற்குணங்கள் நிறைந்த ஆடவர், பெண்டிர் வசிக்கும் ஒவ்வொரு வீட்டிலும் கொஞ்சிக் குலாவி நிலைபெற்றிருக்கும். இதன் துணையில்லாதவர் என்றும் பொல்லாதவர்.

"பொன்னம்பலம் உண்டானால் என் அம்பலம் உண்டாகாது?" என்னும் பழமொழியை வெள்ளிடை மலைபோல் தெள்ளிதில் விளக்கத் தில்லைக் கணுள்ள ஸ்ரீ நடராஜப்பெருமானும் பொன்னால் சபை ஏற்படுத்தியுள்ளது எவரும் அறிந்ததே. அவர் பொன் மலையை அடியோடு பெயர்த்தெடுத்து வில்லாக்கிக்கொண்டதும், திரிபுரத்தை,

பொன்மதில் வேண்டிசிரித்து எரித்ததும், பொன் னிறந்தாங்கியதும் எவர்க்கும் கண்கூடாக விளங் குகிறது. பொன்னியை மகாவிஷ்ணு மார்பில் தரித்ததும், இரண்யன் என்னும் பெயர் வாய்ந்த அரக்கனைக் கொன்றதும், இதுகாரணம் பற்றி யேயாம். உலோபிமீதாசி (Midas) சரித்திரத் தாலும் பொன்னின்மேல் மனிதர்க்குள்ள பேராசை நன்கு விளங்குகின்றது. தேவர்க ளும் தங்கள் நாட்டிற்கும், குருவிற்கும் இதன் பெயரையே யிட்டு வழங்கி வருகின்றனர். மண் ணுலகிலும் மானுடர்கள் தாங்கள் அருமை யாகப்பெற்று வளர்த்தெடுத்தமக்களுக்கு, பொன் னம்மை, பொன்னப்பன், பொன்னுசாமி என வழங்குவதோடு, தாங்களிருக்கும் ஊர், நதி, ஏரி, முதலிய பற்பல நிலையியற்பொருள்களுக் கும், ஏர் உழுதல் முதலிய செய்தொழின் முறைக்கும் இப்பெயரிட்டு அழைப்பது யாவரும் அறிந்ததே.

இப்பொன் ஏகச்சக்ரேஸ்வரமாக மண் முதல் சிவம் ஈறாக உள்ள எல்லாப் பொருட்கட்கும் அரசாகி, மகுடஞ்சூட்டி, துஷ்டநிக்ரக சிஷ்ட பரிபாலனஞ் செய்து, தன்னை நம்பிய ஒவ்வொரு ஆத்மாவையும் களிப்படையுமாறு தன்னாணை யைச் செலுத்தி,அரசாட்சி செய்துவருவது அறி யாதார் எவர்? இதன் கிருபை யடைந்த எப்படிப் பட்ட ஏழையும் முகவிலர்சமாகி, உள்ளங் களித்து ஊக்கங்கொண்டு எப்படிப்பட்ட செய் முயற்சியையும் செய்து முடிப்பான். இப்பொ னே மேகம்போல் கைம்மாறு வேண்டாமல்எவரை யும் உன்னத நிலையில் வைப்பது. இதனாலன் றோ "பொன்னாற் பிரயோஜனம் பொன்படைத் தாற்குண்டு" என்றும் "பொன்னுடைய ரேனும்" என்றுங் கூறுவர். அரும்பெரும் நன் மங்கலத்தைச் செய்வித்துப் புத்திரப்பேற்றைக் கொடுத்து, வழுவாது இல்லறம் நடாத்தி இன் பத்தை அடையச்செய்வது இதுவேயாகும். முற் றத்துறந்து முழுத்தவம் எய்திய முனிவர்களும் ரசவாத வித்தையினால் பொன்னின் கிருபையை யடைய படும்பாட்டை எவர்தாம் எடுத்துச் சொல்ல வல்லவராவர்? இப்பொன் சில சமயங் களில் கம்மியன் என்னும் பகைவன் கையில் அகப்பட்டுப் பணையிற்கிடத்தி, அடிமேலடி யடித்து, மூசைக்குள்ளடக்கி, உலைவாயிலின்கண் வைத்து, அக்னிமயமான த்ராவக ரூபமாகி, ஆற்றி, கம்பியுருவாய்த் திரட்டி, பின்னும் உலை யில் வைத்து அடியடித்து வருத்தப்படுத்துங் காலத்தும் தன் இயற்கை குணமும் நிறமும் குன்றாது ஒளிவிட்டு நிற்கப் பெறுகின்றது. பின் னும் இப்பொன் விரோதிகள் . கொடுமையைச் சகிக்காது அவர்கள் காத்தினின்று விடுபட்டுப் பெரும்பாலும் பெண்கள்பால் சரண்புகுந்து, பல் லாகிய வொளியைக்காட்டி, அடைக்கல ஸ்தானந் தந்து காப்பாற்ற வேண்டுமென்று நின்று, தனக் குரிய இயற்கைக்குணமும் பெயருங் கூறி, அவ ரவர்கள் உள்ளக் கருத்தின்படி காப்பு, கொலுசு, சரப்பளி, சங்கிலி முதலிய ரூபங்களுடன் தன் இயற்கை நாமத்தை முற்றிலும் மறைத்து நிற்பதோடு, தன் நண்பினமாகிய இரத்தினம், கெம்பு, கோமேதகம், நீலம், புஷ்பராகம், மாணிக் கம், பச்சை, வைடூர்யம் முதலிய இவ்வொன்ப தின்மரோடு கட்டுப்பட்டு, அடங்கியிருந்து "பொன்மலையைச் சேர்ந்த காகமும் தன்னிற மாகும்" என்றபடி, சேர்ந்தவரையும் அழகு செய்து தன் இயற்கைக் குணம் விளங்க, கம்மல், கடுக்கன், கணையாழி, வங்கி, பொட்டு, பதக்கம், சடையில்லை, அரதனமாலை முதலிய பற்பல பூஷணங்கள் பெயர் தாங்கி, அணிவோரது உடலை யும் உள்ளத்தையும் அலங்கரிக்கின்றது.

இம்மட்டோ! இது அரசன் உருவத்தையுந் தாங்கி மோஹரா என்றும், பவுன் என்றும், கினி என்றும் பெயர் பெற்று உலகமெங்ஙணும் நிலவி வருவதாலன்றோ இதற்கு 'ஆசை' யென வொரு பெயர் காரணவிடுகுறியாக அமைந்துள்ளது. ஒருவன் எப்படிப்பட்ட கொடுமையைச் செய்த

போதிலும், தன்னை அடைந்தவர்பால் நின்று மாருவல்லமை பூண்டு நாளும் புகழுங்கீர்த்தியு முண்டாக, யோக்கியனென நியாயசபையில் நிரூபிக்க முன்னிற்கின்றது. இம்மையில் அடைய வேண்டிய அறம், பொருள், இன்பம் என்னும் முப்பால் நலங்களைப்பெருக்கி இறுதியில் அடைய வேண்டிய ஈடும் எடுப்பும் இல்லா வீட்டைப் பொருந்துதற்கு இன்றியமையாப் பொருளாகவும் இருக்கின்றது.

'திரைகடலோடியுந் திரவியந்தேடு ! என்றபடி மனிதர்களிற் பலர் தங்கள் தங்கள் இல்லிடம் விட்டுப் பெயர்ந்து மரக்கலமேறி நெடுந்தூரஞ் சென்று எவ்விதத்தினும் இப்பொன்னைத் தேடும் முயற்சியையே கொண்டிருக்கின்றனர். எவ்வளவு கட்டையை அக்னிக்குக் கொடுத்த போதிலும் அவ்வக்னி திருப்தி யடையாமல் இருப்பதுபோல, ஆத்மாக்கள் உள்ளத்தைத் திருப்திசெய்து வைக்காது மேலும் மேலும் தன்னையே விரும்பும்படி செய்துவைக்கின்றது. ஆண் பெண் இருபாலாரிலும், பிரிந்தாரைக் கூட்டிவைத்து, இன்பம் அனுபவிக்கச் செய்து வைக்கும் இப்பொன்னின் உயர்வாகிய அருங்குணத்தைத் தெரிந்துகொள்ளாதவர் உலகில் மிகவும் சொற்பமே.

மேலே கூறியவாற்ருல், "முனிவரும் மன்னரும் முன்னுவபொன்னுல் முடியும்" என்பதற்கேற்ப, புருஷார்த்தங்களுக்கு ஏதுவாய் இருப்பது பொன்—என்னும் உண்மை நன்கு விளங்குவதன்றே ?

பண்டித. S. வேலாயுத முதலியார்.

ஸ்ரீ சங்கராச்சாரியார் பிறந்தநாள்.—கொச்சி ராஜ்யத்தில் ஜோஸ்யரான வித்வான் சி. வி. பிச்சு அய்யர் ஸ்ரீ சங்கராசாரியார் பிறந்த காலத்தைத் திட்டமாய்க் குறித்திருக்கிரார் கலியில் செல்லா நின்ற 3007. அல்லது கி. பி. 805ல் மேஷமாதம் 18ந் தேதி திங்கட்கிழமை நாழிகை 17,25 அல்லது மணி 12,58-ல், காலடி என்னுமிடத்தில் ஜனனமானுரென்று நிச்சயித்திருக்கிரார்.

சூரியன் : அதன் தூரமும், பருமனும்

SUN: ITS SIZE AND DISTANCE

முன்னர் இப்பத்திரிகையில் நமக்கும் ஸூரியனுக்குமுள்ள தூரம் சுமார் 9 கோடி மைலுக்கு அதிகமென்று சொன்னேமல்லவா? அவ்வளவு அதிக தூரத்தை எப்படிக் கணக்கிடுகிறதென்பதை இப்பொழுது விவரிப்போம்.

நம்மைச் சுற்றியிருக்கும் ஸாதாரணமான வஸ்துக்களை விட பருமனிலும் உயரத்திலும் அதிகமான வஸ்துக்களைப் பற்றிய அளவை சரியாய்ச் சொல்வது கஷ்டமாயிருக்கிறது. ஒரு தெருவின் நீளத்தையும், மரங்கள், கட்டிடங்கள் முதலியவைகளின் உயரத்தையும், ஒரு ஊரிலிருந்து மற்றொரு ஊருக்குள்ள தூரத்தையும் தகுந்த அளவுகோல்களைக்கொண்டு அளந்துவிடலாம். இம்மாதிரி பற்பல தடவைகளில் ஏற்படும் அநுபவத்தைக்கொண்டு, நாமிருக்குமிடத்திலிருந்து வெகுதூரத்தில் தோற்றும் மலை, மரம், கோபுரம் முதலியவைகளின் தூரத்தை அவைகளின் சமீபத்தில் போகாமலேயே சற்றேறக்குறையச் சொல்லலாம். ஆனுல் அவைகளின் உயரத்தை ஊகிப்பது அவ்வளவு சுலபமல்ல. ஏனென்ருல் சமதரையில் நாமடையும் அனுபவத்தைப்போல், உயர்ந்த வஸ்துக்களின் மேலேறிச்சென்று அவைகளின் உயரத்தை அடிக்கடி நினைத்துப் பார்த்தலாவுண்டாகு மனுபவம் குறைவானதும் தவிர, வஸ்துக்களின் தூரமதிகப்பட, அவைகளின் பருமனும் குறைவாகக் கண்ணுக்குப் புலப்படும். புகைக்கூடு, ஆகாசவிமானம் (Aeroplane), பக்ஷிகள் முதலியன உயரப்பறந்து செல்லும்போது, அவைகள் இவ்வளவு உயரத்தில் பறக்கின்றனவென்று சுமாராய்ச் சொல்வது கூடப் பிரயாஸம். இதிலிருக்கும் சிரமத்துக்கு மேல் சொன்ன வஸ்துக்களுக்கும் பூமிக்கும் கண்ணுல் பார்க்கக்கூடிய ஒருவிதமான சம்பந்தமில்லாதிருத்தல்தான் காரணம். பூமியைச் சேர்ந்த

அளவுகளிலேயே இவ்வளவு கஷ்டமிருக்க, சூரியன், நக்ஷத்திரங்கள், கிரகங்கள், போன்ற மனதினுல் கூடக் கிரகிக்கக்கூடாத தூரத்திலிருக்கும் வஸ்துக்களின் தூரத்தை எவ்வாறறிவது? முதலில் அஸாத்தியமாகத்தான் தோன்றுகிறது. ஆனாலது பின்வரும் விஷயங்களைக் கவனித்தால், வெகு சுலபமாய் விடும்.

“சுவாமி நமக்கு இரண்டு கண்கள் எதற்காகக் கொடுத்திருக்கிறார்; ஒரே கண் போதாதோ?” என்று ஒரு பையன் தன் தோழனைக் கேட்க, அவன், “ஒரு கண்ணுக்கேதாவது சேதம் நேரிட்டால், மற்றொரு கண்ணாவது உபயோகப்படட்டும்: ஒரே கண்ணுயிருந்தால் அந்தக் கண் போனதும் முழுக்குருடனுகவேண்டுமல்லவா?.” என்று பதிலுரைத்தான்; கேட்டவனும் திருப்தி யடைந்தான். சிறுவர்களானதால், அதற்கு மேல் யுக்தி தோன்றவில்லை. நம்மில் வயது முதிர்ந்தவர்களுக்குக் கூட வெகு பேருக்கு, கண்கள் இரட்டையாயிருப்பதின் அவசியம் தெரியாது. இரட்டைக் கண்ணன் தூரத்தையும் வஸ்துக்களின் ரூபத்தையும் உணர்வது போல் அவ்வளவு தெளிவாய் ஒற்றைக் கண்ணன் அறிய முடியாது. முதலில் இருகண்ணிருந்து அதிலொன்று நஷ்டமானவர்களின் அனுபவமிது. நாமே ஒற்றைக் கண்ணைக் கையால் மூடிக் கொண்டு பார்த்தால் இவ்விஷயம் தெளிவாகும்.



நாம் பார்க்கும் வஸ்துக்களின் உருவமும் தூரமும் அவ்வஸ்துவிலிருந்து நமது கண்ணுக்கு வந்து சேரும் ஒளியின் கிரணங்களால் புத்தியில் கிரகிக்கப்படுகின்றன. மேல் காட்டிய படத்தில் A. என்னுமிடத்திலிருக்கும் வஸ்துவிலிருந்து வரும் ஒளி கிரணங்களின் மத்தியிலுள்ள விரிவு (கோணம், Angle), B என்னுமிடத்திலிருந்து வரும் கிரணங்கள் மத்தியிலுள்ள (Y) கோணத்தைவிட அகண்டது. அதாவது, ஒரு வஸ்துவானது நமது சமீபத்தில் வர வர, அதை நமது கண்களுக்குப் புலப்படுத்தும் கிரணங்களின் மத்தியிலுள்ள கோணம் அதிகமாகிக்கொண்டே வரும். தூரமதிகரிக்க, மேற்படி கோணத்தின் விரிவு குறையும். ஒருவஸ்து நம்மைச் சமீபிக்கும் போது அதைப்பார்க்க இருகண்களும் தங்களைக் கட்டியிருக்கும் தசை நார்களின்(Muscles)உதவியால் உட்புறமாய் சாய்க்கப்பட்டு, அவ்வஸ்துவினின்று வரும்கிரணங்களை உட்கொள்ளுகின்றன. அதேமாதிரி அந்த வஸ்து தூரத்தில் விலக விலக,கண்களின் உட்புறத்துச் சாய்வு குறைந்து, எப்போதும் அந்த வஸ்துவிருக்கும் இடத்தை நோக்கியே செலுத்தப்படுகின்றன. இம்மாதிரியாய்க் கண்ணுருண்டைகள் தசை நார்களால் சாய்க்கப்படும் உணர்ச்சி மூளைக்கெட்டி அதனுல் வஸ்துவுள்ள தூரம் இவ்வளவென்றும் உணர்ச்சி ஏற்படுகிறது. ஒரு வஸ்து நமது கண்களுக்கு அதிக சமீபத்தில் கொண்டுபோகப்பட்டால், அதைப் பார்ப்பதற்காக கண்கள் உள் பக்கம் அதிகமாய்ச் சாய்க்கப்படுவதாலுண்டாகும் வலியைக்கூட நாமுணர்கிறோமல்லவா? ஆகவே, ஒரு வஸ்துவிலிருந்து நம் கண்ணுக்கு எட்டும் கிரணங்களின் விரிவைக் கொண்டு நமக்குமவ்வஸ்துவுக்கு மிருக்கும் தூரமிவ்வளவென்று நாமறிகிறோமென்பது தெளிவாகிறது.

இந்த அநுபவத்தை ஒட்டியே, வான சாஸ்திரிகள்(Astronomers)சூரியன் முதலான் ஆகாயத்தில் மிதக்கும் வஸ்துக்களின் தூரத்தைக் கணக்கிடுகிறார்கள்.



அவ்வளவு பெரியதூரத்தைக் கணக்கிடுவேத

ற்கு நம்மிரு கண்களின் மத்தியிலிருக்கும் தூரம் போதாது. ஆகையால், இப்பூதலத்தில், நடுவில் அநேகமாயிர மைல்தூர மிருக்கும்படி, A, B என்ற ஸௌகரியமான இரண்டு இடங்களில் சென்று, சூர்யனிருக்கும் திக்கை (அதன் சாய்வை) இரண்டிடங்களில் ஒரே சமயத்தில் அதி நுட்பமான அளவு கருவிகளைக் கொண்டு கணக்கிடுகிறார்கள். சூரியனின்று A B, இடங்களுக்கு வரும் கிரணங்களின் (M) விரிவை அதிலிருந்து (Angle M) கணக்கிடலாம். அந்த விரிவின் பரிமாணத்தையும், A B, என்ற தூரத்தையும் கொண்டு பூமிக்கும் சூரியனுக்குமுள்ள தூரம் சுமார் 9கோடி மைலுக்கதிகமான தென்று கணக்கிட்டிருக்கிறார்கள்.

ஒரு கோல் முழ நீளமென்றால் நமக்கு நம் கையின் பரிசயத்தினால், அந்தக் கோலைக் கண்ணால் பார்க்காவிட்டாலும், இவ்வளவு நீளமான தென்று மனத்தில்கிரகிக்கலாம். அடுத்த கிராமம் 2 மைல் தூரத்திலிருக்கிற தென்றால், அந்தத் தூரமும், இவ்வளவு தான்; அவ்வூருக்குப் போக இவ்வளவு நேரம் பிடிக்குமென்று மனதில் தோன்றுகிறது. ஆனால் சூரியனுக்கும் நமக்கும் 9 கோடி மைல் என்று சொன்னால், அவ்வளவு பெருந்தூரத்தை நினைத்தால் புத்தி மயங்குகிறது. தெளிவாய் இவ்வளவு நீளமென்று கிரகிப்பது அசாத்தியம்.

சூரியனுக்கும் நமக்கும் ஒருநேரான இருப்புப் பாதையிருந்து, மணிக்கு 40-மைல் வீதம் புகைவண்டியொன்று கிளம்பிச் செல்வதானால், அந்தவண்டி சூரியனிடம் போய்ச் சேர சுமார் 260 வருஷங்களுக்கு மேலாகும். ஒருவன் பிறந்த உடனே அந்த வண்டியில் தன் ஜனங்களுடன் ஏறிச்செல்ல ஆரம்பித்தால், கால்வழிப் பிரயாணம் முடிவதற்குள்ளேயே 65-வயது கிழவனாய் விடுவான். அவனைச் சேர்ந்தவர்கள் அநேகமாய், இறந்திருப்பார்கள். அவன் காலமும், அவன் குழந்தை காலமும், பாதிவழி கடப்பதற்கு முன் முடிந்துவிடும். அவ்வண்டி சூரியனைப்போய்ச் சேரும்போது, ஆதியில் கிளம்பின சிசுவின் "கொள்பேரன்" மார்கள்கூட கிழவர்களாய் விடுவார்கள்.

தூரந்தான் இவ்வளவு பெரியதாயிற்றே, பருமனைப் பற்றிப் பார்த்தாலோ, அதுவும் பிரும்மாண்டமானதாக இருக்கிறது. ஒரு நாட்டுப்புறத்தானை சூரியனெவ்வளவுபெரிதென்று கேட்டால், அவன் "ஒரு தோசைப் பிரமாணம்," "உரிக்காத தேங்காயளவு," "ஒரு சிறு தட்டவ்வளவு அகலம்," என்று பலவாறாகக் கூறுவான். இவ்வளவு அற்பப்பரிமாணமுள்ளவஸ்துக்களை ½மைல்தூரத்தில் வைத்துப்பார்த்தால், அவைகள் நமது கண்ணுக்கு எவ்வளவு பெரிதாகத் தோன்றும்? உயர்ந்த கோபுரங்களின் மீதேறி விளக்கேற்றும் மனிதன் நமது கண்ணுக்குச் சிறு குழந்தைபோல் தோற்றவில்லையா? கழுகுபோன்ற பெரும் பக்ஷிகள் ஆகாயத்தில் 2-மைலுக்கதிகப்படாத உயரத்தில் பறந்தால் ஒருசிறு புள்ளியளவுதானிருப்பதாக நமக்குத் தோன்றுகிறது. இது இப்படியிருக்க 9-கோடி மைலுக்கதிகரித்த தூரத்தில் ஒருதேங்காயவ்வளவு பெரிதாய்தோன்றும்வஸ்து எவ்வளவு பெரியதாய் இருக்கவேண்டும்? இந்தக் கேள்வியை இன்னொரு விதமாய் மாற்றிக் கேட்போம். நம்மைப்போலொரு மனிதன் சூரியனிடத்திலிருந்து நமது பூமியைப் பார்ப்பதாக நினைத்துக்கொண்டால், ஆயிரக்கணக்கான அகல நீளமுள்ள பல கண்டங்களும் சமுத்திரங்களும் கூடிய இப்பூமி அவன் கண்ணுக்கு எவ்வளவு பெரியதாய் புலப்படுமென்று நினைக்கிறீர்கள்? ஒருஎலுமிச்சம்பழத்தைச் சுமார் ½-மைல் தூரத்திலிருந்து பார்த்தால் அது எவ்வளவு பெரியதாய்க் காணப்படுமோ அவ்வளவு தான் இப்பூமியும் சூரியன் மனிதனின் கண்ணுக்குப்புலப்படும். அதாவது, 9 கோடி மைலுக்கதிகமான தூரத்தில் இப்பூமியளவு பெரிதான கோளமிருந்தால், அது இப்பூலோக வாசிகளான நமக்கு சுக்கிரன், குரு, நக்ஷத்திரங்கள், இவைகளைப்

போல ஒரு சிறு புள்ளியளவுதான் தோன்றும். இவ்வளவு பெரிய பூமியைப் புள்ளியளவாக்கும் அகாத தூரத்தில், தேங்காயவ்வளவு பெரிதாகத் தோன்றும் சூரியன் இப்பூமியை விட எவ்வளவு பெரியதாயிருக்கவேண்டும்! இப்பூமியைப்போல் 10-லக்ஷம் பூமியை ஒன்ருய்த் திரட்டி பெரும் பந்து ஒன்று செய்தாலும், அது சூரியனைவிட சிறியதாகவே யிருக்கும். சூரியனை ஒரு பெரும் யானைக்கு ஒப்பிட்டால், இப்பூமியை ஒரு சிறு சுண்டெலியளவென்று சொல்வதுகூடப் பிரயாஸம். பல சூரியன்கள் சேர்ந்தும் அதை விடப் பெரிதான நக்ஷத்திரங்கள் எண்ணப்படும் மகா சூரியன்கள் கோடிக்கணக்கால் ஆகாயத்தில் உலாவித் திரிந்துகொண்டிருக்கின்றன. வாக்குக் கும் மனதுக்குமெட்டாத இப்பிரம்மாண்டத்தை உண்டுபண்ணி, அவைகளில் அனந்த கோடி ஜீவராசிகளையும் சிருஷ்டித்து விளையாடும் பரப்பிரம்மமான கடவுளின் மகிமையே மகிமை!!

எஸ். பாலகிருஷ்ணய்யர், பீ.ஏ., எல்.டி.

பருத்திக்கொட்டை மனிதன் உணவு.—இதுவரையில் பருத்திக்கொட்டை கால்நடைகளுக்கு (ஆடுமாடுகள்), உணவு என்று அறிந்திருக்கிறோம். மனிதனுக்கு உணவாகவும் ஆகிறதென்று இப்போது அறிகிறோம். அமெரிக்கா தேசத்தில் பருத்திக்கொட்டையை உடைத்து, மேல் தோலைவிலக்கி உட்பருப்பை மாவாக அரைத்து ரொட்டி முதலியவைகளாகச் செய்வித்து ருசியான உணவாகக் கொள்ளப்படுகிறது. கோதுமையைவிட அதிக தாதுபுஷ்டியை உண்டுபண்ணக்கூடியதா யிருக்கிறது. தனியாக உண்ணுவதைப்பார்க்கிலும் கோதுமை முதலிய தானியங்களின் மாக்களுடன் சேர்த்து ரொட்டி முதலியவைசெய்து உண்டால் அதிக நலமென்று தெரியவருகிறது. 4-பங்கு கோதுமைமாவுக்கு 1-பங்கு பருத்திவிதைமாவும் சேர்த்து பக்ஷணங்கள் செய்து அவைகளைச் சாப்பிட்டால் ருசியாகவும் தேகத்திற்கு ஆரோக்கியமாகவுமிருக்கிறது. நம் தேசத்தில் ஏராளமாய்ப் பருத்திவிதை இருக்கின்றமையால் மேற்கண்ட விதமான உணவு அனுஷ்டானத்துக்கு வருல்பக்ஷத்தில் அது மிகவும் பயன்படும்.

ராஜம் அய்யர் அபிப்பிராயங்களும் குறிப்புகளும்

RAJAM IYER'S OPINIONS AND REVIEWS

VIII. ஆத்ம ஆராய்ச்சி.

எவ்விதத்திலாவது புஸ்தகங்களைச்சீக்கிரத்தில் உண்டாக்கி லாபம் பெற வேண்டும் என்ற வீண் ஆவல் மிகுந்த இக்காலத்தில், ஹேச். டிரெஸ்ஸரால்செய்யப்பட்ட ஆத்ம ஆராய்ச்சி என்ற இப்புத்தகம் ஆங்காங்கு தவறி வெளிவரும் அற்புதப் புத்தகங்களில் ஒன்று. இக்காலத்தின் கொடுமை பணத்தாசையாலும், ஸ்வயநயங் கருதுதலாலும் ஏற்படுவதாகக் கூற இடமில்லை. ஆனல் முக்கியமாக ஆத்ம நஷ்டத்தால் ஏற்படுவதே; இக்கொடுமையை நீக்கத் தகுந்ததாயும், மனிதனுக்கு முக்கியமாக ஸம்பந்தப்பட்டதாயும் உள்ள விஷயங்களை அடக்கியுள்ளது இப்புத்தகம். ஆத்ம ஸ்தானம் இது, இதை உணர்ந்து சீர்திருந்துவது இப்படி, இதனல் பிரபஞ்சஸம்பந்தமாக ஆத்மாவிற்கு உள்ள நிலையும், உள்ள ஆனந்தமும் வெளியாகி இவ்வாறு நித்ய திருப்தியையும் சாந்தத்தையும் உண்டாக்கும் என்பதை குறிப்பதே டிரஸ்ஸர் புஸ்தகத்தின்நோக்கம். இதில் ஒவ்வொரு பக்கத்தில் காணப்படும் விஷயங்களைப் பார்த்தால் அவருக்கு இவ்விஷயமாக எடுத்துரைக்கத் தகுந்த அதிகாரமிருக்கிறது என்பது நன்ருக வெளியாகும். இவர், தர்க்க நுட்பங்களையும், யுக்திவாதங்களையும் மாத்திரம் கண்டு பிரமித்து ஆனந்திக்கும் கேவலம் வாசாஞானியல்லர்; உண்மை அனுபவித்தறிய முயல்பவர்; இவர் சிரத்தைக்குத் தகுந்த வித்தியும் இவருக்கு ஏற்பட்டிருக்கிறது; தமது ஆராய்ச்சியால் தமக்கு வந்திருக்கும் சாந்தியை, வழிதெரியாது வருந்தும் உலகத்தவர்களுக்கு வெளியிட்டு உதவவேண்டும் என்ற பக்தியால் இவர் உள்ளம் பூரித்திருக்கிறது. சுருங்கச்சொல்லில், இவர் உலகத்தவருக்கு ஓர் அரிய பெரிய விஷயத்தைக்கூறுகிறர்.நன்கு மதித்துக் கேட்பதற்கு வேண்டிய சிறப்பும் இவரிடம் இருக்கிறது. சிற்சில மதஸ்தாபகர்கள்போல 'என் வேதத்தைக் கைக்கொள்ளாதவர் நரகம் புகுவது திண்ணம்' என்ற அகங்காரத்துடன் இவர் கூற வருபவர் அல்லர்; தம் அகங்காரத்தை அப்புறப்படுத்தி மிகுந்த விநயத்துடனும், தாம்காண முயன்ற பரம்பொருளின் அகண்ட தேஜஸ்வின் ஓர் சிறுபாகம் தன் புத்தகத்தின் வழியாகப்பிரகாசித்து உண்மையில் விஷய

அதிருப்தி அடைந்து வருந்துகிற சில முமுக்ஷுக்களுக்கு சற்றுப்பயன்படலாம் என்றநோக்கத்துடனும் தமதுஆராய்ச்சியின் முடிவை வெளியிடுகிறார்.

இப்புத்தகத்தில் ஆங்காங்கு சில குற்றங்கள் காணப்படினும், பொதுவாக இப்புத்தகம் அநேக முமுக்ஷுக்களுக்குத் திருப்தியையும் சாந்தியையும் கொடுத்து, சென்றவிடமெல்லாம் ஸுகமுண்டாக்கும் என்பதற்கு ஐயமில்லை. வாசிப்பவரைச் சீர்திருத்தி நல்லவராக்கும் புஸ்தகமே நல்ல புஸ்தகம் என்று ஸிஸரோ என்பவர் கூறியதற்கேற்ப இப்புத்தகத்தை நல்லபுஸ்தகம் என்று தடையின்றி நாம் கூறலாம். இப்புத்தகத்தின் சிற்சில பாகங்கள் (முதல் இரண்டு அத்யாயங்களில் சிற்சில பாகம், கடைசி மூன்று அத்யாயங்கள், **தாமஸ்-ஏ-கெம்பிஸ்** என்பவரால் எழுதப்பட்ட **கிறிஸ்துவைப்போல் பழகல்** என்னும் அரிய புஸ்தக விஷயத்தைவிட மிகக் காம்பீர்யமாக அமைந்திருக்கின்றன. இப்பாகங்களை ஒவ்வொருவரும் அடிக்கடி வாசித்து மனனம் செய்து இவைகளில் பழகிவரவேண்டும். தாம்சற்று உணர்விழந்துஅப்பாற்பட்டு ஞானநிஷ்டையில் ஆத்மாவாகி நின்று,'அக்காலத்திலாவது சக்தி, ஸத்வம், அன்பு, அழகு இவைகளாலாகிய அழியா பிதிர்த்வ' (பரம்பொருளைப் பிதாவாக எண்ணும்) அவஸரத்திலிருக்க, அப்பொழுது தமக்கு ஏற்பட்ட அனுபவத்தால் டிரஸ்ஸர் தாம் கண்ட கண்கொள்ளாக் காட்சியையும், தெய்வஸாந்த்யத்தின் அழகையும் அடிக்கடி இப்புத்தகத்தில் வெளியிடுகிறார். எவ்விதத்திலாவது மனத்தினது தெய்வத்தன்மையை வெளிப்படுத்தும் இத்தகைய அனுபவவாக்கியங்களே இப்புத்தகத்தைச் சிறப்புடையதாகச் செய்கின்றன. டிரஸ்ஸரைப்போன்றவர்களுக்குக் குரு ஸஹாயமின்றி மனோதர்மப்படி உண்டாகும் அனுபவவிசேஷங்களும், மனம் பரவசமாக்கப்படுங்காலத்தில் கீதே, வேர்ட்ஸ்வர்த், டென்னிஸன் முதலிய கவிராயர்களுக்கு உண்டாயிருக்கும் அறைகுறையான உண்மை உணர்வும், **ஏமியல்** என்பவர் தமது தினக்குறிப்பில் அனுபவத்தால்கண்டுஎழுதியிருக்கும் நிர்விஷய ஆனந்தவர்ணனையும், பரமபதம் நம்முள்ளேயே இருக்கிறது என்றும் உபநிஷத்துக்கள் கோஷிக்கும் 'நீ அது ஆனாய்' (தத்வமஸி)என்றமஹாவாக்யத்தின் பொருள் வீண் பிராந்தியல்ல வென்றும், ஈசுவராபராத மல்லவென்றும் நன்றாக விளக்குகின்றன.

இப்படி யிருப்பினும், ஸ்வந்தப் பிரயத்னத்தாலும் மனோதர்ம விசேஷத்தாலும் ஏற்பட்டுள்ள அனுபவ லேசத்தை வைத்துக்கொண்டு யுக்தி வாதங்களை ஆத்திரப்பட்டுச் செய்யத் தொடங்குவதே டிரஸ்ஸரிடம் இருக்கும் முக்கியமான தவறு என்பதைக்காண என்போலியருக்கு மிகுந்த துக்கம் உண்டாகின்றது. டிரஸ்ஸர் பரமபதம் அடைய உண்மையாகப் பாடுபட்டார் என்பதும்,அவருக்கு அதற்கு ஏற்றப்பலன்கொஞ்சம் கிடைத்திருக்கிறது என்பதும் உண்மையே. ஆயினும் அவருக்கு அனுபவம் பூர்ணமாகஏற்பட்டுவிட்டது என்பது நம்பக்கூடியதா? 'நம்முள்இருக்கும் உண்மைப் பரம்பொருளாயின், எப்படி ஸ்ருஷ்டி முதலியன ஏற்படுமே? இவ்வனுபவங்களைப்பற்றி யான் வர்ணிப்பது பிறர் வர்ணனைகளைப்போல இல்லாதிருப்பானேன்? ஆத்மவே பிரஹ்மமாகில், அது பூர்ணமாயும், மாறுததாயும், எங்கும் நிறைந்ததாயும், சக்திகளுக்கும் யுக்திகளுக்கும் ஆதாரமாயும் இருப்பதல்லவா?' என்று அவர் கூறும் ஸந்தேஹ வாக்யங்களிலிருந்து டிரஸ்ஸர் பஞ்ச கோசத்திரைகளுக்கு அப்பாற்பட்டதாயும், விஷய ஸம்பந்தம் அற்றதாயும்,உள்ள அதி சுத்தவஸ்துவை உணர்ந்தவரைப்போலப் பேசவில்லை என்பது நன்றாக வெளியாகும். வேதாந்தம் ஸ்ருஷ்டியை மறுக்கவில்லை. ஆனால்ஸ்ருஷ்டி எல்லாம் தோற்றமாத்திரமாக இருப்பதால் முடிவான அனுபவமாகிய பரப்பிரஹ்மத்தில் நிலைக்க இடமில்லை என்று கூறுகிறது. (இதையே கைவல்ய நவனீத ஆசிரியர்

'கற்பனை வந்தவாறு காட்டினேம்காண்ப வெல்லாம் சொற்பனம் போலவெண்ணித் துணிந்தவன் ஞானி யாவான்' என்றார்.)

பரம்பொருள் நம்மைப்போல வளர்கின்றது என்று ஒருதமும் கூறுகிறதில்லை. நமக்குள் இருக்கும் ஆத்மா, பரம்பொருள் இவைகளுள் ஒன்றையாயினும் அறைகுறையாயில்லாது முற்றிலும் உள்ளபடி கண்டு உணர்ந்தால் அல்லது ஆத்மா பரம்பொருள் அல்ல என்று யாரால் கூறமுடியும்? மேலும் ஆத்மாவை உணர்ந்தவர்கள் எவ்விதமாக பேதப்பட்டிருந்த போதிலும், உபநிஷத்ரிஷிகள் முதல் இக்காலத்திய பிரஹ்ம ஞானிவரையில் உள்ள ஐயம்திரிபற உணர்ந்த நிஷ்டாபரர்கள் எல்லோரும் அந்த ஆத்மாவை ஒரேமாதிரியாகத்தான் வர்ணித்திருக்கின்றனர் என்பது நன்றாகக் கவனிக்கவேண்டிய விஷயம். இவர்கள் எல்லோரும் ஒன்றையே அனுபவித்து அதையே தான் வர்ணித்திருக்கின்றனர் என்பதற்கு ஐயமில்லை. ஆகையால்,

இந்த ஆத்மா பரம்பொருளாகில் அது பூர்ணமானதும், மாறுததும் அல்லவா?* ** என்ற முற்கூறிய டிரஸ்ஸர் கேள்விகளுக்கு 'அனுபவித்துணர்ந்த மஹான்களால் அது அவ்வாறு தான் வர்ணிக்கப்பட்டிருக்கின்றது, என்பதேதகுந்த உத்தாமாகும்.

உபநிஷத் ரிஷிகள் தமது அனுபவத்தை மாத்திரம் தான் வெளியிட்டனர். பின்னர் வந்தவர்கள் அவ்வனுபவங்களைத் தாமும் அனுபவித்தறிந்து அதிலிருந்து வேதாந்தம் என்னும் சிறந்த யுக்திவாதமாகிய சாஸ்திரத்தைப் பிரகடனம் செய்தனர். இந்த யுக்திவாதம் பின்னர் வந்த முமுக்ஷுக்கள் அனுபவங்களால் உறுதிப்படுத்தப்பட்டு எக்காலத்தும் மாறுத உண்மையென்றே மதிக்கத்தக்கதாக விளங்கி வருகின்றது. இந்தச் சாஸ்திரத்தில் கூறும் முடிவான அனுபவத்தை அங்கீகரியாதவர்கள் தம்மால் இச்சிறந்த அநுபவத்தை முற்றிலும் பெறமுடியாது, தயங்கி, உபநிஷத் வாக்யங்களைத் தமக்கு ஏற்பட்டிருக்கும் அனுபவத்தை ஒட்டிப் பொருள்படுத்தித்தங்கள் அனுபவமே முடிவென்று கொண்டு புதிய யுக்திவாதங்கள் எற்படுத்திச் சிஷ்யர்கள் ஸம்பாதித்தனரே ஒழிய வேறல்ல. உண்மையான வேதாந்தம் ஸாதாரண ஜனங்கள்புத்திக்குப் பிடிபடாமலிருந்து குழப்பத்தை உண்டாக்குவதால் இப்புதிய யுக்திவாதங்களைப் பின்பற்ற சிஷ்யர்கள் ஏற்பட்டனர். இம்மாதிரி சில நுட்ப புத்திமான்கள் வேத ஸம்மதமான புதிய வழிகளை வெளிப்படுத்த ஆவல் கொண்டு ஆசார்ய ஸ்தானமாகித் தம் அனுபவத்திற்கு மேலான அனுபவம் இல்லை என்றுஉறுதி மொழி கூறி வெளிவந்தது முற்கூறிய ஜனங்களுக்கு ஓர் பெரிய நன்மையே. இவ்வாசாரியர்கள் தம் நிலையைவிட மேலான நிலைக்குப் போகமுடியாததால் மேலான நிலையே இல்லை என்று மதித்தனர்; தமக்கு அஸாத்யமாக இருப்பவைகளை எவருக்கும் அஸாத்யம் என்றே மாறுக எண்ணிவிட்டனர். முடிவான அனுபவம் இன்னும் வாராததால், டிரஸ்ஸர் தமது அனுபவத்தைக் கொண்டுமுரட்டுத்தனமாக யுக்திவாதம்விடாது செய்து வருவராயின், இவ்வாசாரியர்கள் செய்தகுற்றத்தையே செய்தவராவார். பேதபுத்தி முற்றிலும் போய், ஸமுத்திரத்தில் சேர்ந்த ஆறுபோல நமது அகங்காரம் முற்றிலும் மறைந்து, பிரபஞ்சவாசனையே அற்று, மனம் முற்றிலும் நாசமாகும் ஓர் அனுபவம் இருக்கின்றது என்று அநேக மஹான்கள் ஐயம் திரிபற வெளியிட்டிருக்கின்றனர். இந்நிலையை அடையும் வரையில் ஒருவனுக்குத் திருப்தி வந்துவிடக்கூடாது.இந்நிலையை அடைவதென்றால் உலகம் பிரக்ஞை மறுபடி வாராதிருக்கும் என்பதல்ல. இந்நிலையை அடைந்து உலகத்தில் நடமாடும் பரமாத்மாவுக்கும் ஸாதாரண பாமரனுக்கும் முக்யவித்யாஸம் யாதெனில் முன்னவனுக்கு எங்கும் பரம்பொருளே தோன்றும், பின்னவனுக்கு எங்கும் ஸுகதுக்கம்முதலியது் துவந்துவங்களே தோன்றும். உபநிஷத்து வாக்கியப்படி முன்னவன் 'தன்னை எல்லாவற்றிலும், எல்லாவற்றையும் தன்னுள்ளும் காண்பான்.' அவன் பிரபஞ்ச நிலைக்கு வருங்கால் தன் அனுபவத்தால் எற்பட்ட சாந்தியுடன் இருந்து, தன்னைச் சுற்றிலும் பரிசுத்தம் சாந்தம் முதலியவைகள் குடிகொண்டிருக்கத், தன்னோடு ஸம்பந்தப்படுபவர்கள் எல்லோரையும் மேன்மை அடையும்படி செய்வான்.

'எங்கே தன்னம் தனியாக விருக்கும் பரம்பொருள், எனக்கு தனித்து ஓர் இருப்பில்லாதபடி என்னை விழுங்கிவிடுமோ?' என்று டிரஸ்ஸர் அனுவசியமாகப் பயப்படுகிறுர். இந்தப் பயத்தினுலேயே ஹிந்து சாஸ்திரமுடிவை ஓர் விளங்கா நிலை என்று கருதி, அதை அடைவதால் அடைபவனுக்கு ஓர் தனியிருப்பு ஏற்பட இடமில்லாமல், அடையும் முடிவாம் கடவுள் தன்னை முழுத்தாவண்ணம்மிருந்த ஆவலோடுஅதைஅணுகாது ஒதுங்கிநிற்கிறுர். ஹிந்துமதமுடிவைபற்றி இவர் முற்றிலும் தவறுன அபிப்பிராயம் கொண்டிருக்கின்றனர். இதுபோலவே ஸாதாரணமாக எல்லோரும் மதிக்கின்றனர். பிருகிருதி சாஸ்திரம் எவ்வளவு ஸதாரண ஜனங்களுக்கு விளங்காததாகக் காணப்படுமோ, அதுபோலவேதான் ஆத்மானுபவமும் சாஸ்திரப் பழக்கம் இல்லாதவர்களுக்கு விளங்கா நிலையாகக் காணப்படும். செடி, நிலக்கரி, பூச்சி, நக்ஷத்ரங்கள், பூமியின்காலம், இதுபோன்ற பிரகிருதி சாஸ்திர விஷயங்களின் ரஹஸ்யத்தை உள்ளபடி உணர்தல் ஸாதாரணம், கூமொனதொழில், என்று கூறும் இக்காலத்து அறிவுடையோர், முன்பின் யோசிக்காது, இவைகளை உணரவல்ல அறிவின் ஸ்வரூபம் இத்தன்மையது என்று உணருவது விளங்கா நிலைஎன்று ஒரே அடியாய் கூறுவது மிகுந்த ஆச்சரியத்தை உண்டாக்குகின்றது! தன்னைத்தான் உணர்தல் விளங்கா நிலையாம்; ஆனுல் தன்னை நீங்கலாக மற்றையவைகளை உணருவது சாஸ்திரீக நிலையாம்! இதென்ன விபரீதம் நாம் பிறந்தது முதல் வெளி நோக்கமுடையவர்கள் நமது இந்திரியாதிகளை வெளியே செலவிட்டே பழ

கியவர்கள். அவைகளை உள்புறம்திருப்பித் தம்மைஉணரச்செய்வது என்பதை நாம் நடுநடுங்கி விளங்காநிலை என்று கூறுவது நமது யுக்திக்கு விரோதமன்று. ஆனால் மனப்பூர்வமாகப் பாடுபடும் முமூக்ஷுக்கள், மின்சாரம் முதலிய நுட்பவிஷயங்களை உணருவது எவ்வளவு ஸாதாரண விஷயமோ அதுபோலவேதான் தன்னைத்தான் உணருவதும் என்று உணர்ந்து, ஸாதாரண அறிவுடையோர்கள் இம்முடிவைப் பற்றிக்கொண்டிருக்கும் பயம் முதலியன எல்லாம் வெறும் மூட நம்பிக்கை, யுக்திக்குப் பொருந்தா, என்று மதித்துத் தேறி நிற்கவேண்டும்.

மேலும் டிரஸ்ஸர் நடுங்குவதுபோல நடுங்க இடமேஇல்லை. ஆராதிக்கப்படும் கடவுள்பக்தனை விழுங்கிவிடுவதே இல்லை. பக்தனது இருப்பு ஸ்திரப்படுகிறது. அவன் பரசுத்தனாகவும் மேன்மை உடையவனாகவும் ஆகிறான். ஆத்மானுபவத்தால் தன்னுள் இருக்கும் பரமாத்ம ஸம்பந்த உணர்ச்சி உண்டாக அவன் உருவின்றி உடனே கரைந்து போகாது, எல்லாவித நன்மைகளுக்கும் நிலயமாகி அற்புதச் செயல்களை செய்யும் திறனுடையவன் ஆவான். வியாசர், சுகர், வஸிஷ்டர், சங்கரர் முதலிய மஹான்கள் ஆத்மானுபவ விஷயத்தில் ஒரே நிலையிலிருந்தபோதிலும், உலக நடவடிக்கையில் ஒரே மாதிரியாக இல்லாது அவரவர்கள் தத்தமக்கு ஏற்றப்படி சிறந்த நன்மைகளையே செய்திருக்கின்றனர் பரம்பொருளே அவர்கள் மூலமாகத் தொழிற்பட்டபோதிலும், ஒரே மாதிரியாக வெளிவராது வெவ்வேறு விதமாகவே அவர்களைத் தூண்டிற்று. எண்ணரும் திசைகளோடிப் பரந்திருக்கும் ஹிமாலயத்திற்கு நிகர் என்று கூறத்தக்க மிகப் பெரிதான மஹாபாரத மூலமாக ஒருவர் உலகை சீர்படுத்தினர். அளவு ஒழுங்கு முதலியவைகளில் ஹிமாலயத்தைஒத்திருந்தபோதிலும் அதைவிடஉலகில் வெகுகாலம் நிலைபெற்று இந்நூல் மனிதர்களை மேன்மைப்படுத்தும் விஷயத்தில் ஹிமாலயத்தை மிஞ்சிவிட்டது. மற்றொருவர் மனிதன் வர்ணனை சக்தியுள் அகப்படாத அற்புதமான பரம் பொருளைக் கிருஷ்ணனாக வர்ணித்து உலகை உய்யும்படிசெய்தார். இவர் வர்ணித்த கிருஷ்ண பகவானே அழகு, சிறப்பு, ஆழ்ந்த நிலை இவைகளில் மிகச்சிறந்தவர். இவரை உள்ளபடி உணரவேண்டுமாகில் பிரபஞ்சம் முழுவதையும் அதற்கு அப்பாற்பட்டதையும் உணரவேண்டும். மூன்றாவதவரோ மஹரிஷிகளுள் மிகச்சிறந்தவர், பரம்பொருள் அவதாரமாகிய ஸ்ரீராமனுக்கும் ஆசாரியனாக இருந்து உபதேசம் செய்து நம்மைக்காத்தவர். நான்காமவரோ அற்புதச் சிறுவர். இளமையிலேயே ஸந்யாஸம்கொண்டு பாதகண்டம் முழுமையும் யாத்ரை செய்து தமது இனிய குரலால் சிறந்த உண்மைகளை வெகு எளிய நடையில் எடுத்துக்கூறி விமர்சித்தார். உலகமே கண்டு வியக்கும்படி அற்புத நூல்கள் செய்தார். பின்காலத்தில் இவராலேயே வேதாந்த சாஸ்திரம் நிலைபெற்றது என்று கூறவேண்டும். ஆகவே ஒவ்வொருவரும் தத்தமக்கு ஏற்றபடி உலகநன்மைக்குப் பாடுபட்டுத்தாம் அனுபவித்த கடவுளின் பெருமையை வெளிப்படுத்தினர். இவர்கள் உலகில் பழகுங்காலத்தில் தாம் தனித்திருப்பதாக எண்ணாது, அகங்காரத்தை அறவே அடக்கி, எல்லாவற்றிலும்பராதீனமாகவே நின்று நிலைபெற்றனர். ஆகவே மூற்காலத்தில் கூடகற்பனா சக்தி உண்டு; அது மனித ஸம்பந்தமில்லாது தெய்வ ஸம்பந்தமுடையதாக இருந்தமையால் மிகச்சிறந்ததாக இருந்தது.

டிரஸ்ஸர் நூலில் இருக்கும் சிற்சில யுக்திவாதங்கள் எங்களுக்குப் பொருத்தமாகப் படவில்லை அவைகள் எல்லாவற்றையும் இங்கு எடுத்து ஆண்டால் மிகப்பெருகுமாதலின், சிலவற்றை மாத்திரம் எடுத்துக்கொள்ளுவோம். 'பரம்பொருளுக்குப் பரத்வம், அபரப்பொருள்கள் இருத்தலாலேயே ஏற்பட்டது. இவ்வாறு இல்லாவிடில் வாழ்க்கை ஸாரமற்றதாகவும், பெரும் அகங்கார ஸம்பந்தமுடையதாக ஏற்படும்?' என்று கூறுகிறார் டிரஸ்ஸர். யாருக்கு ஸாரமற்றதாக இருக்கும்? பரம்பொருளுக்கு என்றே கூற வேண்டும். இம்மாதிரி யுக்திவாதம் செய்வதைவிட மௌனம் மிகவும் நன்றாக விருக்கும். இம்மாதிரி கூறுவதால், 'நாம் இல்லாது கடவுளுக்கு ஓர் இருப்பு இல்லை. அவர் செயலுக்கு அனுகூலங்கள் அல்லது பிரதிகூலங்கள் செய்யும் திறம் நமக்கு உண்டு' என்று யுக்திக்குப் பொருந்தா அஸம்பாவிதங்கள் விளையும். பாபி அல்லது புண்யாத்மாவாவது நமது தொழிலால் முடியக் கூடியது. ஆனால் நமது கர்திருத்வத்தைக் கடவுள் பரமாக விட்டுவிடுவதால் அவருக்கு நாம் உதவி புரிந்து அவர் ஆளுகைக்கு அனுகூலம் செய்கிறோம் என்பது தோன்றும். உடனே இதென்ன ஸ்வாமி! நமது கையில் அகப்பட்டுக்கொண்டு விழிக்கிறாரே! என்று யார் தான் கூறமாட்டார்கள். மேலும் 'ஆத்மானுபவ ஸமயத்தில் நமது ஆத்மா கடவுளோடு கலக்கிறது. இப்படியாயினும் அதனோடு இரண்டறக் கலப்பதில்லை' என்று கூறி இயேசுகிறிஸ்துநாதர் தான் கடவுள் மகன் என்று கூறுவது இந்த அனுபவத்தைத் தான் வெளியிடுவது என்று ஸாதிக்கிறார். இக்காலத்தில் 'நானும் என் தகப்பனும் ஒன்றே' என்ற இயேசுகிறிஸ்து நாதரின் உபதேசமொழிக்கு

வேதாந்த பரமாகப் பொருள் கூறுவதால் இந்த விஷயத்தில் டிரஸ்ஸர் ஸாதிப்பதை முற்றிலும் அங்கீகரிக்க முடியவில்லை. இயேசுகிறிஸ்து நாதர் எப்படிக் கூறியிருந்தபோதிலும், 'நான் தேஹமல்ல பரம்பொருளே!' என்று அநேக மஹான்களது அநுபவாக்கியங்கள் இருப்பதால் பரமநிலை ஒன்று உண்டு என்பதை மறுக்கமுடியாது. இந்தப் பேதமற்றபரிசுத்தநிலை ஆவலோடு அடைய முயலுபவருக்குக் குருவருளால் வித்திக்கும். குருஸஹாயமின்றி வெகுகாலம் இம்மார்க்கத்தில் நிலைத்து நிற்க முடியாது. இரண்டாம் அத்யாயத்தில் டிரஸ்ஸர் ஆத்மாவைபற்றி விஸ்தரிக்கிறார். இதில்பரமாத்மாவையும் ஜீவாத்மாவையும் அடிக்கடி பேதமின்றிக் கூறுவதால், ஆத்மஸ்வரூப விஷயத்தைப்பற்றி இவருக்கு நிச்சய ஞானமில்லை என்பது நன்கு வளங்கும். தேஹத்துக்கு வெளியில் கடவுள் தனித்திருக்கிறார் என்ற எண்ணத்தை இவரால் மாற்றவேமுடியவில்லை; ஆத்மா அறிபவன் அவஸ்தாத்ரய ஸாக்ஷி, அவைகளுக்கு அப்பாற்பட்டதால் பிரஞ்ஞாரூபன் என்பதை இவரால் நன்றாக உணரமுடியவில்லை. டிரஸ்ஸர் மறுபிறப்பு விஷயத்தைப்பற்றிக் கூறுங்கால்; 'ஒரே ஆத்மா தேஹம்விட்டு தேஹம்போய் அநேக ஜன்மங்கள் எடுக்கிறது என்று கொள்ளாது, தேஹ அணுக்களின் கூட்டமேஆத்மா; அவ்வணுக்கள் ஒழுங்காக புல்பூண்டு முதலிய வைகள் தேஹங்களாகி, முடிவில் மனிதன் தேஹத்தின் அணுக்களாகின்றன என்று கொண்டால் பிரபஞ்சத் தோற்றத்தில் எல்லா விஷயங்களுக்கும் யுக்திக்குப்பொருந்தும்படி காரணம் கூறிவிடலாம்' என்று அபிப்பிராயப்படுகிறார். ஜந்துக்கள்தம்முள் உள்ள பரஸ்பரபேதத்திற்குத் தகுந்த முகாந்திரம் காட்டாததாலும், ஆத்மா அணுக்களின் சேர்க்கையே ஒழிய வேறல்ல என்ற கொள்கையைப் பின்பற்றுவதாலும் இந்த அபிப்பிராயம் யுக்திக்குப் பொருத்தமாயிருப்பதல்ல. ஆத்மஸ்வரூபத்தை ஊன்றி விசாரித்தால் இந்த யுக்திவாதம் நிலைக்காது.

இம்மாதிரியான யுக்திக்குப் பொருந்தா விஷயம் இப்புத்தகத்துள் காணப்படினும்; இது இக்காலத்தியப் புத்தகங்களுள் மிகச்சிறந்தது. இதுபற்றியேதான் நாம் இம்புத்தகத்தைப்பற்றி இவ்வுளவு விஸ்தாரமாகக் குறிப்பெழுதத்தொடங்கியது. ஆகவே முடிக்குமுன் 'இவ்வனுபவம் வரவர முதிர்ச்சியடைந்து டிரஸ்ஸர் ஆத்மாவேஸத்யம் என்றஅநுபவத்தில்நிலைபெறட்டும்' என்று கடவுளை மனப்பூர்வமாக பிரார்த்தனை செய்து கொள்ளுகிறோம். இந்த ஆத்மாவே உண்மையாக நோக்கில், பிரபஞ்ச சிருஷ்டியாதிகளுக்குக் காரணமென்று அஞ்ஞான திசையில் மதிக்கப்படும் பொருளாகிய கடவுள். உண்மையில் இக்கடவுள் இரண்டற்ற ஒன்றே இதற்கு ஒப்புயர்வானது ஒன்றுமில்லை. இப்பரம்பொருளை உள்ளபடி உணருங்கால் பிரபஞ்சத் தோற்றமும் மறையும், மனப்பற்றுகள் ஒழிய மனிதன் அழிவற்றவனாவான்

ஷேக்ஸ்பியரது பிறப்பு, வளர்ப்பு, கவிமாண்பு



ஷேக்ஸ்பியர் என்னும் மகாகவி, இங்கிலாந்து தேசத்தில், வாரிக் என்னும் மாகாணத்தில், ஆவன் நதிக்கரையிலுள்ள ஸ்ட்ராட்வட் என்னும் பட்டணத்தில் 1564-ம் ஆண்டில் பிறந்தார். ஏப்ரல் மாதம் இன்ன தேதியில் பிறந்தாரென்பது குறிப்பாகக் காணப்படவில்லை. ஆகையால் 22-வது அல்லது 23-வது தேதி என்று இன்னும் ஒரு விவாதம் உண்டு. ஆனால் அவர் தனது ஜன்மதினத்திலேயே, 1616-ம் வருஷத்தில் இறந்தாரென்று சொல்லப்படுவதால், அவர் பிறந்ததும் இறந்தது போலவே, ஏப்ரல் மாதம், 23-வது தேதி என்று கணிக்கப்படுகிறது. (அதுபற்றியே அவர் சரிதையும் அவர் பிறந்த மாதமாகிய ஏப்ரல் மாதத்தில் வெளியிடப்பட்டது). இவ்விஷயத்தின் முக்கியம் என்னவென்றால், ஸர்தாமஸ் ப்ரௌன் என்னும் ஆங்கில நூலாசிரியர் ஒருவர், இங்ஙனம் அனேகம் பெரியோர், பிறந்த நக்ஷத்திரங்களிலேயே இறந்திருக்கிறார்களென்று ஓர் குறிப்பு கண்டிருப்பதுபற்றியாகும். இவ்வாறு ஒருவரது வாழ்நாள், ஒரு முழுச் சுழல் வந்து, கொக்குவில் முதலிய அலங்கார அமைப்புகள் போல் முடிவு பெறுவது, ஒரு ஆச்சரியமான விஷயம் என்று நாம் சொல்லலாம்.

இனி இவர் பிறந்தது, அச்சமயத்தில் இங்கிலாந்து

தேசத்தில் முக்கிய குடிகளாயும் தேசத்திற் கோராதரவாயுமிருந்த குடியானவர் வம்சமாகும். இவரது முன்னோர் நிலத்தை யுழுது பயிர் செய்பவர்களாயும், பின் ஐசுவரியம்வந்தபிறகு நிலங்களினின்று கிடைக்கும் வருமானத்தில் ஜீவனஞ் செய்பவர்களாயு மிருந்தார்கள். இவரது தகப்பனார் ஜான் ஷேக்ஸ்பியர் என்பவர், தானியம், கம்பளி முதலியவற்றில் வியாபாரம் செய்து வந்தார். இவரது கைக்கீழ் ஒரு கசாப்புக்கடையுமிருந்ததாகத் தெரிகிறது. இவர் சிலகாலம் வெள்ளாட்டுத் தோலாலும், நீர் நாய்த் தோலாலும் செய்யப்பட்ட கையுறைகளைச் செய்து மிகுந்த இலாபம் அடைந்துவந்தார். இவர் அவ்வூரிலுள்ள முனிசிபாலிட்டி போன்ற சபையொன்றில் வெகுகாலம் தலைவராய் இருந்ததோடு வேறுவிதமான வேலைகளையும் பார்த்து வந்தார். அப்படியிருக்கையில் இவருக்கு எவ்விதமாக நஷ்டம் வந்தது என்று தெளிவாகத் தெரியவில்லை. அப்படி நஷ்டம் வந்தபோது தன் மகன் படிப்பை நிறுத்திவிட வேண்டியிருந்தது.

ஸேக்ஸ்பியரது தாயார் ராபர்ட் ஆர்டன் என்பவரது குமாரத்தியாகிய மேரி என்பவள். ஜான் ஷேக்ஸ்பியருக்கு வாழ்க்கைப்படும்போது இவள் ஸ்திரீதனமாக அதிக நிலங்கள் கொண்டுவந்தாள். ஆனால் முன் கூறியவாறு நஷ்டமுற்றபோது அந்நிலங்களை லாம்பர்ட் என்பவருக்கு 1578-ம் வருஷத்தில் அடமானம் செய்ய வேண்டிவந்தது. இந்நிலத்தை ஷேக்ஸ்பியர் எங்ஙனம் மீட்டுக்கொண்டாரென்று இனிக் காண்போம். நமதுகவி, ஜான் ஷேக்ஸ்பியரது முதற் பிள்ளை. இவரன்றி மூன்று பிள்ளைகளும், ஒரு பெண்ணும் பிறந்தார்கள்.

ஷேக்ஸ்பியர் 1571-ம் வருஷத்தில், அதாவது தனது எழாவது வயதில் பள்ளிக்கூடஞ் சேர்ந்து படித்து வந்தார். 1577-ம் வருஷத்தில் தனது தகப்பனாருக்கு நஷ்டம்வரவே, அவ்வருஷத்தில் படிப்பை நிறுத்தி விட்டு கீசாப்புக் கடையிலிருந்ததாக டௌடால் என்பவரும் ஆபீர் என்பவரும் சொல்லுகிறார்கள். இப்படிச் சிறு வயதிலேயே படிப்பை நிறுத்திவிட்டதால், இவர் லத்தீன், கிரீக் முதலிய பாஷைகளைச் சிறிதும் சரிவரக் கற்றதில்லை யென்றும், கல்வியில் அதிக தேர்ச்சி யில்லாமல் தனது இயற்புத்தி மேன்மையால் சிறப்படைந்தாரென்றும் சொல்லுதல் உண்டு. ஆனால் இவ்விஷயத்தைத் தீர விசாரித்த ஸ்பென்ஸர் பேயின்ஸ் என்பவர் ஷேக்ஸ்பியர், பேன் ஜான்ஸன், மார் 1582-ம் வருஷத்தில் தன்னிலும் எட்டு வயதிற்கு லோ முதலிய கலாசாலைக் கல்வி பெற்றவர் கற்ற அளவு கற்காவிட்டாலும், லத்தீன் பாஷையிலுள்ள அரும் பெரும் புத்தகங்களை யறிந்துகொள்ளுமாறு வேண்டியபடி, படித்திருந்தாரென்பதற்குச் சிறிதும் ஐயமில்லை என்று வெகு திண்ணமாய்க் கூறியுள்ளார்.

மூத்த **ஆன்ஹாத்வே** என்பவளை மணம் புரிந்தார். இங்ஙனம் வயதுக்கு மூத்தவளை மணம்புரிதல் நன்றன்றென்று நமது சாஸ்திரங்களும் வைத்திய சாஸ்திரங்களு மெடுத்துரைக்கின்றன. என்றாலும் அது எக்காலத்திலும் உண்மையான தல்லவென்று, சென்ற நூற்றாண்டில் **ப்ரௌனிங்** என்னும் கவியினது சரித்திரத்தினால் நமக்குத் தெரியவருகிறது. **ப்ரௌனிங்கினது** மனைவியும் ஒருகவி! அவரினும் அவள் ஆறு வயதுக்கு மூத்தவள். என்றாலும் அவரது மன ஐக்கியமும் பெருமையும் மாட்சிமையும் எளிதினுரைக்கற்பாலதன்று. ஆனால் ஷேக்ஸ்பியர் விஷயத்தில் இப்படித் தன் வயதின் மூத்த மங்கைதனை மணந்ததினால் அதிக வேற்றுமையும், கணவனுக்கும் மனைவிக்குமிணக்க மில்லாமையும் இருந்ததாகத் தெரிகிறது. இதுபற்றியே **பன்னிரண்டாம்இரவு** என்னும் நாடகத்தில், வயோலாவுக்கு ஆர்சினோ பிரபு புத்திமதி யளிக்கும்பொழுது ஒருமனிதன் எப்பொழுதும் தன்னிலும் இளைய பெண்ணையே மணத்தல் தகுதியென்று சொன்னார் என்பதுண்டு. கலியாணமாகிச் சிலமாதத்தில் ஒரு குழந்தையும் 1585-ம் வருஷத்தில் இவருக்கு இரட்டைக் குழந்தைகளும் பிறந்தன.

இப்படிக் குடும்பம் அதிகரிக்கவே தன் ஜீவனத்திற்கு ஒருவழி தேடவேண்டியது முக்கியமாக ஏற்பட்டது. ஸ்டராட்வட் என்னும் பட்டணத்தை விட்டுவிட்டு பதினொரு வருஷகாலமாக வேறே இடங்களிலிருக்க நேரிட்டது.

இது விஷயமாக ஒரு கதையுண்டு. அதாவது ஸர் தாமஸ் லூஸி என்பவர்க்கு மான்கள் யதேச்சையாய்த் திரியக்கூடிய பெரியவனம் ஒன்றுண்டு. அவர் காட்டில் துஷ்டச்சிறுவர்களும் பாவியரும் அடிக்கடி அவருக்குத் தெரியாமல் மான் வேட்டையாடி, மான்களைக் கொன்று கொண்டுபோய் விடுவதுண்டு. ஷேக்ஸ்பியரும் கெட்ட சகவாசத்தின் வழியாய் மற்றவர்களோடு மான்களைக் கொல்லுவதும் அதற்காக அடிபடுவதும், அபராதம் கொடுப்பதுமாக விருந்தார் என்று சிலர் சொல்லுகிறார்கள். இதனுண்மை இத்தகையது என்று விளங்க வில்லை. என்றாலும் 1585-ம் வருஷத்தில், அப்

படி மானைக் கொன்றதாகவும், அதற்காகத் தண்டனைக் குட்பட்டதாகவும், ரோ என்பவர் எழுதியவற்றாலும், ஸாபெர்டன் என்னுமூரில் பாதிரியாராயிருந்த டேவிஸ் என்பவர் எழுதியவற்றாலுந் தெளிவாகத் தெரிகிறது. ஷேக்ஸ்பியர் இவ்விஷயத்தில் மிகவும் மனவுறுத்துதல் கொண்டு, ஸர் தாமஸ் லூஸிக்கெதிராக ஓர் கவி செய்ததாகச் சொல்லுகிறார்கள். ஆனால் அந்தப் பாட்டு இதுவரை நிலையாமையால் அது விஷயம் அவ்வளவாக நிச்சயிக்கமுடியாது. என்றாலும் மற்றத்தடவைகளைப்போல் சும்மா விட்டுவிடாமல் அதிகமாய்த் தொந்தரவு லூஸி என்பவர் உண்டாக்கின படியால் அதன் மும்முரம் இப்பாட்டினு லுண்டாயிருக்கலாம். அங்ஙனம் கடினமாகத் தண்டனைக்கு ஏற்பாடு செய்யவே, ஷேக்ஸ்பியர் ஊரைவிட்டு ஓடிப்போனார். இவர் 1586-ம் வருஷத்தில் தான் லண்டன் நகருக்குப் போனார் என்று தெரிகிறபடியால் 1585-ம் வருஷம் முழுவதும் என்னசெய்து கொண்டிருந்தாரென்று விசாரிக்கப்புகின், கிராமாந்தரங்களில் ஒரு வாத்தியாரா யிருந்தாரென்று **வில்யம் பீஸ்டன்** என்பவர் சொல்லுகிறார். பிறகு கடைசியில் உபாத்திமை சரிக்கட்டி வாராததினால் லண்டனுக்குப் போக நேர்ந்தது. இவ்விஷயத்தைவிட்டுப் போமுன்னர் இந்த மான் திருடின விஷயத்தின் உண்மையை வற்புறுத்துவன சில கூறுவாம். இவர் அப்படிப் பாட்டு எழுதியது உண்மையா யிருந்தாலும் இல்லாவிட்டாலும், ஸர் தாமஸ் லூஸி என்பவரை ஷாலோ என்னும் ஜட்ஜியாகவும், அவர் பெயர் குறிப்பிடுவதுபோல நிறைந்த கல்வியில்லாதவர் என்றும், மூடன் என்றும், ஒரு சிறு விஷயத்தையும் அரசன்வரை கொண்டுவந்து வீண் அமக்களம் பண்ணுகிறவன் என்றும், அவர் குடும்பக் கொடி வழியிலுள்ள, லில்லிகள் எனப்படும், Luces என்ற வார்த்தையை, பேன்கள் என்று பொருள்படும், Luses என்று மாற்றியும் பலவிதமாகக் கேலியும் கோரணியுஞ் செய்திருப்பதால், இவ்விஷய முண்மையாகவே நடந்திருத்தல் வேண்டுமென்று தெரிகிறது.

லண்டன் நகரத்தில் இவருக்கு வேண்டியவர், ஸ்டிராட்வட்டிலிருந்து முன்னமேயே போயிருந்த அச்சு பதிப்பவரான ரிச்சர்ட் பீல்டு (Richardfield). இதுவரை கிராமங்களிலிருந்தபோதும், ஸ்டராட் வட்டிலிருந்தபோதும் பறவைகள், புஷ்பங்கள் மரங்களிவைகளைப்பற்றியும் முக்கியமாகக் குதிரைகளைப்பற்றியும் நாய்களைப்பற்றியும் மிகுதியாகத் தெரிந்திருந்தார். வல்லூறு கொண்டு பறவை வேட்டையாடுதல், முயல், நரி, மான் முதலியவற்றை நாய்கொண்டு வேட்டையாடுதல், மீன் பிடித்தல், பந்தயம் ஓட்டுதல், முதலியவற்றிலெல்லாம் அதிக ஊக்கமாகப் பழகி வந்தார். லண்டனுக்கு வந்தபொழுது, சட்டங்களைப்பற்றி இவருக்குத் தெரிந்ததுகொண்டு, இவர் ஒரு வக்கீல் குமாஸ்தாவாக விருந்திருக்க வேண்டுமென்று லார்ட் காம்பெல் என்பவர் சொல்லுகிறார். ஆனால் கிப்பர் என்பவர், அக்காலத்தில் குதிரை யேறி நாடகங்களுக்கு வருபவர்கள் குதிரைகளைப் பிடித்துக் கொண்டிருந்தாரென்று சில சாதனங்கள் மூலமாய்ச் சொல்லுகிறார். பிறகு வெகு சீக்கிரமாய் 1587-ம் வருஷத்தில், நாடகமாடுபவர்களுக்கு மறந்து போனவற்றை ஞாபகப்படுத்துபவனுக்கு வேலையாளாய், அவனிட்ட ஏவல்களைச் செய்துவந்தார். லாம்பர்ட் என்பவருக்குக் கொடுத்திருந்த அடமானம் அவருக்குச் சந்ததியின்மையால் பலவழி தாண்டி ஷேக்ஸ்பியர் கைக்கு வந்தது. இதை முடித்துத் தக்க ஏற்பாடு செய்ய ஸ்டராட்வட்டிற்கு வந்ததே தவிர மற்றப்படி 1585-ம் வருஷத்தில் போனவர், 1596-ம் வருஷம்வரை, அதாவது பதினொரு வருஷகாலமாகத் தன்னூருக்கே வரவில்லை. இவ்வருஷங்களிலிவர் முதலில் நாடகமாடுபவரிலொருவராயும், பிறகு நாடக மாடுபவரிலெல்லாம் சிறந்தவராயுமானார். இவருடன்சேர்ந்து நாடகமாடினவருள் இவருக்கத்தியந்த சினேமுள்ளவர்கள், ரிச்சர்ட் பர்பேஜ், ஜான், ஹெமிங், ஹென்றி கண்டேல், ஆர்தர் பிலிப்ஸ் என்பவர்களாம். இவர்களிலிடையே கூறப்பட்ட இருவர், ஷேக்ஸ்பியர் நாடகங்களையொன்று சேர்த்துப் பதிப்பித்ததால் மட்டுமே, இன்றைக்கு மிவரது நாடகங்களை நாம் படித்து வருகிறோம். ஏனென்றால், அந்தக்காலத்தில் நாடகங்களை நாடகக் கம்பெனிகளுக்கு விற்றுவிடுவது வழக்கமாயிருந்தது. அதன்பின் சமயத்திற்கேற்ற மாறுதல்களை அப்போதைக் கப்போது செய்துவருவதால் முதற் கிரந்த கர்த்தா எழுதியதற்கும், முடிவுபெற்று நின்ற நாடகத்திற்கும் வித்தியாசம் அதிகம் ஏற்பட்டது. ஷேக்ஸ்பியர் நாடகங்களைப் பதினேழாவது நூற்றாண்டில் டிரைடன் என்னும் கவியும், பதினெட்டாவது நூற்றாண்டில் காரிக் என்னும் ஆட்டக்காரரும் அதிகமாக மாற்ற முயற்சி செய்தார்கள். சென்ற நூற்றாண்டில் ஸர் ஹென்றி இர்விங் என்ற ஆட்டக்காரர் அனேக பாகங்களைத் துண்டித்து எடுத்து விடவேண்டும் என்று சொல்லி அவ்விதமாகத் துண்டித்த பிரதியொன்றைப் பிரசுரம் செய்திருக்கிறார். இவ்வாறிருக்க இவர் கையிலகப்படாமல் ஷேக்ஸ்பியர் எழு

451

தியவாறே முற்றிலும் முழுமையாய் நமக்கு இந்த நாடகங்கள் நிலைத்திருப்பது ஹெமிங், காண்டெல் என்றுமிருவர் நட்பின் விஷயமாக ஷேக்ஸ்பியருக்குச் செய்ததுபோல உலகத்திற்கே செய்த பேருதவியாலேயே. உலகில் நன்மை செய்தோரை நினைக்கும் பொழுது இவ்விருவரும் நம்மால் நினைக்கப்படவேண்டியவர்களே.

இனி, இவர் தனதுகம்பேனியோடு, நாடகமாடவேண்டிய இடத்திற்கெல்லாம் போனாரென்று தெரிய வருகிறது. ஆனால் அதிகமாகப் பிரயாணவிஷயமாக பைத்தியங்கொண்டு திரிபவர்களை அனேகஇடங்களில் இவர் கேலி பண்ணுவதினால் இவர் வெகுதூரம் பயணம் சென்றிருக்க மாட்டாரென்று தெரிகிறது. உம்முடைய மனம்போலே என்ற நாடகத்தில், ஐரோப்பாவில் அதிகமாகப் பிரயாணம் பண்ணுகிறவர்களைக் குறித்துக் கேலியாகச்சொல்வதைக் காணலாம். மேலும் வெரோனா நகரத்திருவர் கனவான்கள் என்னும் நாடகத்தில் வெரோனாவிலிருந்து மிலான் பட்டணத்திற்குக் கடல்வழி வந்ததாகச் சொல்வதினாலும், (I. I. 71.) பெரும்புயல் என்னும் நாடகத்தில் கப்பல் மிலான் பட்டணத்துக்கோட்டை வாசல்வரை கப்பல் வந்தது என்று சொல்வதினாலும் (I. 2. (129-44) இவர் அவ்வூர்களைச்சிறிதும் பார்த்திருப்பதில்லை, அவைகளைப் பற்றிச் சரியாகத் தெரிந்திருப்பதுமில்லை யென்று தெளிவாகத் தெரிகிறது.

ஷேக்பியரது நாடகங்கள் முழுமையும் 1591-ம் வருஷத்திலிருந்து 1611-ம் வருஷத்திற்குள், அதாவது 20-வருஷத்தில் முடிவுபெற்றன. ஆகவே வருஷம் ஒன்றிற்குச் சராசரி இரண்டு நாடகங்களாகின்றன. இதுபோகத் தனது நாடகங்களையும் மற்றவரது நாடகங்களையும் அடிக்கடி திருத்தி வருவதையும், நாடகமன்றிக் கவிகளை எழுதி வந்ததையும் சேர்த்துப் பார்த்தால் அவரது மாண்பு இத்தகையது என்று கணிக்கத் தக்கச் சாதனங்களாகும். இதை யெடுத்துரைக்கு முன்னர், இனி எஞ்சி நிற்குஞ் சரித்திரக்குறிப்பைத் தொடர்ந்து முடிக்கலாம்.

1596-ம் வருஷம் அக்டோபர் மாதத்தில் ஷேக்ஸ்பியரது தகப்பனர் தனது குடும்பத்திற்குக் குடும்பக் கொடிமுடி ஒன்று ஏற்படுத்த முயற்சி செய்தார். 1597-ம் வருஷத்தில் ஸ்ட்ராட்வட் பட்டணத்தில் இருப்பனவற்றுள் பெரிய வீட்டைத் தனக்கு விலைக்கு வாங்கிக்கொண்டார். என்றாலும், 1611-ம் வருஷம் வரையில் லண்டனிலிருந்து சம்பாதித்துக் கொண்டிருந்தாரேயன்றி, ஸ்ட்ராட்வட்டிலேயே குடிவந்திருக்கவில்லை. 1599-ம் வருஷம் முதல் அவருக்கு வரும்படி மிகவும் அதிகமாயிருந்தது. அக்காலத்திய நாணயத்தின்படி அவருக்கு வருஷவரும்படி 70-பவுன் என்று கணிக்கப்படுகிறது. அக்காலத்தில் பவுன் இன்றைய விலையினும் பதின்மடங்கதிகம். ஒருபவுன் இன்றையவிலை 15 ரூபாய் என்று கணக்கிட்டால் அவர் வரும்படி எவ்வளவு என்பதைக் கணக்கிடலாம்.

1511-ம் வருஷத்திற்கப்பால் குளோப், பிளாக்பிரயர் என்னு மிரண்டு நாடகசாலையிலுமுள்ள கூட்டுப் பங்குகளை விற்றுவிட்டு ஸ்டாராட்வட்டிலேயே அதிகமாயிருந்தார். ஆனால்அடிக்கடி லண்டனுக்குப் போகவேண்டிருப்பதால், ப்ளாக்பிரயர் நாடகசாலைக்கருகாமையில் லண்டனிலும் ஒருவீடு 1613-ம் வருஷம் வாங்கினர். அவ்வீட்டிலும் ஸ்டாரட்வட்டிலுமாகத் தனது அந்திய காலத்தைப் போக்கி 1616-ம் வருஷத்தில், ஏப்ரல்மீ 23-ம் தேதியன்று இவர் உயிர் துறந்தார். அவர் பிறந்த ஊர்க்கோயில் கல்லறையில் இவரைப்புதைத்து, அவ்விடத்திலேயே சிலையொன்று மிவருக்கு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இங்கிலாந்தில் அரசர்களும், பெரிய கவிகளும், கிரந்தகர்த்தாக்களும், போர்வீரர் முதலியவர்களும் அடக்கம் செய்யப்படும் வேஸ்ட்மின்ஸ்டர் ஆபியிலும் இவருக்கு ஞாபகக்குறியாக ஓர் சிலை செய்திருக்கிறார்கள். இவ்விரண்டிடங்களுக்கும்வருஷாவருஷம் எக்காலத்திலும், முக்கியமாக ஏப்ரல் மாதசமயத்தில் அனேகர்கூட்டங் கூட்டமாகத்திருவிழா கொண்டாடுவதுபோல் அவ்விடங்களைப் போய்ப்பார்த்தும், பலவித வேடிக்கை ஏற்படுத்தி இத்தகைய மாண்புள்ள சிறந்த கவி பிறந்த மாதத்தைக் கொண்டாடுவதுமுண்டு.

இனி ஷேக்ஸ்பியரது கவி மாண்பை எடுத்துரைத்தல்வேண்டும். இதுவரை கூறியது,—பிறப்பு வளர்ப்பு —இவை இவர்போல் மற்ற யாவர்க்கும் நடக்கக் கூடிய விஷயமே. இன்னும் ஆராய்ந்து பார்க்குமிடத்து இவரினும் செல்வமுடைய குடும்பங்களில் பிறந்து, இவரைப்போல் கஷ்டமில்லாமல் சுகமாக வாழ்ந்தவர்கள் எத்தனையோ வாயிரம்பேர் என்றாலும் இவர் பட்ட கஷ்டம், இவருக்கு நேர்ந்த இடுக்கண், இடையூறு எல்லாமிவரது மனோமாட்சிமையை மேன்மைப்படுத்தியதால், அவைகளை நாம் இவ்வளவு விஸ்தாரமாய்ப் பார்க்கவேண்டி யிருந்தது. அவரெவ்விதத் தொழில் செய்யவேண்டி யிருப்பினும் அதனாற் தெரிந்து கொள்ளக்கூடிய உலக நடவடிக்கையையும், மனித இயற்கையையும், மற்றுமெல்லா விஷயங்களையுங் குறிப்பாகவும், நுண்ணறிவினோடும் பயின்று தான் எழுதியநாடகங்களில் தக்கவாறு பிரயோகித்தாரென்று நாம் குறிப்பாக அறிந்துகொள்ளவேண்டியது. நாடகத்தில்சிறந்த குணங்களும் தாழ்ந்தவையும், அரசர்களும் பிச்சைக்காரரும் மற்றெல்லோரும் உலகில் ஒருங்கே உழல்வதால், அவரது முக்கிய இயற்கைகளைத் தெளிவாக வுணர்ந்து, தக்கவாறு கவியில் பயன் படுத்துவது கவிச் சிரேஷ்டருடைய முக்கிய கடமையாகும். இத்தகைய அனுபவத்திற்கேற்றபடி அனேகந் தொழில் புரிந்து தன் அனுபவத்திலும் மற்றப்படியும் இவர் தெரிந்துகொள்ளத்தக்கசாதனங்களிலிருந்தனவென்று இதுவரை அவரது பிறப்பு வளர்ப்பு சரிதத்தினின்று தெரிந்துகொள்ளலானோம்.

இவர் கவிமாண்பைக் குறித்துப் பேசுமிடத்து; அதை எவ்விதமாகப் புகழ்ந்து பேசினாலும் பேசலாம். எவ்

வித ஸ்துதியும் இவர் கவித்திறமை தெரிந்தவர்களுக்கு இவரைப்பற்றி பேசுங்கால், இந்நாடகங்களுக்குத் தக்கனவே யென்றுரைப்பாரேயன்றி மற்றக்கவிகளைப் போல் அதிகமெனவே தோற்றாது. எங்ஙனம் அரசனாய்ப் பிறந்து ராஜகளை அமைந்த ஒருவனுக்கு எத்தகைய துணி, மணி, ஆடை, ஆபரண அலங்காரங்கள் செய்த போதிலும், அவை யவனுக்குத் தக்கனவாகவும், அவன் அழகு அதனினுஞ் சிறப்பு வாய்ந்ததாகவு மிருக்குமோ, அப்படியே இவர் மாட்சிமையும் எவ்வளவு புகழ்ச்சியையும் எளிதிற் தாங்கக்கூடியது. கோல்ரிட்ஜ் என்னுங் கவிஞர் இவரது உலக நடவடிக்கையின் நுண்ணறிவைப் புகழ்ந்து பேசுகையில் இவரை ஆயிரமியற்கையமைந்தவரென்று இவரது உலக நடவடிக்கையின் நுண்ணறிவைப் புகழ்ந்து பேசியிருக்கிறார். மாத்யூ ஆர்னால்ட் என்பவர் ஷேக்ஸ்பியர் கவிமாண்பிற்குப் பெரியதோர் மலையே உவமமாகும். எங்ஙனம் அதை யேறிச் செல்லச் செல்ல அதன் சிகரம் கிட்டாமல் இன்னும் மேலும் மேலும் போய்க்கொண்டிருக்குமோ அஃதேபோல் இவரது அறிவின் அளவும் எட்டுதல் முடியாது என்று சொல்லுகிறார். சுவின்பர்ன் என்னும் கவி ஷேகஸ்பியரைப் பற்றிப் பேசுபவர் அவர் அறிவைக் கடலுக்கொப்பிடுவது சகஜம் என்று சொல்லிப் பின்னோர் இடத்தில், உலகில் எல்லா புத்தகங்களிருந்தும் ஷேக்ஸ்பியரது நாடகங்களில்லையாயின் என்ன பயன்? இவை யிருந்து மற்றெல்லாப் புத்தகங்களுமழிந்துபோயினு முண்டாம் நஷ்டமென்ன? என்று தைரியமாகக் கேட்கிறார். இங்ஙனம் சொல்வன்மை யமைந்த கவிவாணர் மூவர், தமது ஆச்சரியத்தையும், பேருவப்பையுந் தெரிவிக்கக் கடல், மலை முதலிய உவமை யெடுத்துரைத்தல் வேண்டி வந்தது. என்றாலும் இதுபோலவே மற்றக் கவிகளைச் சொல்லியிருப்பாரேல் அது வீண் வார்த்தையாக நமக்குத் தோன்றும். ஷேக்ஸ்பியரைக் குறிப்பிட்ட போது மட்டுமே அவ்வார்த்தையின் அளவை அளவிட முடியாமையைப் பார்க்கையில் இவர் ஒருவருக்கே இத்தகைய மேன்மை யமையும் என்னலாம்.

என்றாலும் இவ்விதமாய் மட்டில்லாமற் புகழ்வது ஷேக்ஸ்பியர் மாண்பிற்கு வாய்ந்ததேயாயினும் அவரது இயற்கையையும், அவர் நாடகங்களின் சிறப்பையும் நாம் நன்குணருவதற்கு ஒரு இடையூறாகிறது. அவற்றின் உயர்வு தாழ்வு, நன்மை தீமையை ஆராய்ந்து பார்ப்பதினால் மட்டுமே நாம் அந்நாடகங்களினருமை பெருமை யறிதல் கூடும். இல்லையாயின் அவரை ஒரு விக்கிரகமாகத் தொழுவதில் அவரது உண்மையும் புலப்படாமல் இருவருக்கும் பயனின்றிப் போகும். ஷேக்ஸ்பியரோடு பழகினவர்கள் அவரை அவ்வளவு அதிகமாக மதித்தாரில்லை. அவர்களுக்குத் தம்முள் ஒருவராகவும் வெகு சாதுர்யமாய் பேசக்கூடியவராகவும், நல்ல நண்பராகவும் தோன்றினார். இவர் நாடகங்கள் அதிகமாக ஆடப்படுவதையும், அதனால் அதிகப் பணம் இவர் அடைவதையுந் தவிர மற்றப்படி உலகிலே மிகச்சிறந்த கவிஎன்று நினைக்கவில்லை. ஆட்டம் நன்றாய் ஆடி, நாடகசாலையை நடத்தும் திறம் அதிகமாயுடையவராய் யாவரோடும் கலந்து பேசிக்கொண்டு இருந்தது மட்டுமே யவர்களுக்குத் தெரியும். 1623-ம் வருஷத்தில் நாம் முன்சொல்லியவாறு ஹெமிஸ், காண்டெல் என்னுமிருவருஞ் சேர்ந்து இவர் நாடகங்களைப் பதிப்பித்த பிறகுதான், அனேகர் இவரது நாடகங்களைக் கருத்தாய்ப்படித்து இவரது கவித்திறமையை ஆராய்தல் முடிந்தது. அக்காலத்திலே பென்ஜான்ஸன் என்பவரும், அவருக்குப் பின் மில்டன் என்னுங் கவிஞரும் இவரைக்குறித்து மேன்மையாக வெடுத்துரைத்தார்கள். பின்பு இரண்டு நூற்றாண்டுகள் அல்லது இருநூறு வருஷங்களாக வெவ்வேறு பதிப்புகளும் ஷேக்ஸ்பியரைப்பற்றிய புத்தகங்களும் ஒன்றின்பின் ஒன்றாய்த் தொடர்ந்து பிடித்து வர வாரம்பித்தன. ஆகவே தற்காலத்தில் அவரைச் சேர்ந்தவரனைவரினின்றும் பிரிக்கப்பட்டு, இதுவரை எக்காலத்திலும் எத்தேசத்திலுமுள்ள கவிகளின் சிரேஷ்டரென்று எல்லோராலும் நிச்சயிக்கப்படுகிறார். எங்ஙனமெனில் இவர் மனிதவியற்கையைப்பற்றிஎல்லோராலுமதிகமாயும், எல்லோரிலுமதிக நன்றாயுஞ் சொல்லியிருக்கிறார். தத்துவ சாஸ்திரிகளும் போர்வீரர்களும் அரசாங்கத்தினர்களும் மற்றுமனேகரும் இவரது நாடகங்களை அதிக ஊக்கமாகப்படித்து வருகிறார்கள். இவர் நாடகங்கள் ஆடிப்பயன்படுவது மட்டுமெல்ல; படித்தும் மிகப்பயன் படுகின்றன. ஆகவே அவரிறந்து சென்ற மூன்று நூற்றாண்டிலும், மன உற்சாகத்திற்கும், அறிவின் விர்த்திக்கும் புண்பட்ட நெஞ்சுகளின் ஆறுதலுக்கும் மற்றும் அனேகவித நன்மைக்கும் அனேகர் இந்நாடகங்களை இன்றும் படித்துவருகிறார்கள்.

ஷேக்ஸ்பியரது மாட்சிமையைத்தீர விசாரிக்கவேண்டின் அவரெண்ணிய எண்ணங்களை நம்மனதில் நாம் திரும்பவும் எண்ணிப் பார்க்கவேண்டியிருக்கிறது. அவர்செய்த நாடகத்துள் புருஷர்களையும் அவரது இன்பந்துன்பம் முதலியவற்றையும் அதிகமாக ஊன்றி ஊன்றிப்பார்க்க நாமுமவருள் ஒருவராக ஷேக்ஸ்பியர் எப்படி ஆட்டுகிறாரோ அப்படி ஆடுகிறோம். ஆகவே ஆட்டப்படும் பொம்மை எங்ஙனம் ஆட்டுகிறவனையெத்தகையன் என்று காணல்கூடும்? கூடாது. ஷேக்ஸ்பியர் ஒரு மனிதரே. அவரும் நம்மைப்போல பலவிஷயங்களையும் பார்த்துக் குறிப்பாக வுணர்ந்து தக்கவாறு யோஜித்து நாடகம் எழுதினவர். அவர் சொல்வன்மையின் சிறப்பு, வண்மை, மேன்மை முதலியவற்றால் அவர் குறிப்பிட்ட விஷயங்களைப்பற்றி மேலுமேலும் நினைத்துப்பார்க்க, அவரறிவை அளவிட முடியாததென்பது தெரியவருகிறது. இதுபற்றியே ஷேக்ஸ்பியர் இன்னவிதமான மனுஷர், அவருக்கு இன்னது பிடிக்கும், இன்னது பிடிக்காது என்பதும் நாம் நமது அன்னியோன்னிய சிநேகரைப்பற்றி ஞாபகத்தில் வைத்துக் கொள்ளும் விஷயங்கள் போன்ற விஷயங்களுள் ஒன்

ருவீது அவருக்கு இருந்ததென்று நமக்கு அவர் எழுதியவற்றினின்றும் சிறிதும் புலப்படா. இவை எல்லாவற்றையு மொருங்கே புணர்த்தித் தன் மனதாகிய கொல்லுலையில் காய்ச்சி வார்த்த சுத்தமான உலோகம் நமக்கு நிலைத்திருக்கிறது. அதுபோக ஏனைய தூசி, துரும்பு இருந்தென்ன இல்லாமற்போயென்ன? ஹாம்லெட், வால்ஸ்டாவ், ஒதெல்லோ, கிளியோ, பேட்ரா, புருட்டஸ், கார்டிலியா முதலிய வெவ்வேறுபட்ட இயற்கையினரைக் குறிப்பிடக்கூடிய ஷேக்ஸ்பியர், மிக வன்மையாக அவர்கள் நூலை உணர்ந்திருத்தல் வேண்டும். இவர்கள் செய்ததாகச் சொல்லப்பட்டிருப்பதைப் படிக்கவே நமக்கு ஒரு அதிர்ச்சி யுண்டாகிறது. இதுபோன்ற கதைகளையும், காரிய புருஷர்களையும் அமைப்பதென்றால், நம்மினும் பதின்மடங்கு அதிகமாக உணர்ச்சியும் அதிர்ச்சியு முடையவரன்றி மற்றையோரால் எல்லோர் மனத்து விஷயங்களைக் கவரல் முடியாது. இதுபற்றியே ரோஸெட்டி என்னுங் கவிஞர், "கவிகள் தாமெழுது மொவ்வொன்றினையும் மன முருக, கண்ணீர் வழியத் தம் முழுவுணர்ச்சியாலு முணர்ந்தாலேயன்றி, அவர் கவிகளையும் நாடகங்களையும் பார்ப்பவர் படிப்பவர் சிறிதும் அவ்விதமாக என்புருக்கங்கொள்ளல் முடியாது" என்றுஎழுதியிருக்கிறார். உண்மையாக யோஜிக்குமிடத்து கவிகளின் வார்த்தையின் வன்மை எவ்விதமாய் நம்மையுருக்குகின்றன வென்றால், அவை யொவ்வொன்றுந் தம்மிலேயே அனுபவத்தினுண்மையை யுடைத்தாயிருக்கின்றன. அதாவது அனுபவமிருந்தாவது, மற்றவரனுபவத்தைப் பார்க்கும்பொழுதாவது, கேட்கும்பொழுதாவது அதைக் கிரகித்து நம்மிலேயே நமக்குற்றபோது எங்ஙனம் படுமோ அப்படியே யுணர்ச்சியின் நுண்மையால், பழமொன்றைப் பார்த்தவுடன் அதன் உருசி தோற்றுவதுபோல், அனுபவத்தைக் கிரகிப்பதே நுண்ணறிவினறிகுறியாம். இவ்வித நுண்ணறிவை மிகுதியாக வுடைத்தாயிருத்தல் கவித்திறத்திற்கே யோர்சிறந்த அழகாகும். இஃதில்லாவிடின் எவ்வித அனுபவங்களுஞ் சிறிதும் பயனற்றனவாம். ஷேக்ஸ்பியர் இவ்வித சக்தியில் மிகுதியுஞ் சிறந்தவரென்றெல்லாராலுஞ் சொல்லப்படுகிறார். அவரெழுதியவற்றி லடங்கியிருக்கு மனுபவக்கடலின் ஆழ்மையைப் பார்க்குமிடத்து இவ்விதச் சக்தி வெகுவாயிருந்திருத்தல்வேண்டுமென்று மிகுதியுந் தெளிவாகவிளங்குகிறது. இத்தகைய நுண்ணறிவினரா யிருந்ததால்தான் சிறிதுகால மட்டுமே பள்ளிக்கூடஞ் சென்றிருந்தாராயினும், எல்லோரும் அதிசயிக்கதக்கவளவு அறிவினையுடைத்தாயிருத்தல் சாத்தியமாயிற்று. சாதாரண பேச்சுகளும், காபி ஹோட்டல் முதலிய பொது விடங்களில் பேசுகிற பேச்சுங்கூட இவர்கவலையாகக் கேட்டு எவ்வெவ்விதமாக வுபயோகிக்கலாமோ அவ்வாறெல்லாமுபயோகித்து மனித நடவடிக்கையைப்பற்றி அதிகமாய்த் தெரிந்துகொண்டார். ஆகவே எவ்விதமான கூட்டங்களிருந்தாலும், ஆங்காங்குத் தக்கவாறு அமைத்துக்கொள்ளுந் திறமுடையவரென்று இதனால் தெரிகிறது. ஆகவே இதனால் இவர் நாடகங்களுக்குண்டான நன்மையு மதிகப்பட்டது.

நம்முள் அனேகரில், மற்றவர் கேலிபண்ணும்படி சில குணங்கள் மற்றவைகளினு மதிகமாய் இருப்பதுண்டு. ஆனால் ஷேக்ஸ்பியர் விஷயத்தில் அவர்பெரிய வார்த்தைகளை உபயோகித்து அண்ட பிண்ட சராசரங்களையுமொன்றுசேர்த்து இடிஇடித்து மின்னல் மின்னி மழை பொழிவதுபோல் வார்த்தைசொல்வதைத்தவிர மற்றொன்று மிருந்ததாகத் தெரியவில்லை. ஆகவே மற்றவர்களைக் குறிப்பிடுவதுபோல சிலவார்த்தைகளில் இவர் குணமின்னது நடைவடிக்கைகளிப்படி என்று சொல்லிவிடுதல் முடியாது. என்றாலுமவர் நாடகங்களை படிக்கப்படிக்க அவரோடு பழகி, அவரெண்ணங்களையெண்ணுவதாக நமக்கோர் உணர்வு தோன்றுகிறது. அவரது வேடிக்கை நாடகங்களைப்படித்து வேடிக்கையானவிடங்களில் சிரிக்கும்போது அவ்வித விஷயங்களில் அவர் சிரித்திருப்பாரென்று அறியலாம். லீயர் என்னுமரசன் கதை அல்லது ஒதெல்லோ என்னுங் கதைகளினிறுதியில் நமக்கு அடக்க முடியாத வருத்தமும் இரக்கமும் தோன்றுகையில், ஒருஆறுதல்பொருந்த முடித்திருப்பது, பெருந்துன்பத்தினாலும் அன்பினாலும் மனோ தைரியத்தினாலும் ஒரு ஆறுதல் கொள்ளுமாறு ஷேக்ஸ்பியர் நமக்குத் தெரிவிப்பது போலிருக்கிறது.

மற்றப்படி இவரைப்பற்றித்தெரிவது இவர் சிறிதும் கஷ்டமின்றி எழுதினாரென்பதும், வெகு கெட்டிக்காரராயும், எல்லாரோடும் பிரியமாய்ப் பேசி சந்தோஷமாயிருந்தார் என்பதுமே. அப்படி யிருந்தது பற்றியே எல்லோரும் இவர் முன் வெகு சாதாரணமாகப் பேசவும் இவர் மனித நடவடிக்கையைத் தெரிந்துகொள்ளவு முடிந்தது.

பலவிதமானவர்களையும் குறிப்பாகக்கற்று அவரோடு மனமிரங்கி அவரெண்ணும் விதமே யெண்ணியபடியால் இவரை நாஸ்திகரென்றும், ரோமான் காதலியர் என்றும், பிராட்டெஸ்டன்ட் என்றும், ப்யூரிட்

454

டன் என்றும் மதவிஷயமாக வெவ்வேறு விதங்களாகக் காட்ட வெவ்வேறு புத்தகங்களெழுதப்பட்டுள்ளன. இதனுண்மையெல்லா மென்னவெனில் நம்மிலனேகர் ஒருகண் குருடாயிருந்த குதிரை, குருடானகண் பக்கம் புல்லேயில்லை யென்று எண்ணினதுபோல நமக்கு விளங்காத விஷயங்களை உடனே தப்பென்று சொல்லி விடுகிறோம். கார்டினல் நியூமன் என்னு மாங்கில நூலாசிரியரொருவர், பிராடெஸ்டன்ட கிறிஸ்தவ மதத்தினின்று ரோமான் காதலிக் ஆனார். அப்பொழுது கிரஸ்லி முதலான அனேகர் அவரேதோ சொந்தப் பிரயோஜனத்திற்காகத் தன் மதக்கொள்கையை விட்டுவிட்டாரென்று இழிவாகப் பேசினார்கள். ஆனால் அவர் சிறந்த கல்விமான் ஆகையால் தான் கொண்ட கோட்பாடுக ளின்னவென ஓர் கிரந்தம் வரைந்தார். அது கற்பவர்களனைவருக்கு மவர்செய்த செய்கை சரியானதென்றும், அப்படிச் செய்யாவிடின் மட்டுமே தன் மதக்கோட்பாட்டை விற்றதாகு மென்றுந் தெளிவாக விளங்கிற்று. இதுபோலவே உலகிலொவ்வொருவரும் தம் மனதிலுள்ள வெண்ணங்களையும், தாம் நினைத்த நினைப்பையும் தெளிவாக வுரைக்குந் திறமுடையரேல் நாம் அனேகரைப்பற்றி நினைக்கு மெண்ணங்களை யதிகமாக மாற்றுதல் வேண்டியிருக்கும். பஞ்சகாலத்தில் பிராமணனொருவன் வயலை யுழுதுகொண்டிருந்து கைகழுவாமல் கடவுளை நினையாமல் தன்மனையாள் கொண்டுவந்த கஞ்சியை வாங்கிச் சாப்பிடப் போனதைக்கண்டு 'ஆ இவன் நீசனே' என்று சொல்லப்போகையில் திடீரென்று அவன் தன்தாயார் தகப்பனார் வீட்டில் சௌக்கியமாக விருக்கிறார்களா, அவர்களுணவு அருந்தினார்களாஎன்று விசாரித்தசத்தம்காதில்பட, 'ஆ இவன் பிராமணோத்தமன், இக்கொடிய காலத்தில் கடினமாக வுழைத்து, கையலம்பாமற்கூட கஞ்சியுண்ணு மாத்திரத்திலுங்கூட தன் தாய் தகப்பனரை நினைத்தானல்லவா என்று இராமபிரான் சந்தோஷப்பட்டதாக ஒரு கதை யுண்டு இதுபோலவே, எவ்வளவு கெட்டவர்களிடத்தும் நற்குணங்கள் சிறிதேனு முண்டென்பதற் கையமில்லை. மற்றையோரதை மறந்து, நல்லவர் கெட்டவர் என்று வீண் வார்த்தை தைரியமாகப் பேசுகிறார்கள். ஷேக்ஸ்பியர் அவ்வாறின்றி ஒவ்வொரு மனிதனையும் எவ்வளவு விதமாக யோஜித்துப் பார்க்கலாமோ அவ்விதமா யெல்லாம் யோஜித்து நற்குணங்களைத் தெளிவாகக் கண்டு பிடிக்கும் சக்தியை யுடையவர். உதாரணமாக, கார்டினல் உல்ஸி என்னு மந்திரி ஒருவர் குணத்தை விவரிக்குங் கால் எல்லோரும் நினைத்த விதமாய் அவரைச் சுயகாரியக்காரனென்று மிக்கவகங்காரி யென்றும் காண்பித்துவிட்டு, கிரிபித் என்பவனைக் கொண்டு அவரது நற்குணங்களை யெல்லா மெடுத்துரைக்கிறார் ஆகவே அவர்நாடகத்தைப் பார்ப்பவர்களுக்கு உல்ஸியை பெரிய மனிதராக வெண்ணுவதா, அற்ப மனிதனாக வெண்ணுவதா யென்று தோன்றாமல் ஐயோ இத்தகையவருக்கு இவ்வளவு கஷ்டம் நேர்ந்ததே யென்றுபரிதாபமுண்டாவதோடு மனிதரது வாழ்க்கையினிலையாமையுந் தோன்றுகிறது. அப்படியே, புருட்டஸ் என்பவரைத் 'தன் சினேகிதனையே கொன்ற கொலை பாதகன்' என்று எண்ணுவோரிருக்க, எவ்விதமாய் எல்லோருஞ் சிறந்த குணவானென்று சொல்லப்பட்ட புருட்டஸ் இத்தகைய செய்கை செய்திருத்தல் கூடும் என்று தீர விசாரித்துத் 'தன் தேசத்துக்கெடுதி செய்பவன் யாவராயினென்? தனது நண்பனாயினுமென்?'' என்று தன் பிரியத்தைக்கூட எண்ணாமல் தன்னைக் கொன்று கொண்டதுபோல் தன்னுயிர் நண்பனை, தேச நன்மைக்காகக் கொன்ற தேசாபிமானி யென்னும் விஷயத்தைத் தெளிவாகக் கூறியிருக்கிறார்.

இவ்விதமாய் ஒவ்வொரு விஷயத்தையுங் குறிப்பாக, தீர விசாரித்து, உற்றுநோக்கி உண்மையை யறியுஞ் சக்தியுடையவராதலால் இவரை யியற்கைக்கே யோருவமான மிட்டிருக்கிறார்கள் ஆகையால் இதுவரையவர் குணங்களைக் குறிப்பிட்டுப் பார்த்ததில் அநேக குணங்கள் அடங்கி அமைந்து வாய்ந்த அதிக குணசீலரென்று விளங்கும்.

இனி, இவருக்கெக்காலத்தி லெவ்விதமாய்அனுபவங்கள் வந்திருக்கக் கூடுமென்று விசாரிப்போம். இவர்பிறந்த ஸ்ட்ராட்வட் என்னும் பட்டணம் ஆர்பிடன் என்னுங் காட்டுக்கருகாமையிலிருந்ததால் செடி கொடிகள் மிகுந்து அபரிமிதமாக வளர்ந்து இருக்கும் பார்வையையும், சூரியோதய, சூரியாஸ்தமன அழகையும் அக்காட்டிலுள்ளமரங்களினூடே கண்டுகளிகூர்ந்து தனது நாடகங்களில் வேண்டியவாறு பிரயோகித்திருக்கிறார். பின்னும் குழந்தைகள்விளையாடும் விளையாட்டுகளைநாடகங்களில் இவரைப்போலதிகமாகக் சேர்த்திணைத்திருப்பவரில்லை. நடுவேனிற்கனவு என்ற நாடகத்தில் வெள்ளமும் புயலுமடித்து நஷ்டமானதைக் குறிப்பித்தது, இவர்சாதாரணமாகவயல்வழிநடப்பவர்கள்போலவன்றி, நுண்மையாக ஒவ்வொரு விஷயத்தையுமறிந்தவர் என்று விளங்குகிறது. நீரோட்டங்களையும், பக்ஷிகள் பறப்பதையும், புஷ்பங்கள் மலர்வது அழிவதுமுதலியவற்றையுங் குறிப்பாகப்பார்த்து வெகுசாதுரியமாக உபயோகித்திருக்கிறார். வேட்டையாடுவதில் அதிக பிரியமுடையவரென்றுமுன்னமே சொன்னோம். பைரிகளைக்கொண்டு வேட்டையாடுவது அந்தக் காலத்தில் பிரபுக்களும் ராஜாக்களும் பழகிவந்த ஒருவேடிக்கை. இதுவிஷயம் ஷேக்ஸ்பியர் ரோமியோ ஜூலியட் என்னும் நாடகத்தில் முக்கியமாயும் இன்னு மனேக விடங்களிலும் அவ்விஷயத்தையே எக்காலத்திலும்அறிந்தவர்களுடைய திறத்தோடு பிரயோகித்திருக்கிறார். பறவைகளின் நடவடிக்கைகளதிக மணிந்தரேனும் இவை சாதாரணமாக அனேகருந் தெரிந்தவிஷயங்களே, அவற்றைக்காணுங்குறிப்பிலும்? பிரயோகிக்கும் திறத்திலுமட்டுமே இவர் திறமை விளங்கிற்று.

டி. பி. கிருஷ்ணஸாமி அய்யர் எம். ஏ.

மாணவர் பக்கம்

STUDENTS' PAGES

வியாஸ விதானம்

Essay writing

2. கதா வியாஸங்கள்

NARRATIVE ESSAYS

1. பெரியோர் சரிதை:—வித்யாரண்யஸ்வாமிகள்

Lives of greatmen:—Sri Vidyaranya.

குறிப்பு:—பிறப்பும் இளமைப்பருவமும்—யௌவன காலம்; ஞானமும், ஒழுக்கமும்—முதுமைப் பருவம்—முடிவு. பொது அபிப்பிராயங்கள்.

துங்கபத்திரா நதிதீரத்தில், பம்பை கிஷ்கிந்தை என்று பழைய பெயர்களை உடையதாயும் இப்பொழுது கோலகொண்டா ஹம்பி என்ற வழங்குவதாயுமுள்ள இடங்களுக்கு அருகாமையில் விருபாக்ஷர் என்றபெயர் தாங்கிய பரமசிவன் ஆலயமுண்டு. இந்த விடத்திற் கருகில்தான் **வித்யாரண்ய ஸ்வாமிகள்** பிறந்தது. இவர் தாய் தந்தையருக்கு முறையே **ஸ்ரீமதி**, மாயணர் என்றுபெயர். இவருக்கு **ஸோமநாதர்** என்ற ஒரு ஸஹோதரர் உண்டு. இவர் யஜுர்வேதம் பௌதாயின சாகை, பாரத்வாஜ கோத்திரத்தைச் சேர்ந்தவர். இவருக்கு **மாதவர்** என்றும், **ஸாயனர்** என்றும் வேறு இரண்டுபெயர்கள் உண்டு. பிறந்த காலம் இன்றைக்குச் சற்றேறக்குறைய 500 வருஷங்களுக்கு முன் இருக்கலாம். இவர் வெகு பால்யத்திலேயே ஸகல சாஸ்திரங்களிலும் தேர்ச்சி அடைந்து, அத்வைத விஷயங்களில் ஆதிசங்கராசார்யருக்கு ஸமமான தேர்ச்சியையும் அடைந்தார்.

இப்படி இருக்கையில் இவர், அக்காலத்தில் விஜயநகர ராஜ்யத்தில் அரசாண்டு வந்த யதுவம்சபரம்பரையில் சேர்ந்தவனான **புக்கா** என்ற அரசனுக்கு மந்திரியாக அமர்ந்தார். இவர் காலத்தில் அரசனுடைய ஆட்சி மிக ஓங்கியது. தர்மங்கள் தலைதூக்கின. வேற்றரசர்கள் அநேகரை வென்று இவர் ராஜ்யத்தை விஸ்தாரப்படுத்தினர். இக்காலத்தில் இவர் தம் கல்வித்திறனை மாதவ விருத்தி ஸித்தாந்த கௌமுதி வியாக்யானம், மாதவ வேதார்த்த ப்ரகாசம் (வேதபாஷ்யம்)அதிகரணரத்னமாலை(பிரஹ்மஸூத்ரம் 192-அதிகரணத்தின் விரிவு வியாக்யானம்) ஸர்வதர்சனஸாரஸங்கரஹம் (வேதாந்தமல்லாத,அநேகமதவிஷயங்கள் அடங்கிய நூல்) அனுபூதிப்ரகாசம், (ஸர்வ உபநிஷத் அர்த்த ஸார மனனச்சுருக்கம்) பிரஹ்மகீதை (த்வைத, விசிஷ்டாத்வைத, அத்வைத ஆராய்ச்சிகள்) பஞ்சிதசி, ஜீவன் முக்திவிவேகம், ஆதிசங்கராது சில நூல்களுக்கு வியாக்யானங்கள் முதலிய அநேக நூல்களைச்செய்து வெளியிட்டார். இவைகளில் சிலவிஷயங்களில் ஆதிசங்கரரிடமிருந்து அபிப்பிராயத்தில் தாம் பேதப்பட்டிருப்பதாக தகுந்த முகாந்தரங்கள் மூலமாக ஒளியாது இவர் வெளிப்படுத்துகிறார். அநேக எட்டுப்பிரதிகளாக தமது நூல்களைத் தயார்செய்து சில வற்றைமடங்களிலும், சிலவற்றை ஆலயங்களிலும் மிகுதி யிருந்தவைகளை பூமியில் புதைத்தும் வைத்தனர். இவர் நூல்களில் சில கொஞ்ச நாளைக்கு முன் பூமியிலிருந்து வெட்டி எடுக்கப்பட்டனவாம். இவர் நூல்களில் மாதவாமாத்யர், மாதவாரியர், மாதவசாரியர் என்று தமது பெயரை அமைத்திருக்கிறார். மூன்றாவது பெயர் ஆங்கிலத்தில் எழுதினால் மத்வாசாரியர் என்றும் உச்சரிக்க இடங்கொடுப்பதால் இவர்செய்த அநேக நூல்களைத் துரைத்தன ஆசாரியர்களில் சிலர் அறியாமையால் த்வைத ப்ரவர்த்தகரான ஸ்ரீமத்வாசாரியர் செய்ததாகக் கூறுவர்.

இவர் வெறும் ஞானத்தில் மாத்திரம் இவ்வாறிருந்ததும் அன்றி நடத்தையிலும் மிகச் சிறந்தவராக இருந்தார். மந்திரி ஸ்தானத்திலிருந்து ஜனங்களது பொது நன்மைக்குத், தம்நிலைதவறாது,வித்யாசாலை அன்ன சத்திரம் தேவாலயம் முதலியவைகள் ஏற்படுத்தி வெகுவாகப் பாடுபட்டிருக்கிறார். ஆத்ம நன்மைக்காக இவர் அநேக தான தர்மங்களைச் செய்திருக்கிறார். **பிரஜோத்பத்தி** வருஷத்தில் வைகாசிமாஸம் ஸூர்யகிரஹணத்தன்று **கச்சரம்** என்ற கிராமத்தைச் சீர்திருத்தி **மாதவபுரம்** என்றபெயர் கொடுத்து 24 பிராஹ்மணருக்குத் தானம் செய்தார். தமது தாயின் பேரால் அநேக பூதானமும் செய்தார். இதனால் அருகாமையிலிருந்த நதிக்கு மாதவதீர்த்தம் என்ற பெயரும் ஏற்பட்டதாம். சிரௌதஸ் மார்த்த கர்ம விஷயங்களில் இவர் சிறந்த நியாயம் தீர்ப்பவராக விளங்கினர். இதனோடு மாத்திரமன்றி ஸம்ஸாரத்திலிருந்தபடியே இவர் அத்வைத முடிவு விஷயத்தில் நிஷ்டை முதலியவைகளில் பழகி, விவேக வைராக்யம் முதலிய ஆத்ம குணம் நிறைந்தவராகவும் இருந்தார். இவரது சிறப்பைக் கண்டு இவர் ஈசுவரன் அவதாரம் என்று ஜனங்கள் மதிக்க, ராஜஸபையில் எல்லோரும் விழுந்து இவர் முன் நமஸ்கரிப்பது வழக்கமாக இருந்தது.

மரத்தில் பழுத்துத் தொங்கும் ஓர் திவ்யமான மாங்கனி தேன் வருஷித்தால் நழுவி அடியிலிருந்த பாலில் விழுந்தது போல இவர் இந்நிலையில் இருந்து ஸந்யாஸாசிரமம் இவ்வாறு கைக்கொண்டார் என்பதை எடுத்துக் கூறுவோம். ஒருநாள் இவருக்குப் பிராஹ்மணர்களுக்குச்சிறந்ததான காயத்ரீ தேவதையை நேரிடக் காணவேண்டும் என்ற ஆவல் பிறக்கத், தமக்குத் தெரிந்த அநேக பிராஹ்மணோத்தர்களைத் தருவித்துக் காயத்ரீ ஜெபம் செய்யத் தொடங்கினர். செய்ய வேண்டிய கிரமப்படி நன்முறைச் செய்தும் காயத்ரீ ப்ரத்யக்ஷமாக வில்லை. அந்த ஜபத்தின் சிறப்பாலும், தேவி தோன்றாததினாலும், இவருக்கு அப்பொழுது மனத்தில் பட்ட அந்த மந்தரத்தின் அர்த்த விஷயத்தாலும், பூர்வபுண்ய பரிபாகத்தாலும், இவர் புத்தி சிறந்த தீவ்ர வைராக்யத்தில் தூண்டப்பட மனம் நிர்மலமாயிற்று. 'வைராக்யம் உள்ளபடி உண்டானால் ஸந்யாஸம் கொள்ளலாம், இவ்வாறு செய்யக் காலம் பார்க்க வேண்டியதில்லை' என்று ஆதிசங்கரர் ஸந்யாஸப் பிரதிஷ்டாபனம் செய்ததற்கு ஏற்ப, ஸாயனரும் ஸந்யாஸம் மேற்கொண்டார். உடனே காயத்ரீ தேவதை ப்ரத்யக்ஷமாகி 'என்ன வரம் வேண்டும் கேட்டுக்கொள்' என்றாள். 'எனக்கு இப்பொழுது வந்திருக்கும் நிலையே போதுமானது. வேறு வரம் யாதொன்றும் வேண்டாம்' என்று தடுத்து விட்டார். தேவி வரங்கொடுத்துவிட்டுத் தான் மறைவது என்று பிடிவாதம் பிடிக்கப்பொதுஜன நன்மைக்காகக் கர்னாடக தேசம் முழுவதும் ஒரு ஜாமம் பொற்காசு மழை பெய்யட்டும் என்று கேட்டுக்கொண்டார். தேவியின் அநுக்ரஹத்தால் அவ்வாறே நடக்க, அரசனும் குடிகளும் மிகுந்த ஸுகம் பெற்றனர் என்று இவர் சரித்திரம் கூறும்.

ஸந்யாஸி ஆச்ரமத்தில் இவருக்கு **வித்யாரண்யர்** என்றபெயர் உண்டாயிற்று. அரண்யத்தில் மரங்கள் முதலியன எவ்வாறு செழித்து ஓங்கி வளர்ந்து கிடக்குமோ அவ்வாறே ஸகல வித்தைகளும் இவரிடம் நெருங்கி ஓங்கிப் பிரகாசித்ததால் இவருக்கு இப்பெயர் கொடுக்கப்பட்டது போலும். இப்பெயர் காசியில் இவர் வேதபாஷ்யத்தைக்கண்டு மகிழ்ந்த வியாஸரால் கொடுக்கப்பட்டது என்று இவர் சரித்திரத்தில் காணப்படுகிறது. இவர் தீர்த்த யாத்திரை செய்துவருங்காலத்தில் ஒருநாள் ஓரிடத்தில் மலபாதை தீர்க்கப்போனார். அங்கு ஒரு தனிச்செங்கல் இருக்கக்கண்டு கவனியாது அதன் அருகில் மற்றோர் செங்கல்லைப்போட்டுத் தமது காரியத்தை முடித்துக்கொண்டு புறப்பட்டார். முன்னிருந்த செங்கல் அந்த ஊர் பாச்சாவின் தங்கச்செங்கல் அவன் தேடிவந்து ஸ்வாமிகள் நிலையைக்கண்டு அவர் சிறப்பை உணர்ந்து அவருக்கு ஏராளமான மானியங்கள் விட்டான். அதை ஒப்புக்கொள்ளாது அவர் தமது யாத்திரையில் கவனமாகப் புறப்பட்டுவிட்டார். இவ்வாறு இவர் பிரஹ்மநிஷ்டராய் கொஞ்சநாள். யாத்திரை செய்ய, முடிவில் இவர் தேஹஸ்திதி, யாத்திரை செய்ய முடியாத நிலைக்கு வந்துவிட்டது. அப்பொழுது தமது குருவின் உத்தரவுப்படி சிருங்கேரி மடம் ஸ்ரீசங்கராசார்ய பட்டணத்தில் அமர்ந்து அத்வைதத்தை நிலைநிறுத்தினர். இங்கிருக்குங்கால் பஞ்சதசியில் **தீபிகா** பஞ்சகத்தையும், விவேகா பஞ்சகத்தையும் செய்தார். அதைப் பூர்த்தி செய்ய முடியாமற்போக, ஸ்ரீ பாரத தீர்த்த ஸ்வாமிகள் என்பவர் இவாது அபிப்பிராயத்தின்படியே ஆனந்த பஞ்சகம் செய்து **பஞ்சதசியை** முடித்தார். காயத்ரீ தேவி ப்ரத்யக்ஷமான காலத்தில் இந்தப் பஞ்சதசியை குறிப்பாக எடுத்து 'முமுக்ஷுக்களுக்கு மிக உபயோகமான கிரந்தம் நீ செய்யப் போகிறாய். அதைப் படித்தவர்கள் மற்ற நூல்களை எல்லாம் படித்த ஞானத்தையும் பலனையும் பெறுவார்கள்' என்று அனுக்ரஹித்திருந்தாள். ஸ்ரீவித்யாரண்ய ஸ்வாமிகளால் சிருங்கேரி மடத்திற்கு மிகுந்த சிறப்பும் மேன்மையும் ஏற்பட்டது.

இவரது ஆதிபத்யத்தைச் சில மடாந்தரத்தார் பின்வருமாறு பழிப்பாககூறுவர். ஆதிசங்கராசாரியர் பிரஹ்மசரியத்திலிருந்தே ஸந்யாஸம் கொண்டவர். அவ்வாறு கொண்டு குருபரம்பரை ஏற்பட்டால் தான் அந்தப் பரம்பரைக்குச் சிறப்பு உண்டு. ஆதலால் சிருங்கேரி மடத்திற்குக் கிருஹஸ்தராகி இருந்து ஸந்யாஸியான வித்யாரண்ய ஸ்வாமிகளால் மஹிமை குறைந்தது என்பர். அவர்கள் தர்க்கத்திற்கு ஸந்யாஸ ப்ரதிஷ்டாபனாசாரியரான ஆதிசங்கராசாரியர் கூறிய 'எந்நிலையில் இருந்தாலும் உண்மையான வைராக்யம் உண்டானகாலத்தில் வேறு எதையும் நோக்காது ஸந்யாஸம் கொள்ளலாம்' என்பதை பதிலாகக்கூறி நிஜ வைராக்கியத்தால் ஸந்யாஸம் கொள்பவர் எத்திறத்தாராயினும் அவர்கள் ஸந்யாஸத்திற்கு பேதமே யில்லை என்று அவர்கள் வாதத்தை மறுக்கலாம். ஆகவே மடாந்தரத்தார் இவ்வாறு வித்யாரண்ய ஸ்வாமிகளை ஸம்பந்தப்படுத்தி சிருங்கேரி மடத்திற்கு இழிவு கூறுவது அவர்களது வீணான த்வேஷ புத்தியைக் காட்டுவதே ஒழிய வேறுயாதொரு பலனைத் தருவதான பேச்சல்ல.

இம்மாதிரியே விவரிக்கக்கூடிய வ்யாஸ விஷயங்கள்.

1. அசோகன்
2. சிவாஜி
3. ஆக்பர்
4. அஹல்யாபாய்
5. பத்மினி (ரஜபுத்ரி)
6. மதாசார்யர், சங்கரர்முதலியோர்
7. பீஷ்மர்
8. ராமகிருஷ்ண பரமஹம்ஸர்
9. மீராபாய்.
10. ஔவை.

போதுக்குறிப்புகள்.

இக்குறிப்புகள் எல்லா வ்யாஸ விஷயங்களிலும் விஸ்தரிக்க முடியாமலும் இருக்கலாம்.

1. முகவுரை
2. இளமைப் பருவம்
3. யௌவனகாலம்; ஞானமும் ஒழுக்கமும்
4. முதுமைப் பருவம்
5. முடிவு—பொது அபிப்ராயங்கள்

மொழிபெயர்ப்பு விளக்கம்
TRANSLATION MODELS

(2) The Earth is the scene ofcontinual movement and change. The atmosphere that encircles it is ever in motion, diffusing the sun's heat and light. From the sea and from the waters of the land, vapour is constantly passing into the air, whence, condensed into dew, clouds, rain, hail, and snow, it descends again to the earth. All over the surface of the land the water that falls from the sky courses seawards in brooks and rivers, bearing into the great deep the materials which are worn away from the land. Water is thus ceaselessly circulating between the air the land, and the sea. The sea, too, is never at rest. Its waves gnaw the edges of the land, and its currents sweep round the globe and distribute climates. Into its depths the spoils of the land are borne, there to gather into rocks, out of which new islands and continents will eventually be formed. Lastly, while the outer layers of the earth are cool, the interior is believed to be intensely hot. This internal heat manifests itself in a striking way at the surface in volcanoes and boling springs. From time to time also the solid earth is convulsed with earthquakes. There are movements of a more tranquil kind whereby some tracts are upraised and others are depressed. Thus, while old land is submerged beneath the sea, new—tracts are upheaved, to be clothed with vegetation and peopled with animals, and to form a fitting abode for man himself.

—— *Gieke's Geology Primer, Page* 185.

பூமியானது ஓயா மாறுபாட்டிற்கு இடனாக விருக்கின்றது. இதைச்சுற்றி இருக்கும் வாயுமண்டலம் ஸூர்ய வெப்பத்தையும் ஒளியையும் பரப்பிக்கொண்டு, எக்காலத்தும் அசைந்தவண்ணமாகவே இருக்கின்றது. ஸமுத்திரத்திலிருந்தும், பூமியிலுள்ள நீர்நிலைகளிருந்தும் நீராவி வாயுவுள் இடைவிடாது பாய்ந்து ஓட, அங்கு அது அடர்ந்த மேகம், மழை, ஆலங்கட்டி, பனி எடு ஆகிய இவைகளாகக் குளிர்ச்சியால் மாறி, பூமியில் மறுபடியும் இறங்குகின்றது. பூமியின் மேல் மட்டத்தில் விழும் தண்ணீர் எல்லாம் ஓடைகள் ஆறுகள் இவைகள் மூலமாக கடல் நோக்கிப் போய், பூமியின் சிதைவுப்பொருள்களை அந்த ஆழ்கடலுள் கொண்டு சேர்த்துக்கொண்டே வருகின்றன. ஆகவே தண்ணீர் இவ்வாறு இடைவிடாது வாயு, நிலம், கடல் இவைகளுக்கு இடையில் சுழன்றுகொண்டே இருக்கின்றது. கடலுக்குக் கூட ஓய்வு ஒழிவில்லை. அதன் அலைகள் நிலத்தின் ஓரங்களைப் பறித்துக்கொண்டிருக்க, அதன் நீரோட்டங்கள் பூகோளம் முழுவதும் சுற்றி ஓடி சீதோஷ்ண ஸ்திதிகளை ஒழுங்குபடுத்துகின்றன நிலத்தின் கழிவுகள் இதன் அடிவாரத்தில் தான் கொண்டு சேர்க்கப் படுகின்றன; இங்கே இவைகள் சேர்ந்து பாறைகளாக, நாளடைவில் இப்பாறைகளிலிருந்து புதிய தீவுகளும் கண்டங்களும் ஆக்கப்படுகின்றன. கடைசியாகப் பூமியின் மேல் மட்டம் குளிர்ந்திருந்தபோதிலும் இதன் உட்புறம் மிக வெப்பமாக இருக்கிறது என்று மதிக்கப்படுகிறது. மேல் மட்டத்தில் காணப்படும் எரிமலைகள், வெந்நீர் ஊற்றுக்கள் இவைகள் மூலமாக இந்த உள்வெப்பம் மிக வெளிப்படையாகத் தோற்றுகின்றது. இத்திடமான பூமி அடிக்கடிப் பூகம்பங்களால் மிகக் கொடுமையாகக்குலுக்கப்படுகின்றது. பூமியில் ஸாவதானமான ஓர் அசைவும் காணப்படுகின்றது, இதனால் சிலபாகங்கள் உயர்ந்தும் சில தாழ்ந்தும் போகின்றன. பழமையானம்நிலம் இவ்வாறு கீழே தாழ ஸ்தாவர ஜங்கமாதிகள் நிரம்புவதற்கும், மனிதனுக்கு ஏற்ற உரைவிடமாவதற்கும் தகுந்த புதியநிலம் மேலே உயர்ந்து விடுகிறது.

சிறுவர்களுக்கான பக்கங்கள்
CHILDREN'S PAGE'S

ஜீவகாருண்யமும் அபிமானமும் அல்லது ஜடபரதர் சரித்திரம் (1).—நமது நாட்டிற்குப் பரதகண்டம் என்ற பெயர் ஒன்று வழங்கிவருகிறதே அது யாதுகாரணத்தால் எற்பட்டது என்று விசாரித்திருக்கிறீர்களா? நமதுநாட்டை முன்னொருகாலத்தில் **பரதன்** என்ற ஓர் சிறந்தசக்கிரவர்த்தி ஒருகுடைக்கீழ் ஆண்டுவந்தான் என்றும், அவனால்தான் நமது நாட்டிற்கு இப்பெயர் வந்ததென்றும் சரித்திர புஸ்தகங்களிலிருந்து உங்களுக்குத் தெரியவந்திருக்கலாம். இந்தப் பரதன் யாராக இருக்கலாம் என்று சற்று நிதானிப்பீர்களாகில் உங்களுக்கு இரண்டு பரதர்கள் விஷயம் எளிதில்ஞாபகத்திற்குவரலாம். அவையாவன,மஹாபாரதம் என்ற பெயருக்குக் காரணமாகவும் துஷ்யந்தனுக்கும் சகுந்தலைக்கும் உண்டான மஹா பராக்கிரமசாலியான **ஸர்வதமனன் என்ற பரதர்** கதை, ஸஹோதர மர்யாதையில் மிகச்சிறந்தவராகிய **ஸ்ரீராமாதம்பி பரதர்** கதை ஆகிய இவைகளே. இவர்களால் நமது நாட்டிற்கு பரதகண்டம் என்ற பெயர் வரவில்லை. இப்படியானால் யாரால் வந்தது? அவர் சரித்திரம் என்ன? என்ற கேள்விகள் உண்டாகலாம், அதைத் தீர்க்கவே பின்வரும் ஜடபரத உபாக்யானத்தை விஸ்தாரமாகக் கூறுவோம்.

நமது நாட்டிற்குப் பரதகண்டம் என்றுபெயர் வரும்படி செய்த மஹானான ஜடபரதர் கதை ஸ்ரீமத் பாகவதத்தில் விஸ்தாரமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இவர் பகவத் அவதாரமாகிய ரிஷபயோகி பிள்ளை. ரிஷபர் அரசராக இருந்த காலத்தில் அவர்பொதுவாகக் கூறிய புத்திமதிகளை எல்லாம் கேட்டுத் தெரிந்தவர் இப்பரதர். ரிஷபயோகி நாடு துறந்து ஸந்யாஸம் கொண்டதும் பரதர் பட்டத்திற்கு வந்தார். இவர் விச்வரூபர் பெண்ணாகிய **பாஞ்சஜனியை** விவாஹம் செய்துகொண்டு ராஜ்யகாரியத்தை வெகுநாள் ஸரிவர நடத்திவந்தார். இவர்ராஜ்யத்திலிருக்கையிலேயே தமக்கிருந்த பரிபாகத்தால் பகவன் நிஷ்டையிலும் பழகி வந்தார். இவருக்கு ஐந்து பிள்ளைகள் உண்டானார்கள். அவர்களுள் மூத்தவனான **ஸுமதி**க்குத் தகுந்த வயது வந்ததும் ராஜ்யம் முதலியவைகளை அவன் வசம் ஒப்புவித்துவிட்டு, இவர் ஆத்ம விஷயமாக நிஷ்டை செய்து பரமபதம் பெற வனம் சென்றார்.

அங்குக் கண்டகீநதீ தீரத்தில்மிகச்சாந்தமாகஇருந்த **புலஹாசிரமத்தை** அடைந்து,நதியில் ஸ்நானம் செய்து, அங்கு அகப்பட்ட துளஸி, ஜலம், கந்த மூலபங்கள் இவைகளால் பகவானைத் தவறாது பரதர் ஆராதிக்கத் தொடங்கினார். வரவர இவர் உலகப் பற்றுக்கள் குறைந்து கொண்டே வந்தன. ஸூர்ய சந்திரன், செடி, மரங்கள் இன்னும் மற்றும் உள்ள வஸ்து விசேஷங்கள் எல்லாவற்றிலும் பகவானேபரவி நிற்பதாகப் பரதர் பாவித்து நிஷ்டையில் பழகிவந்தார்.

இது விருத்யாவதற்கு முன் பரதருக்கு ஓர் தடை எற்பட்டு அந்த ஜன்மத்திலேயே அடையவேண்டிய முத்திநிலையை மூன்றாவது ஜன்மத்தில் அடையும்படி செய்துவிட்டது. இவர் ஒருநாள் கண்டகீ நதிக்கு ஸ்நானம் செய்யப் போனபொழுது அங்குப் பூர்ணகர்ப்பமுடைய மான் ஒன்று தண்ணீர்குடிப்பதைக் கண்டார் அதைக் கவனியாது ஸ்நானம் செய்யத் தொடங்க, அப்பொழுது காட்டில் ஓர் சிங்கம் கர்ச்சித்தது. இதைக் கேட்டு அந்தமான் பயந்து அக்கரையில் துள்ளிவிழுந்து இறந்தது. போகும்பொழுது அதன் கர்ப்பம் நழுவி ஆற்றில் விழ, அது பரதர் ஸ்நானம் செய்து தலையைத் தூக்கும் ஸமயத்தில் அவர் அருகே மிதந்து வந்தது. அதைக்கண்டதும் கருணை வீர அதைப் பரதர் கையில் எடுத்துக்கொண்டார். மான் இறந்து கிடப்பது சிங்கம் கர்ச்சித்ததும்ஆகிய இவைகளின்ஸம்பந்தத்தையும்ஊஹித்தறிந்தார். உடனே அந்தமானை ஆச்ரமத்திற்குஎடுத்துச் சென்று வளர்க்கத் தொடங்கினார். வர வர அவருக்கு அதன்மேல் அபிமானம் வந்துவிட்டது. 'பிறக்கும்பொழுதே தாயைப் பறிகொடுத்துத் தவிக்கிறதே! அனாதை! நாம் கண்டதால் அல்லவா இது இம்மட்டாவது பிழைத்திருக்கிறது! நாமே இப்பொழுது இதற்கு நாதன். இதை விட்டு விட்டால் காட்டு மிருகங்களுக்கு இது எளிதில் இரையாகிவிடலாம். இதை வைத்துப் போஷிக்க வேண்டியது நமதுகடன்' என்று எண்ணமிடத் தொடங்க, மானிடம் அவருக்கு அடங்காப் பாசம் ஜனித்துவிட்டது. ராஜ்யம், மனைவி, பிள்ளைகள் எல்லாம் மோக்ஷ மார்க்கத்தில் தடையாக நிற்குமே என்று பகுத்தறிந்து துறந்து வனம் வந்த பரதருக்கு ஜீவகாருண்யம் என்ற நல்லொழுக்கத்தை முன்னிட்டுக்கொண்டு இந்த அபிமானம் வந்துவிட்டதே! கர்மபலன் யாரைத்தான் விடும் 'எல்லோரையும் காக்க ஈசன் ஒருவன் உண்டு' என்ற விஷயங்கூட மான் விஷயத்தில் பரதருக்கு மறந்து போய் விட்டது. தம்மால் தான் மான் பிழைத்திருக்கிறது. தாம் அதை வளர்க்காவிடில் அது முன்னரே இறந்திருக்கவேண்டும்' என்ற எண்ணம் பலப்பட இவர் பகந்நிஷ்டைகள் குறைந்துகொண்டே வந்துமுடிவில் ஒன்றும் இல்லாமல்போக, மான்ஆராதனமும் நிஷ்டையுமே இவர் தொழிலாகிவிட்டன. மானைவிட்டுஅவர் பிரிவதேயில்லை. அப்படிப்பிரியும்படி நேரிட்டால் ஸதா அதன் விஷயமாகவே அவர் மனம் பாய்ந்துகொண்டிருக்கும். 'நாம் பிரிந்துவந்து விட்டோமே!மான்குட்டி எப்படி 'இருக்கிறதோ' என்று பரிதவித்துக்கொண்டே போய்விட்டு அதிகமாக வழியில் நின்றுவிடாது ஆசிரமம் வருவார். சிற்சில நாள் வரும்பொழுது மான்குட்டியை அதன் இடத்தில் காணாவிடில் இவர் வயிறு பகீர் என்று எரிய பித்துப்பிடித்தவர் போலப் பரபரப்புடன் எங்கும் சுற்றிப் பார்ப்பார். அதைக்கண்டதும் இவருக்கு அளவில்லாஸந்தோஷம் உண்டாகிவிடும். அதைச் சீராட்டுவார். வரவர அதன்மேலிருந்த அபிமானத்தால் அதைவிட்டுப்பிரியவே மனம் வரவில்லை. அவசியமாக வெளியே போக வேண்டி இருந்தால் அதைத் தம்முடன் அழைத்தே செல்லுவார். ஸதா ஆசிரமத்தி

விருந்து அந்தமான் குட்டியை சீராட்டுவதே இவருக்கு ஆனந்தகரமாக இருந்தது.

இவ்வாறுமான்குட்டியின்மேல்பரதர்அன்பைவளர்த்துவிட்டார். கொஞ்சநாள் கழிந்தது. மான்குட்டிக்கு ஓடும் சக்திவர ஒருநாள் அது காட்டுள் எங்கேயோ போய்விட்டது, அஸ்தமித்தும் வரவில்லை. புருஷனை இழந்த பெண்ணைப்போலவும், பிள்ளையை இழந்ததாய் தந்தையரைப்போலவும், பணத்தைப் பறிகொடுத்த பண்ணையார்போலவும் மான்விஷயமாக பரதர் துக்கிக்கத் தொடங்கினர். இந்த துக்கம் இவர் மரணகாலம் வரையில் என்ன முயன்றும் மாறவில்லை. மாரிகாலத்து மழைபோல அடிக்கடித் திடீ திடீரென்று இவரை துக்கம்பாதிக்கத்தொடங்கிவிட்டது. அபிமானம் ஓரிடத்தில் விழுந்துவிட்டால் அது இவ்வாறு தான் எல்லோரையும் ஆட்டிவைக்கும். மரணகாலத்திலும் இந்த மான் அபிமானம் இவர் மனதைவிட்டு நீங்காமலிருக்க இவருக்கு மான் ஜன்மம் வந்தது.

இதுவரையில் வாசிப்பவர்களுக்கு 'ஜீவகாருண்யம் என்னும் நல்லொழுக்கத்தில் பழகியதால் பரதருக்குத் தாழ்ந்ததான மான் ஜன்மம் வந்தது நியாயமன்று. நல்லொழுக்கத்திற்கு இதுதானா பலன்?' என்ற சங்கை வரலாம். பரதர்முதலில் ஜீவகாருண்யத்தால் தூண்டப்பட்டுத் தான் மான் குட்டியை ஆற்று வெள்ளத்திலிருந்து காப்பாற்றினர். அதை அவர் கால் முளைக்கும் வரையில் வைத்துக் காத்ததும் ஜீவகாருண்யமாகலாம். அது விஷயமாக அவருக்கு ஏற்பட்ட பரபரப்பு முதலியன துர் அபிமானமே. 'எல்லோரையும் காக்கக் கடவுள் ஒருவன் இருக்கத்தான் மான் குட்டியது ரக்ஷகன்' என்ற துர் அபிமானமே பரதரை வீழ்த்தியது. இரக்கம் என்பதே அறியாத காட்டு முரண்டிக்கு இம்மாதிரி அபிமானம் உண்டாயிருப்பின் அவனை அது மேன்மைப்படுத்தி மேலான வழிக்குக் கொண்டுவரும். ஆனல் பரதரைப்போன்ற மஹான்கள் இம்மாதிரியான அபிமானத்திற்கு உள்படுவது, மேலே நோக்கிக் கற்பாறையில் ஏறுபவன் கீழே இருக்கும் அழகிய ஓர் கொடியைப் பற்ற முயலுவதற்கு நிகர். இதனல் கெடுதி ஸம்பவிக்குமே ஒழிய நன்மைஏற்படாது. இந்த உலக விஷய அபிமானம் சிற்சில வஸதுக்களின் மேல் தான்பாய்கிறது. இது அதிலிருந்து வரும்ஸுகதுக்காதிகளையே நோக்கமாக உடையது. இம்மாதிரியான பற்று எப்பொழுதும் சாந்தியையும் உண்மையான ஸுகத்தையும் விளைவிக்காது. ஆகவே ஸாதாரண அபிமானங்களும் முமுக்ஷுவுக்குத் தடையே என்பதை இக்கதை விளக்குகிறது. ஜீவகாருண்யத்தால் இந்தக் கேடு உண்டாகவேயில்லை. ஆதலால்தான்பெரியோர்கள் எல்லாம் 'ஸாதகத் திசைக்கண் விஷயமே தடையாம்' என்றும், 'ஸாதனமல்லாதவைகளில்மனத்தைச் செல்லவிட்டால் பரதர் விஷயத்தில் ஏற்பட்டதுபோல் பந்தகாரணமாகும்' என்றும் சொல்லியிருக்கின்றனர்.

பரதர் மறு ஜன்மத்தில் பந்தம் நீங்கிய வழியைப் பின்னர் எடுத்து விவரிப்போம்,

ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

LADIES' PAGES

பதிவ்ருதைகள் நடத்தை

மஹாபாரதம் அனுசாஸன பர்வத்தில் தர்மபுத்திரர், பாட்டனாரானபீஷ்மரைக் கேட்டுத் தர்மரஹஸ்யங்களைத் தெரிந்துகொண்டு வருகையில் அவரை நோக்கி, 'ஸகல தர்மங்களையும் உணர்ந்து தெளிந்த பாட்டனரே! நற்குணங்களுக்கு நிலயமாகிய பதிவிருதைகளின் நடத்தை விசேஷங்களைப்பற்றிப் பூர்ணமாகக் கேட்கவேண்டும் என்ற ஆவல் எனக்கு உண்டாயிருக்கிறது. அதை நன்ருக எடுத்து விஸ்தரிக்கவேண்டும்' என்று மஹா விநயத்துடன் கேட்டார்.

அதற்குப் பீஷ்மர் பின்வரும் கதையைக் கூறுவாராயினர்.

"முன்னொருகாலத்தில் ஸ்வர்க்கத்தில் கேகயர் குலத்தைச்சேர்ந்த ஸுமனை என்பவள், ஸகல உண்மைகளை உணர்ந்து, மிகுந்த சக்திவாய்ந்த சாண்டிலி என்பவளை நோக்கி, 'ஏ மங்களகரமானவளே! எம்மாதிரி நடந்துகொண்டதால், பாபலேசமே இல்லாத இந்த ஸ்வர்க்கலோகம் உனக்குக்கிடைத்தது? நீ எம்மாதிரியான காரியங்களைச் செய்து பழகினய்? அக்கினியைப் போன்ற திவ்ய தேஜஸ் உன்னிடம் ஜ்வலிக்கிறதே! நீ சந்திரனது திவ்ய புத்திரியைப்போல விளங்குகிருயே!' நீ சுத்த வெளுப்பான உடைகள் தரித்திருக்கிருய். உன் முகம் மிகுந்த ஸந்தோஷகரமாக இருக்கிறது. மிகுந்த ஸுகம் அடைந்திருக்கிருய் போலத் தோற்றுகிறது. இந்தத் திவ்யவிமானத்தில் ஏறிக்கொண்டிருப்பதால் உன் தேஜஸ் ஆயிரமடங்கு அபிவிருத்தியாகி விட்டதுபோலத் தோற்றுகிறது. சிறந்த தபஸ், விருதங்கள் தானங்களால் நீ இந்தப் பதவியை அடைந்திருப்பதாக எனக்குத் தோற்றவில்லை. இந்த நிலை உனக்கு வருவதற்கு இன்னகாரணம் என்று உண்மையை ஒளிக்காமல் கூறு,'என்று மிகுந்த ஆச்சரியத்துடன் கேட்டாள்.

"இம்மாதிரி கேட்ட ஸுமனையை நோக்கி மந்தஹாஸத்துடன் சாண்டிலி கூறலுற்ருள். 'நான் காஷாயம் மரவுரி முதலியவைகள் தரித்துக்கொள்ளவில்லை. நான் ஸந்யாஸிகளைப்போலத் தலையை மொட்டை அடித்துக்கொள்ளவில்லை. தலையை ஜடையாக வளர்த்துக்கொள்ளவும் இல்லை. இம்மாதிரி எல்லாம் செய்துகொண்டு நான் இந்தப்பதவியை அடைய முயற்சிகள் செய்யுவே இல்லை,

'நான் என் புருஷனைக் கொடுஞ்சொற்களாலாவது அலக்ஷ்ய வார்த்தைகளாலாவது அவமதித்ததே இல்லை. நான் தேவதைகள், பிதுர்க்கள், பிராஹ்மணர்கள் ஆகிய இவர்கள் விஷயத்தில் மிகுந்த சிரத்தை உடையவளாக இருந்தேன். என்னுடைய மாமியார் மாமனார்களை மிகுந்த ஜாக்ரதையுடன் வழிபட்டு வந்தேன். வஞ்சகமாக ஒருகாலத்திலும் நடக்கக் கூடாது என்ற தீர்மானத்துடன் நான் வாழ்ந்து வந்தேன். வீட்டு வாயலில் நான் அதிகமாக வந்து நிற்பதும் இல்லை; வேற்று மனுஷ்யர்களோடு அதிகமாகப் பேசுவதும் இல்லை. நான் கொடிய கர்மங்களைச் செய்ததே இல்லை. உரக்கச் சிரிக்கவே மாட்டேன். கூடிய வரையில் எதையும் ஹிம்ஸிப்பதில்லை. ரஹஸ்யம் எதையும் வெளிவிட்டதில்லை. இம்மாதிரி ஜாக்ரதையாக நடந்துவந்தேன்.

"என் புருஷன் உட்கொள்ளாததாயும், அவருக்குப் பிடிக்காததாயும் உள்ளவஸ்துஎதுவானாலும் அதைநான் தொடவே மாட்டேன். அதிகாலையில் எழுந்து என்னென்ன செய்யவேண்டுமோ அவைகளை எல்லாம் செய்து என் உறவினர்களுக்கு வேண்டியவைகளையுஞ் செய்து முடிப்பேன். என் புருஷன் ஏதாவது ஓர் காரிய விஷயமாகத் தூரதேசம் போகும்படிநேர்ந்தால், நான் வீட்டுள்ளேயே இருந்து ஸதா அவர் கார்ய ஸித்திக்கு வேண்டிய மங்களகரமான கர்மங்களையே செய்து கொண்டிருப்பேன். புருஷன் இல்லாத நாட்களில் நான் மஞ்சள் பூசிக்கொள்வதில்லை; ஆபரணங்களும் அணியமாட்டேன். ஸ்நாநம் செய்தல், மாலை அணிதல், நலங்கிட்டுக் கொள்ளுதல் முதலிய எவ்வித அழகு செய்து கொள்ளும் கார்யங்களையும் செய்யமாட்டேன்.

"என் புருஷன் உறங்குகையில் அவருக்கு எவ்வித அவஸரவேலை வந்தபோதிலும், அவரை எழுப்பவே மாட்டேன். அவர் உறங்குகையில் அருகே உட்கார்ந்திருப்பதே எனக்கு மிகுந்த ஸந்தோஷகரமாக இருக்கும். குடும்பம், உறவினர்கள் முதலியவைகளைக் காப்பாற்ற அதிகப்பணம் ஸம்பாதிக்க வேண்டும் என்று என் புருஷனை வீணாகத் தொந்திரவு செய்யவே மாட்டேன். ரஹஸ்யங்களை வெளிவிடவே மாட்டேன். வீட்டை எப்பொழுதும் வெகு சுத்தமாக வைத்துக்கொள்ளுவேன்.'

"இம்மாதிரி தன் கர்மத்திலேயே கண்ணாக எவள் இருக்கிறாளோ அவளுக்கு ஸ்வர்க்கத்தில் நல்லபதவி கிடைக்கும். அவள் இரண்டாவது அருந்ததி என்றே மதிக்கப்படுவாள்.'

"என்று ஏ தர்மபுத்ரா! தேர்ந்தவளாயும், மேன்மை பெற்றவளாயும் உள்ள சாண்டிலி கூறி முடித்தாள். இவ்வாறுகூறியவைகளை ஸுமனை கேட்டுக் கொண்டு ஆனந்த பரவசமாக இருக்கும்பொழுதே சாண்டிலி திடீரென்று மறைந்தாள். இந்தஸம்வாதத்தை யார் பர்வகாலங்களில் வாசித்து வருகிறார்களோ அவர்கள் ஸ்வர்க்கம் பெற்று அங்குள்ள நந்தனம் என்னும் உத்யானவனங்களில் சிறந்த ஸுகங்களைப்பெறுவர்.'

விசேஷ வர்த்தமானங்கள்

GENERAL NEWS

பாளயம்பட்டி கல்விப்பொருட் காக்ஷி.—இஃது ஷையூர் பாலசுப்பிரமணிய பிரதம வித்தியாசாலை சம்பந்தமாக, ஏப்ரல்மீ 6, 7, 8வ களில் வெகு விமரிசையாய் பாளயம்பட்டியில் நடந்தேறியது. மதுரையிலிருந்தும், இன்னும் அநேக ஊர்களிலிருந்தும் அநேகம் பிரபுக்கள் வந்திருந்தார்கள். இராமநாத்புரம் டிஸ்டிரிக்ட் ஜட்ஜ் மிஸ்டர் S. G. ராபர்ட்ஸ், I. C. S. அவர்களால் காக்ஷிசாலை திறக்கப்பட்டது. மிஸ்டர் ராபர்ட்ஸ் துரை அவர்கள் காக்ஷிகளின் உபயோகத்தைப்பற்றி தமிழில் வெகு தெளிவாய் எடுத்துச் சொன்னார்கள். இன்னும் அநேக பிரபுக்கள் பள்ளிக்கூடங்களுக்கு உபயோகமான அநேக சிறந்த விஷயங்களைப்பற்றி உபன்யஸித்தார்கள். இந்த மாதப் பத்திரிகையில் விவரமாய் எழுத இடமில்லாதது பற்றி அடுத்தமாதத்தில் அந்த உபன்யாஸங்களுள் சில பிரசுரம் செய்யப்படும். ஷை கல்விப்பொருட் காக்ஷியை நன்கு நடைபெற ஊக்கம் எடுத்துக்கொண்டு உழைத்தவர்கள், திருச்சுளி ரேஞ்சு ஸப் அஸிஸ்டெண்டு இன்ஸ்பெக்டர் ம-ா-ா-ஸ்ரீ, பார்த்தசாரதி நாயக்கரவர்களும், பாலசுப்பிரமணிய பிரதமவித்தியாசாலை ஹெட்மாஸ்டர் மிஸ்டர் வேங்கடராமய்யரவர்களும், ரெவரண்டு ஜப்பரி துரையவர்களும், (Rev. Jeffery) மிஸ்டர். அல்லிமுத்து நாடாரவர்களும், அவர்கள் ஜாதியாரில் அநேகரும் இக்காக்ஷிசாலை விஷயமாக ஏறக்குறைய ரூபா 5000-செலவானதாகத் தெரிகிறது. இப்பெருந் தொகைகொடுத்து உதவி செய்தோர் நாடார்களே.

பொருட்காக்ஷிகளின் பிரயோஜனங்களைப் பற்றிய வியாஸம் ஒன்று 'விவேகபோதினி' 1910-ஆம் ஆகஸ்டு மீ பத்திரிகை, 49-ம் பக்கத்தில் பிரசுரம் செய்யப்பட்டிருப்பதால் நாம் இங்கு மறுபடி எழுதவேண்டுவது அவ்வளவு அவசியமாகத் தோற்றவில்லை.

* *
*

டில்லி தர்பார்.—நம்முடைய சக்ரவர்த்தியும் அவருடைய மனைவியாரும் வருகிற டிஸம்பர் மாதம் 2-ம் தேதி பம்பாயில் வந்திறங்கி, 7-ந்தேதி டெல்லிக்குப் போவார்கள் அங்கே அவர்களுக்கு முடிசூட்டு வைபவ தர்பார் 12-ம் தேதி நடக்கும் அது சக்ரவர்த்தியின் பெருமைக்கும் அந்தஸ்துக்கும் தக்கபடி நடத்தப்படும் அப்போது தர்பாரைப்பார்க்க லக்ஷம் ஜனங்களுக்கு இடமிருக்கும்படி ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. அங்கிருந்து சக்ரவர்த்தி கல்கத்தாவுக்கு 30-ம் தேதிக்கு முன்னால் போவார்கள். இந்த வைபவத்திற்கு ஒன்றரைகோடி ரூபாய் செலவு திட்டம் போடப்பட்டிருக்கிறது.

Prescribed as a Text Book for the Preliminary Examination for Teachers' Certificates
Vide Fort St. George Gazette Notification, Educational.

சத்தியவல்லி

ஓர் சிறந்த கற்பனைக் கதை

இஃது

மா-ா-ா-ஸ்ரீ R. P. குழந்தைசாமிப் பிள்ளை, B.A., L.T. அவர்களால் இயற்றப்பட்டது.

சென்னை சர்வகலாசாலை முக்ய பரீக்ஷகரான மா-ா-ா-ஸ்ரீ T. ராமகிருஷ்ண பிள்ளை, பீ. ஏ. அவர்கள் எழுதிய முகவுரையுடன் கூடியது

ஸத்யமே ஜெயம் எனும் படிப்பினையையும் கடவுளை நம்பினோர் கைவிடப்படார் எனும் நீதியையும் கற்பித்தலோடு போதனை புகட்டும் பாகங்களும் இனிய நடையில் மனத்தை ப்ரமையுள் ஆழ்த்தும்படியாகக் கற்பனை வர்ணனை இயற்கையே ப்ரதிபலித்தாற்போலிருப்பதும் படிப்பவர் மனத்தைப்பற்றி இழுக்கும். தர்ம ஸங்கடங்களிலும் கஷ்டத்திலும் நன்மையையே கைபிடிக்க வேண்டுமென்னும் நிலைமையும் ஆழ்ந்த உணர்வோடு காட்டப்பட்டிருப்பதுடன் அக்காலங்களில் மனம் அலைபாயும் விதத்தை விவரிப்பதும் வியக்கத்தக்கது. வாக்கின் நடையும், பாஷையின் போக்கும், யுக்தியின் ஸௌசகமும், கதையின் தாட்டியும், மனதை இழுக்கும் வண்மையும் எவரும் வியக்கத் தக்கவை.

இப்புத்தகம் டிரெயினிங் ஸ்கூல்களுக்குப் பாடப்புத்தகமாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

சில முக்கிய அபிப்பிராயங்கள்

The Madras Standard :—

*** Situations are contrived with skill and the plot is constructed in an appealing way. The performance is a decided success in modern Tamil Literature. The style is learned without pedantry, simple without being vulgar and the descriptions of Nature and other things are beautiful.

***

The Hindu:—"The style approaches the easy literary model without being pedantic and the author on the whole is to be congratulated on his ideal in this Novel and *we commend the book for ladies and boys.*

***

Rev. D. Devapriam, B.A., L.T., Head Master, L. M. High School, Shiyali:—Your Tamil novel *is simply excellent in matter and style.* The publication of such books confers a great boon upon the public especially the women. *It deserves to be introduced as an extra reading book in Schools.*

***

ஸுதேச மித்திரன்.—*** கதாநாயகியான சத்தியவல்லி எவ்வளவோ கஷ்ட தசைக்கு வந்து கூடத் தனது சத்தியத்தையும், பிதாவின் ஆக்ஞையையும், தளரவிடாமல் பாதுகாத்த விதத்தை நூலாசிரியர் மிக நன்றாய் எடுத்துச் சொல்லுகிறார். இந்த நூல் சாதாரணமான தமிழ்க் கல்வியுடையவர்களுக்கு மிகவும் பிரயோஜன முடையதென்பதில் சந்தேகமில்லை.**

***

பூர்ண சந்த்ரோதயம்.—இது எளிய தமிழ்நடையில் உள்ளது. படிப்பவர் மனம் உருகக்கூடியதாக அழகிய கற்பனைகளைக் கொண்டது. இதை வாசித்துக்கொண்டிருந்த ஒருவர் கண்ணும் கண்ணீருமாக இருந்தார். அவர் அவ்வாறிருக்குங் காரணத்தை வினவ, அவர், கதாநாயகி பட்ட துன்பமும், அநியாயமான கஷ்டமும், கண்ணீரை ஆறாகப் பெருக்கியதென்றார். பெண்பாலார் இப்புத்தகத்தை வாசிப்பார்களாகில் மனத்தூய்மை எய்துவார்கள்; நன்மதியும் பெறுவார்கள்.

ஜனரல் பப்ளிஷிங் கம்பெனி, மயிலாப்பூர், மதராஸ்

விவேக போதினி

ஓர் சிறந்த மாதத் தமிழ்ப் பத்திரிகை. 1908-ம் வூ முதல் பிரசுரமாகி வருகிறது. யாவராலும் புகழப்பெற்றது

இப்பத்திரிகைக்கு விஷயதானம் செய்வோர்கள் பெருமையால், இதன் பெருமையை நன்கு அறியலாம். மிக எளிய நடையில் எழுதப்படுகிறது. சிறுவர்கள் சிறுமிகள்கூட களிப்புடன் வாசிக்கக்கூடியது. சித்திரப்படங்களுடன் பிரதி மாதமும் தவறாது பிரசுரமாகிறது. எளியவரும் வாங்கி வாசித்து நற்பயனடையவே சந்தாத்தொகையும் மிகக் குறைவாய் வைக்கப்பட்டிருக்கிறது. [யாவருக்கும் உபயோகத்தையும் உத்ஸாகத்தையும் கொடுக்கக்கூடிய வேறொரு பத்திரிகை இன்னமும் எவராலும் பதிப்பிக்கப்படவில்லையென்று தைரியமாய்ச் சொல்லுவோம்.]

இப்பத்திரிகையில் பிரசுரமாகும் விஷயங்கள்:—(1) நீதி, (2) மஹான்களின் ஜீவிய சரிதை, (3) இயற்கை அற்புதங்கள், (4) உலக ஒழுக்கம், (5) கல்வியபிவிருத்திக்குரிய பாஷா விஷயம், (6) வியவஸாயம், கைத்தொழில், வியாபாரம், (7) உயர்தரமான கட்டுக்கதைகள் நாடகங்கள், (8) சிறுவர்க்கான சிறந்த நீதிக்கதைகள், (9) ஸ்திரீகளுக்கான நற்போதங்கள், (10) சாஸ்திரீக விசேஷ வர்த்தமானங்கள்.

தபாற்கூலி உட்பட சந்தா விபரம்

இந்தியா, பர்மா, சிலோன்					பினங்கு, சிங்கப்பூர், நேடால், வகையரா இடங்களுக்கு				
ஒரு வருஷத்துக்கு	ரூ.	3	0	0	ஒரு வருஷத்துக்கு	ரூ.	4	8	0
ஆறு மாதத்திற்கு	,,	1	12	0	ஆறு மாதத்திற்கு	,,	2	4	0
தனிப்பிரதி	,,	0	5	0	தனிப்பிரதி	,,	0	6	0

☞ முன்பணமாகத்தான் சந்தாத்தொகையை அனுப்பவேண்டும். அல்லது, வி. பி. மூலமாய் முதல் ஸஞ்சிகையை ஒருவருஷத்திய அல்லது ஆறு மாதத்திய சந்தா கொடுத்துப் பெறவேண்டும்.

இப்பத்திரிகையின் சந்தாதாரர்களுக்கு எங்களுடைய புத்தகங்கள் குறைந்தவிலைக்கு அனுப்பப்படுதலால், இப்பத்திரிகை வாங்குவார்க்கு எப்பொழுதும் நஷ்டமில்லை.

To Advertisers

With a view to place our Journal within the easy reach of all classes of advertisers, the following rates will be charged :—

Advertisement Rates

	1 Month Rs. A. P.	3 Months R. A. P.	6 Months Rs. A. P.	1 Year. Rs. A. P.
Full page	8 0 0	20 0 0	36 0 0	60 0 0
Half a page	4 8 0	12 0 0	20 0 0	36 0 0
Quarter page	2 8 0	6 0 0	10 0 0	20 0 0

Note :—Special rates for the cover pages, insets and advertisements next to reading matter.

Advertisements to appear in the next number of "**Viveka Bodhini**" should reach the office not later than the 10th of the month.

Payments :—No contract advertisements will be inserted, unless accompanied with remittance of 3 months' charges in advance. A voucher copy of our "Viveka Bodhini" will be sent only to those advertisers who pay not less than Rs. 7 per quarter.

Further particulars on application to:—

THE MANAGER, THE "VIVEKA BODHINI", Mylapore, Madras

Printed at the Guardian Press, and Published by The General Supplies Co., Mylapore, Madras, S.